# HARTI



## වාර්ෂික වාර්තාව

## வருடாந்த அறிக்கை

## ANNUAL REPORT

## 2014


හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවිකටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute

# HARTI

## நிருவாக அறிக்கை - 2014

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்
இலக்கம் 114, விஜேராம மாவத்தை, கொழும்பு 07

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தாபிப்பு | 1 |
| பணிப்பாளர்கள் சபை | 4-5 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 6 |
| பொதுவான கண்கோட்டம் | 7-10 |
| விவசாய வள முகாமைத்துவம் | 11-23 |
| விவசாயக் கொள்கைகள் மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டுப் பிரிவு | 24-40 |
| சுற்றாடல் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு | 41-46 |
| சந்தைப்படுத்தல் உணவு சார் கொள்கை விவசாய வர்த்தகப் பிரிவு | 47-56 |
| மனித வளங்கள் நிறுவன சார் அபிவிருத்திப் பிரிவு | 57-69 |
| ஏனைய செயற்பாடுகள் | 70-75 |
| தரவுகள் தகவல் முகாமைத்துவப் பிரிவு | 76-79 |
| நூலகம் | 80-82 |
| வெளியீட்டுப் பிரிவு | 83-84 |
| **நிறுவனசார் சம்பாத்தியங்கள்** | 85-86 |
| 2014 திசம்பர் 31 இற்கான ஆளணி நிலை பற்றிய விபரம் | 87 |
| பதவியணி அபிவிருத்தி | 88-94 |
| நிதிசார் கணக்குகள் | 95-108 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை -14(2)(இ) | 109-123 |

# தாபிப்பு

ஹெக்டெர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் (HARTI) 1972 இன் 05 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகச் சட்டத்தின் கீழ் 1972 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்த நிறுவகம் கமத்தொழில் அமைச்சின் கீழ் ஒரு நியதிச் சட்ட சபையாக இயங்கி வருகின்றது. இந்த நிறுவகம் முக்கியமாக விவசாயம் மற்றும் கிராமியத் துறை ஆகியவற்றுக்கான ஆராய்ச்சி பயிற்சி ஆகிய விடயங்களின் அடிப்படையிலான கொள்கையை மேம்படுத்தும் நிமித்தம் தாபிக்கப்பட்டது. நாட்டில் விவசாய ஆராய்ச்சி நடவடிக்கையில் ஒரு முன்னோடி நிறுவனமாக விளங்குகின்ற இந்த HARTI நிறுவகம் அது 1972 ஆம் ஆண்டு தாபிப்புப் பெற்றது முதல் முப்பத்து ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக சமூகப் பொருளாதார ஆராய்ச்சி பயிற்சி விடயங்களை அறிமுகப் படுத்தியும் அதே நேரம் விவசாயத் துறையின் அபிவிருத்தி சார்ந்த கொள்கைகளை வகுத்தமைக்க தகவல்களை வழங்கியும் கணிசமானளவு அனுபவத்தைப் பெற்றுள்ளது.

## கட்டாயக் குறிக்கோள்கள்

மேற்குறித்த சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவகத்தின் பொதுவான கட்டாயக் குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்படும்:

i. *விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளை வளர்த்துப் போஷித்தல், அவற்றுக்கு உதவுதல், அந்த நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் ஒத்துழைப்புடன் தொழிற்படுதல்.*

ii. *அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள், அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விவசாய ஆராய்ச்சி சார்ந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.*

iii. *விவசாய அபிவிருத்தியை பாதிக்கின்ற நிறுவனசார் காரணிகள் தொடர்பான ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்ளுதல்.*

iv. *விவசாய நோக்கங்களின் நிமித்தம் காணியின் சிக்கனமாக பாவனை பற்றிய ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் என்பவற்றை மேற்கொள்ளுதல்.*

v. *விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி சம்பந்தமான சமூகப் பொருளாதார ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.*

vi. *இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து அல்லது தனியாக விவசாய ஆராய்ச்சி சம்பந்தமான பயிற்சி சார்ந்த செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை மேற்கொண்டு அல்லது செயற்படுத்தி குறித்த இந்த விடயங்கள் தொடர்பில் டிப்ளோமா பட்டங்கள், பட்டங்கள், பிரிசில்கள் மற்றும் மதிப்பு விருதுகள்*

*என்பவற்றை வழங்குதல்.*

vii. *உள்நாட்டு, பிராந்திய சர்வதேச மட்டங்களில் மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் வேலையரங்குகள் என்பவற்றை நடத்துவதற்கு அனுசரணையை வழங்குதல்.*

viii. *ஆசிய நாடுகளின் ஒத்துழைப்புடன் அந்த நாடுகளின் பிராந்திய ரீதியான தேவைகயைப் பூர்த்திசெய்துகொள்ளும் பொருட்டு விவசாயக் கட்டமைப்பு பற்றிய பிரச்சினைகள் தொடர்பான அத்தகைய ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கும் மற்றும் தகவல்களைப் பரப்புவதற்கும் தேவையான ஒரு நிலைய வசதியைப் பெற்றுக்கொடுத்தல்.*

ix. *பொதுவாக இலங்கைக்கும் மற்றும் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் விஷேட குறிப்புடன் விவசாய அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் விடயங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுடன் அத்தகைய ஆராய்ச்சி நடவடிக்கைகளை தொடர்புபடச் செய்தல்.*

### தூரநோக்கு

நிலையான விவசாய கிராமிய அபிவிருத்தி தொடர்பான அறிவை வளர்த்து அந்த அறிவைப் பரப்புவதற்கான முன்னோடி நிறுவனமாகத் திகழ்தல்.

### செயற்பணி

ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்பன சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளுவதன் ஊடாக விவசாயத்தையும் கிராமியத் துறையையும் வலுப்படுத்துதல்.

### குறிக்கோள்கள்

i. *விவசாயம் சார்ந்த பிரச்சினைகளுக்கு சமூகப் பொருளாதார ஆராய்ச்சியில் சிறந்த ஒரு நிலையமாக விளங்குதல்.*

ii. *அரசாங்கத்தினதும் மற்றும் வர்த்தக ஆராய்ச்சி சமூகங்களினதும் கொள்கை ஆக்குநர்கள் மற்றும் திட்டமிடலாளர் ஆகிய தரப்புகளுடன் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணிச்செல்லல்.*

iii. *கொள்கை வகுத்தமைத்தல், செயற்படுத்துதல் சம்பந்தமான நடபடிமுறை அறிவை வளர்த்தல், உரிய நேரத்திற்கு தகவல்களைப் பரப்புதல் ஆகிய நடவடிக்கைகளின் ஊடாக மிகப் பயனுள்ள விடயமாக ஆக்குதல்.*

iv. *தேசிய கொள்கை விடயங்கள் தொடர்பான சுயாதீன மதிப்பீடுகளை ஏற்பாடு செய்து வழங்குவதன் மூலம் பொது மக்களை விழிப்பூட்டுதல்.*

v. *நிறுவகத்தின் அறிவு மற்றும் அதன் பதவியணியின் ஆற்றல்கள் என்பவற்றின் அடிப்படையில் முதலீடு செய்து சமூகப் பொருளாதாரப் பகுப்பாய்வுக்கான ஆற்றல்களை வலுப்படுத்துதல்.*

vi. *கிராமிய அபிவிருத்தியில் அக்கறையுடைய தரப்புகளின் ஆற்றல்களை பயிற்சியின் ஊடாக அதிகரித்தல்.*

**பணிப்பாளர்கள் சபை**

| | |
|---|---|
| திரு ஆர்.எம்.டீ.பீ. மீகஸ்முல்ல தலைவர் - பணிப்பாளர்கள் சபை | செயலாளர், கமத்தொழில் அமைச்சு |
| திரு இ.எம். அபேரத்ன - பணிப்பாளர் | பணிப்பாளர், ஹெ.வி.ப.நி. |
| திரு ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்த்தன - சபை உறுப்பினர் | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), கமத்தொழில் அமைச்சு |
| திரு எஸ்.டீ.ஏ.பீ. பொரலஸ்ஸ - சபை உறுப்பினர் | மேலதிகச் செயலாளர் (காணிகள்), காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு |
| திருமதி புஷ்பா வெல்லப்பிலி - சபை உறுப்பினர் | திறைசேரிக்கான பிரதிச் செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு (யூன் மாதம் வரை) |
| திரு எம்.ஆர்.வி.ஆர். மீபுர - சபை உறுப்பினர் | பணிப்பாளர், பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு (திசம்பர் மாதம் வரை) |
| கலாநிதி டீ.எஸ்.ஏ. விஜேசுந்தர - சபை உறுப்பினர் | பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் |
| திரு எம்.சி. கமகே - சபை உறுப்பினர் | பணிப்பாளர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு |
| திரு ஜி.டீ.டப்ளியூ. ஜயவர்த்தன - சபை உறுப்பினர் | மேலதிகச் செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு (யூலை மாதம் வரை) |
| திரு டப்ளியூ.ஏ.எஸ். இரோஷான் - சபை உறுப்பினர் | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்), பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு (ஆகஸ்ட் மாதம் முதல்) |
| கலாநிதி (திருமதி) எல்.டப்ளியூ.ஆர். டீ அல்விஸ் - சபை உறுப்பினர் | சிரேஷ்ட விரிவுரையாளர், வாழ்க்கைத்தொழில் கல்வித் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு |
| திரு டீ.டீ. ஆரியரத்ன - சபை உறுப்பினர் | பணிப்பாளர் (திட்டமிடல்), நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு (ஆகஸ்ட் வரை) |
| திரு ஜே.எம். மங்கலதிஸ்ஸ - சபை உறுப்பினர் | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்), கூட்டுறவு மற்றும் |

| | |
|---|---|
| | உள்ளக வர்த்க அமைச்சு |
| திரு எச். அமரதுங்க - சபை உறுப்பினர் | பணிப்பாளர், நிதிப் புலனாய்வுப் பிரிவு, இலங்கை மத்திய வங்கி |
| பேராசிரியர் ரன்ஜித் சேனாரத்ன - சபை உறுப்பினர் | உப வேந்தர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு |
| கலாநிதி ஆர்.ஆர்.ஏ. விஜேகோன் - சபை உறுப்பினர் | விவசாயப் பணிப்பாளர் நாயகம் |
| திரு ஆர்.பி.ஆர். ராஜபகஷ | காணி ஆணையாளர் நாயகம் |
| திரு எம்.ஏ.எஸ். வீரசிங்க - சபை உறுப்பினர் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| பொறியியலாளர் திருமதி பத்ரா கமலதாச - சபை உறுப்பினர் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் |
| திரு டப்ளியூ.எச். கருணாரத்ன - சபை உறுப்பினர் | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் (யூலை மாதம் வரை) |
| திரு உபுல் சாந்த டீ அல்விஸ் சபை உறுப்பினர் | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் (நவம்பர் மாதம் முதல்) |
| கலாநிதி பிரேமலால் குருப்புஆராச்சி - சபை உறுப்பினர் | உதவிப் பிரதிநிதி (நிகழ்ச்சித்திட்டம்), எப்ஏஓ |
| திருமதி ஐ.பி. பத்திரன - சபை உறுப்பினர் | பதில் செயலாளர், பணிப்பாளர்கள் சபை (சனவரி மாதம் வரை) |
| திருமதி டீ.என். ஹெட்டிஆராச்சி - சபை உறுப்பினர் | பதில் செயலாளர், பணிப்பாளர்கள் சபை (பெப்ருவரி மாதம் முதல்) |

**பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்கள்**

| கூட்டம் நிகழ்ந்த திகதி | பங்குபற்றிய உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|
| 1. 2014 சனவரி 30 | 13 |
| 2. 2014 பெப்ருவரி20 | 08 |
| 3. 2014 மார்ச் 27 | 15 |
| 4. 2014 ஏப்ரல் 29 | 13 |
| 5. 2014 மே 27 | 14 |
| 6. 2014 யூன் 24 | 15 |

| | |
|---|---|
| 7. 2014 யூலை 24 | 10 |
| 8. 2014 ஆகஸ்ட் 26 | 14 |
| 9. 2014 செப்டம்பர் 30 | 09 |
| 10. 2014 ஒற்றோபர் 28 | 11 |
| 11. 2014 நவம்பர் 25 | 13 |
| 12. 2014 திசம்பர் 23 | 12 |

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| | |
|---|---|
| 1. திருமதி புஷ்பா வெல்லப்பிலி - தலைவர் | திறைசேரிக்கான பிரதிச் செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு (யூன் மாதம் வரை) |
| 2. திரு ஏ.எல்.ஏ. அசோக்க சிறிவர்த்தன (உறுப்பினர்) | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), கமத்தொழில் அமைச்சு |
| 3. திரு எம்.சி. கமகே (உறுப்பினர்) | பணிப்பாளர், பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு |
| 4. திருமதி எம்.ஐ. புஷ்பா ஹேமமாலி (அவதானிப்பாளர்) | கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம் |
| 5. திரு டப்ளியூ.கே.எல்.இ. வள்ளவிட்ட (அவதானிப்பாளர்) | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், கமத்தொழில் அமைச்சு |

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

| **கூட்டம் நிகழ்ந்த திகதி** | **பங்குபற்றிய உறுப்பினர் எண்ணிக்கை** |
|---|---|
| 1. 2014 ஏப்ரல் 01 | 02 |
| 2. 2014 ஏப்ரல் 24 | 03 |
| 3. 2014 யூன் 05 | 03 |

### பொதுவான கண்ணோட்டம்

அதிகரித்து வருகின்ற உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்தி, உணவுகள் பாதுகாப்பு, விவசாயிகளின் அதிகரித்த வருமானம் என்பவற்றுடன் தற்போதைய விவசாயக் கொள்கையைக் கருத்திற் கொள்கின்ற போது, ஹெ.வி.ப.நி. இன் வகிபங்கு மிகவும் முக்கியமானதாகும். சமூகப் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினை அடிப்படையிலான ஆராய்ச்சியை மேற்கொள்வதன் மூலம் விவசாயத்திற்கும் மற்றும் கமநல அபிவிருத்திற்குமான தலையீடுகள் சம்பந்தமான தீர்மானங்களை எடுக்கும் வகையில் கொள்கை ஆக்குநர்கள், திட்டமிடலாளர்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டச் செயற்படுத்துநர்கள் ஆகியோருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பது இந்த ஹெ.கொ.ப.நி. முக்கிய தொழிற்பாடுகளின் ஒரு தொழிற்பாடாகும். சந்தை மற்றும் விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தி ஆகியன சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரித்து, அத்தகைய தகவல்களைப் பரம்பச்செய்தல், மாணவர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் போன்ற கொள்கை ஆக்குநர்கள், கல்விமான்கள் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகள் ஆகியோருடன் கருத்தரங்குகள் மற்றும் வேலையரங்குகள் என்பவற்றை நடத்துவதனூடாகவும் மற்றும் வெளியீடுகளை வெளியிடுவதனூடாகவும் ஆராய்ச்சி அனுபவங்கள் மற்றும் அறிவு என்பவற்றைப் பகிர்ந்துகொள்ளல் என்பனவும் இன்றைய விவசாய அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதற்கு மிகவும் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில், ஹெ.வி.ப.நி. விவசாயம் மற்றும் கமநல அபிவிருத்தி ஆகிய பல விடயப் பரப்புகளுடன் தொடர்புடைய பல விடயங்கள் சம்பந்தப்பட்ட 18 ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த ஆய்வுகள் எல்டீஓ காணிகளின் சுயாதீன உரித்துடமைகள், பண்ணை சாராத தொழில்கள் மற்றும் பயிர் பல்லினப்படுத்தல் சார்ந்த ஊக்குவிப்புப் பிரச்சினைகள், இன்றைய நிலவரங்கள் மற்றும் பின்தங்கிய கோழி வளர்ப்புப் பிரச்சினைகள், ஏனைய வயல் பயிர்கள் (ஏ.வ.ப.) துறையின் எளிய பொறிமுறையைப் பாதிக்கின்ற காரணிகள், பாரம்பரிய அரிசி இனங்கள் சந்தைப்படுத்தலின் தற்போதைய நிலவரங்கள், நெல் சந்தைப்படுத்தலிலுள்ள அரசாங்கத்தின் தலையீட்டு அம்சங்கள் முதலியவற்றினது விளைவுகளின் அடிப்படையில் காணப்படுகின்றன. உரிய ஆய்வுகளின் முடிவுகள், விவசாயம் மற்றும் கமநல அபிவிருத்தி முதலிய விடயங்களுடன் சம்பந்தப்பட்ட கொள்கை ஆக்கலுக்கு திட்டவட்டமாகப் பயனளிக்கக்கூடிய தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தமது தகவல் தேவைகளின் அடிப்படையில் பல நிறுவனங்களினால் இந்த ஆராய்ச்சி விடயங்களில் அதிகமான விடயங்கள் முன்மொழியப்பட்டிருந்தன.

இவற்றில் இரண்டு ஆய்வுகள் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (உ.உ.நி. WFP) மற்றும் இயற்கை சமவாயத்திற்கான சர்வதேச ஒன்றியம் (இ.ச.ச.ஒ. IUCN) ஆகியன வழங்கிய வெளிக்கள நிதிகளில் இருந்து முன்னெடுக்கப்பட்டன.

போஷாக்கு நிறைந்த உணவின் ஆகக்குறைந்த செலவைக் (போ.உ.ஆ.செ. - COD) கணிப்பிடுவதற்கான புதிய ஒரு கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக உ.உ.நி. நிதிகளை வழங்கியது. COD கருத்திட்டம் வறுமை மற்றும் உணவு பாதுகாப்பு ஆகியன தொடர்பான பயனுள்ள கொள்கை சார்ந்த தீர்மானங்களை எடுப்பதற்காக உரிய பிரிவுகள் சேகரித்த தகவல்களைப் பகுப்பாய்வுசெய்யும் வகையில் இந்த நிறுவகத்தின் சந்தை ஆராய்ச்சிப் பிரிவுக்கு மேலும் வலு சேர்த்தது. இது தவிர, இந்தக் கருத்திட்டம் உரிய பிரிவின் தொழில்நுட்ப சார் அம்சங்களை அபிவிருத்தி செய்வதற்கு மட்டுமன்றி ஆராய்ச்சியாளர்களினது ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இந்தக் கருத்திட்டம் குறித்த ஆய்வை இணைந்து மேற்கொள்ளும் வகையில் ஹெ.வி.ஆ.ப.நி. நிறுவகத்திற்கும் உ.உ.நி. திட்டத்திற்கும் இடையிலும் ஹெ.வி.ஆ.ப.நி. நிறுவகத்துடன் சம்பந்தப் படுகின்ற குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களம் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தின் போஷாக்குப் பிரிவு போன்ற ஏனைய நிறுவனங்களுக்கும் இடையில் கூட்டுறவை மேம்படுத்துவதற்கும் உதவியாக அமைந்தது. இரண்டு ஆராய்ச்சி ஆய்வுகள் தவிர, குறித்த ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட ஏனைய அனைத்து ஆராய்ச்சி ஆய்வுகளும் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன.

பயிற்சி வழங்களின் அடிப்படையில் இந்த நிறுவகத்தினால் நாட்டிற்கு திருப்தியான ஒரு சேவையை வழங்க முடிந்தது. தமது வகிபங்குகளை வினைத்திறன் வாய்ந்த மற்றும் பயனுள்ள விதத்தில் நிறைவேற்றும் பொருட்டு மனோபாவங்கள், தேவையான திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றை விருத்தி செய்துகொள்ளும் வகையில் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள், ஏனைய அக்கறையுடைய தரப்புகள் போன்ற 4,713 நபர்களுக்காக 56 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்த நிறுவகத்தின் சந்தைத் தகவல் பற்றிய கருத்திட்டத்தினால் ‘6666’ என்ற SMS மொபிடெல் சேவையினூடாக தனது தகவல் பரம்பச்செய்யும் பணியை மேலும் விஸ்தரிக்க முடிந்தது. குறித்த ஆண்டில், 117,554 எண்ணிக்கைக்கும் அதிகமான பயனர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இந்த சேவையைப் பயன்-படுத்தியிருந்தனர். இந்த ‘6666’ என்ற சேவைக்குப் பிரவேசிப்பதில் பயனர்களுக்கு உதவும் பொருட்டு மொபிடெல் சேவைகளை வழங்கும் ஏனைய தரப்புகளுடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் திருப்தியான ஒரு மட்டத்தில் காணப்படுகின்றது.

பழ வர்க்கங்கள் மற்றும் மரக்கறி வகைகள் என்பவற்றை சந்தைப்படுத்தும் போது ஏற்படுகின்ற அறுவடைக்குப்-பின் இழப்புகளைத் தடுக்கும் முறையியல்கள் பற்றி CIRDAP நிலையத்தின் (ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திய ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திற்கான நிலையம்) கூட்டொத்துழைப்பில் ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டமை குறித்த ஆண்டில் சர்வேச முன்னரங்கில் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான ஒரு செயல்நடவடிக்கையாக விளங்குகின்றது. பங்காளதேசம், இந்தியா, மலேசியா மற்றும் பிலிபைன்ஸ் ஆகிய நாடுகளைப் பிரதிநிதிப்படுத்தி நான்கு சர்வதேச நிபுணர்களும் மற்றும் பல நிறுவனங்களைப் பிரதிநிதிப்படுத்தி பல உள்நாட்டு பங்குபற்றுநர்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஏனையவர்களுடன் நிறுவகத்தின் ஆராய்ச்சி ஆய்வுகள் பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு மூன்று உள்நாட்டுக் கருத்தரங்குகளும் / வேலையரங்குகளும் /மாநாடுகளும் நடத்தப்பட்டன. இந்த நிறுவக வளாகத்தில் இலங்கை விவசாயப் பொருளியலாளர்கள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டை நடத்தி கல்விமான்களுக்கு உதவியதன் மூலம் இந்த நிறுவகம் தனது நல்லெண்ணத்தையும் கூட்டுறவையும் நல்கியது.

குறித்த ஆண்டில், விவசாயப் பொருளியல் பற்றிய ஒரு பட்டத்தை இணைந்து வழங்குவதற்காக ஒரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் ஹெ.வி.ஆ.ப.நி. கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. கற்கின்ற அதே வேளையில் நாளாந்த ஹெ.வி.ஆ.ப.நி. தரவுகள் சேகரித்தல் பணியில் ஈடுபடுவதன் மூலம் களத் தரவுகள் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் சமர்ப்பணம் செய்தல் ஆகியன பற்றிய மாணவர்களுக்கான ஒரு செயன்முறை சார்ந்த அடிப்படைப் பயிற்சியை வழங்குவது இந்தப் பயிற்சிப் பாடநெறியின் முக்கியமான ஒரு குறிக்கோளாகும். விவசாயத் துறையிலுள்ள நிறுவனங்களில் இவர்கள் வேலைசெய்வதற்கு அவசியமான திறன்களை விருத்தி செய்வதற்கும் இதன் மூலம் எதிர்பார்க்கின்றது. விடயங்களினதும் மற்றும் தலைப்புகளினதும் இந்த முன்-னாயத்தப் பணியின் கீழ், மொடியூல்களையும் மற்றும் நூல்களையும் தயாரிக்கும் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2015 ஆம் ஆண்டு இறுதியில் முதலாவது தொகுதி மாணவர்களை அனுமதிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இது பட்டங்களையும் மற்றும் சான்றிதழ்களையும் வழங்குவதில் ஒருமுகப்படாத ஹெ.வி.ஆ.ப.நி. சட்டத்தினது ஒரு குறிக்கோளின் பூரணத்துவமாக விளங்குகின்றது.

நிறுவகத்தின் சம்பாத்தியங்கள் 2013 ஆம் ஆண்டில் 25.79 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. இந்த சம்பாத்தியங்கள் 2014 ஆம் ஆண்டில் 26.03 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. தேவையான வசதிகளை சிறந்த முறையில் பராமரித்து, மேம்படுத்தியதன் கரணமாக நிறுவகத்தின் ஹோட்டல்கள்/மாநாட்டு/விரிவுரை மண்டபங்கள் என்பவற்றைப் பயன்படுத்திய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமாகும்.

**இ.எம். அபேரத்ன**
**பணிப்பாளர்**

## விவசாய வள முகாமைத்துவம்

### நிறைவுசெய்யப்பட்ட ஆய்வுகள்

1. ஏ.வ.ப. எளிய உற்பத்திப் பொறிமுறையைப் பாதிக்கின்ற காரணிகளை இனங்காணுதல்

**ஆராய்ச்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திருமதி சர்மினி கே. குமார | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி பி.ஆர். வீரக்கொடி | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு எஸ். ஏபாசிங்க | - | துணை ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் மற்றும் குறிக்கோள்களும்:**

2015 ஆம் ஆண்டளவில், சோளம், சின்ன வெங்காயம், திணை, பாசிப்பயறு, கவ்பி மற்றும் சோயாவரை ஆகிய உணவுப் பயிர்களில் இலங்கையை சுயதேவைப் பூர்த்தி அடையச் செய்வது இதன் குறிக்கோளாகும். எனினும், இந்தப் பயிர்களின் வருடாந்த உற்பத்தி உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய அளவில் இல்லை. இது பாரிய உள்நாட்டு உற்பத்திப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு வருடாந்தத் தேவையில் ஏறக்குறைய 42 வீதமான இத்தகைய உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு மாற்றுவழிமுறையாகக் காணப்படுகின்ற பொறிமுறைக்கான உற்பத்தியும், உற்பத்தித்திறனும் என்ற அடிப்படையில் அடைவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஏ.வ.ப. விநியோகத்தில் கணிசமான ஒரு அதிகரிப்பு அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகின்றது. பண்ணைப் பொறிமுறையானது உற்பத்திச் செலவைக் குறைக்கும் அதே வேளையில் முழு மொத்தத்தில் உற்பத்தித்திறனையும் மற்றும் உற்பத்தியையும் அதிகரிக்கும் என பல ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. பண்ணை சார்ந்த செயற்பாடுகள் தொடர்பான பொறிமுறையானது உள்ளீடுகளின் பிரயோகத்திலுள்ள சிக்கனம், சிறந்த தரமான இயக்கச்செயற்பாடுகள், காலத்திற்கேற்ற செயற்பாடுகள் என்பவற்றின் காரணமாக செலவையும், நேரத்தையும், தொழிலாளர் தேவையையும் மீதப்படுத்துகின்றது.

ஏ.வ.ப. துறையில் பொறிமுறைப்படுத்திய செயற்பாடுகளுக்கான இயந்திராதிகள் கிடைக்கக்கூடியனவாக இருந்தாலும், அவற்றின் செயல்முறை சார்ந்த சாத்தியமும் மற்றும் பயன்பாடும் மட்டுப்பட்டளவில் காணப்படுகின்றன. ஏ.வ.ப. உற்பத்தி எளிய பொறிமுறையைப் பாதிக்கின்ற சமூகப் பொருளாதாரக் காரணி வகைகளை இனங்காண்பதானது சுயதேவைப் பூர்த்தி இலக்கை அடைவதற்கான முயற்சியில் ஒரு முன்னுரிமை விடயமாக இருக்க வேண்டும். ஆகையால், இந்த ஆய்வு நாட்டிலுள்ள ஏ.வ.ப. துறையின் பொறிமுறையாக்கலின் எளிய மட்டத்திற்கான காரணங்களை ஆய்வுசெய்தது.

முடிவுகள்

i. பண்ணைப் பொறிமுறையாக்கல் பற்றிய தீர்மானம், பொறிமுறைப்படுத்திய செயற்பாடுகள் ஏ.வ.ப. பயிர்ச் செய்கையில் எந்தளவுக்கு செயன்முறைப்படுத்தப் படுகின்றன போன்ற விடயங்கள் குறித்த துறையில் பண்ணை முறைமைகளை நிருவகிக்கின்ற முக்கிய பண்புகளாகும் என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

ii. குறித்த ஆய்வின் மூலம் ஏ.வ.ப. உற்பத்தி தொடர்பான இரண்டு பரந்த பண்ணை முறைமை வகுதிகள் கண்டறியப்பட்டன. அதாவது: கிராமிய அடிப்படையிலான ஏ.வ.ப. உற்பத்தி மற்றும் சேனை அடிப்படையிலான ஏ.வ.ப. உற்பத்தி முறைமை என்பனவாகும்.

iii. பண்ணை இயந்திராதிகளைக் கையாளுகின்ற இரண்டு நிறுவனங்கள் காணப் படுகின்றன. பண்ணைப் பொறிமுறைப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நிலையம், பண்ணைப் பொறிமுறைப்படுத்தல் மற்றும் பயிற்சி நிலையம். இந்த இரண்டு நிறுவனங்களும் முறையே தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பரம்பல் ஆகிய விடயங்களைக் கையாளுகின்றன. கடமைகளின் இந்தக் கூறானது குறைந்தளவு கிடைப்புத்தன்மைக்கு வழிவகுத்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு மத்தியில் பண்ணை இயந்திராதிகள் பற்றிய ஒரு பெரும் விழிப்புணர்வின்மை காணப்படும். இது ஏ.வ.ப. உற்பத்தியில் எளிய பண்ணைப் பொறிமுறைப்படுத்தல் அளவுக்குப் பயனாக அமைகின்றது.

iv. ஏ.வ.ப. உற்பத்தி இடங்களைப் பிரதிநிதிப்படுத்தும் பெரும்பான்மை விவசாயிகள் இருந்தாலும் FMRC மற்றும் உள்நாட்டு உற்பத்தித் தரப்புகள் என்பன அறிமுகப் படுத்திய பண்ணை இயந்திராதிகள் இவர்களுக்கு மட்டுப்பட்டளவில் கிடைக்கப்

பெற்றுள்ளன. பெரும்பான்மையான விவசாயிகளுக்கு இத்தகைய இயந்திராதிகள் கிடைக்கப்பெறவில்லை அல்லது ஏ.வ.ப. உற்பத்தியில் ஏற்கெனவே பொறிமுறைப் படுத்திய செயற்பாடுகள் பற்றி அறியாமல் இருக்கின்றனர்.

v. இயந்திராதிகளின் செலவு அதிகம். இயந்திராதிகளின் உற்பத்திக் கொள்ளளவு குறைந்தளவில் காணப்படுவது இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். இந்த செலவு அதிகமானது பாரிய அளவான விவசாயிகளையும்கூட வாங்குவதற்கு இயலாமல் செய்துள்ளது.

vi. மொனராகலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் உயர்துவிழும் நிலங்கள் போன்ற அனுகூலமற்ற நிலப் பண்புகள் பொறிமுறைப்படுத்திய செயற்பாடுகளின் பால் குறைந்தளவான ஊக்குவிப்புகளை வழங்குகின்றன.

vii. ஏ.வ.ப. பண்ணை முறைமையின் பயிர்ச்செய்கை சார்ந்த செயன்முறைகளைப் பொறிமுறைப்படுத்துவதற்கு விவசாயிகள் மத்தியில் பாதகமான மனப்பாங்குகள் காணப்படுகின்றன. வாழ்வாதாரத்திற்காக பயிர்ச்செய்கின்றவர்களிடம் குறித்த இயந்திராதிகளைப் பயன்படுத்துவதற்கான ஊக்கம் காணப்படுவதில்லை. ஏ.வ.ப. உற்பத்தியானது அதன் உற்பத்தியில் இருந்து வருகின்ற இலாப எல்லைகளை அதிகரிப்பதற்கான தொழில் வலுவை பயனுள்ளதாகப் பரிமாறிக் கொண்டு குடும்ப அங்கத்தவர்களைப் பயன்படுத்தும் ஒரு வழிமுறையாக இருப்பது இதற்கான காரணமாகும்.

### சிபாரிசுகள்

பொருத்தமான சரியான பண்ணை இயந்திராதிகளின் அதிகரித்த கிடைப்புத்தன்மையை உறுதிசெய்துகொள்வதற்காக பின்வரும் நடவடிக்கைகள் சிபாரிசு செய்யப்படுகின்றன.

i. குறைகற்ற வினைத்திறன் வாய்ந்த பல நோக்கு சிறு பண்ணை இயந்திராதிகளின் குறைந்த செலவு, உயர் தொழில்நுட்பம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்குமான பண்ணை மட்டத்தில் தழுவக்கூடிய ஆராய்ச்சியில் FMRC படிமுறையைத் துரிதப்படுத்தல்.
ii. பல்கலைக்கழகங்களின் விவசாய பீடங்களும் மற்றும் பொறியியல் பீடங்களும் ஒரேமாதிரியான ஆற்றலுடைய புதிய பொருத்தமான பண்ணை இயந்திராதிகளை உருவாக்குவதில் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
iii. பண்ணை இயந்திராதிகள் தொடர்பில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் வகையில் விவசாயிகளை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு புத்தாக்கம் அளித்தல்.
iv. FMRC பதவியணியை மேம்படச்செய்தல்.
v. பண்ணை இயந்திராதிகளின் விற்பனை பற்றிய விளம்பரத்தை மேற்கொள்ளல்.

பண்ணை இயந்திராதிகளுக்கான விவசாயிகளின் பிரவேசத்தை அதிகரிக்கும் நிமித்தம் பின்வரும் சிபாரிசுகள் முன்மொழியப்படுகின்றன.

i. விவசாயத் திணைக்களம் (வி.தி.) மாவட்ட, மாகாண விவசாய உத்தியோகத்தர்கள் ஊடாக மானிய விலைகளில்/இலகு தவணைக்கட்டணங்களில் விவசாயிகளுக்கு /கமக்காரர் அமைப்புகளுக்கு பண்ணை இயந்திராதிகளைப் பெற்றுக்கொடுப்பதை முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

பண்ணை இயந்திராதிகளின் பயன்பாடு மற்றும் அவற்றின் அனுகூலங்கள் என்பன பற்றி விவசாயிகளை விழிப்பூட்டும் பொருட்டு கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

i. மாவட்ட மற்றும் மாகாண விவசாய உத்தியோகத்தர்களுக்கு அதிகம் அதிகமான வளங்களை ஒதுக்குவதன் மூலம் இயந்திராதிகள் பற்றிய செய்துகாண்பிப்புகளின் ஊடாக தொழில்நுட்பப் பரிமாற்றலை வலுப்படுத்தி, குறைந்த செலவுகள், வினைத் திறன் வாய்ந்த இயந்திராதிகள், பண்ணைப் பொறிமுறைப்படுத்தலின் காரணமாக வரும் உற்பத்தித்திறன் மேம்பாடு என்பன தொடர்பில் விவசாயிகளிடத்தில் சிறந்த விழிப்புணர்வு இருக்கின்றதா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளல்.

ii. விஸ்தரிப்பு சார்ந்த சேவையில் பண்ணைப் பொறிமுறைப்படுத்தல் விடயத்திற்கு புதிதாக வலுசேர்த்து அதனை மேலும் மேம்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு உத்தியோகத்தருக்குமாக நியமிக்கப்படுகின்ற பொறுப்புடைய SMOs களின் ஈடுபாட்டுடன் பண்ணை இயந்திராதிகளின் பாவனை, பராமரிப்பு, அனுகூலங்கள் என்பன தொடர்பில் கமக்காரர் அமைப்புகளின் ஊடாக பயிர்ச்செய்கை காலக் கூட்டங்களின் போது விவசாயிகளுக்கு மத்தியில் முறையான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

iii. FMTC மூலம் நடத்தப்பட்ட முறையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விவசாயப் பொறிமுறைப்படுத்தலில் இலக்காகக்கொள்கின்ற விவசாயிகள் மைய நிகழ்ச்சித் திட்டங்களாக வகுத்தமைத்தல்.

## 2. ஏற்றுமதிச் சந்தையில் மரக்கறி விநியோக/ உற்பத்தித் தரப்புகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் சவால்களும்

ஆராய்ச்சிக் குழு:

| | | |
|---|---|---|
| திரு எஸ் ஏபாசிங்க | - | ஒருங்கிணைப்பு அலுவலர் |
| திருமதி பி.ஆர். வீரக்கொடி | - | துணை ஆராய்ச்சியாளர் |

திருமதி சர்மினி குசும் குமார - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்**

ஏதாவது ஏனைய களப் பயிர்களில் காணப்படுவது போல் தொடர்ச்சியான விலை ஏற்றத் தாழ்வுகளை அறிந்துகொள்வதானது உள்நாட்டு மரக்கறி உற்பத்திற்கான பொதுவான ஒரு சிறப்பம்சமாகும். நாட்டில் காணப்படுகின்ற விவசாய உயிரியல் பல்லினத்தன்மை இத்தகைய பிரச்சினையை வெற்றிகொள்வதற்கான தெரிவுகளில் ஒரு தெரிவாகக் காணப் படுகின்றது. உள்நாட்டில் மரக்கறிகளை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் இந்தப் பல்லினத்தன்மையைப் பிரயோகிப்பதன் மூலம் அதிகளவான மரக்கறிகளை உற்பத்தி செய்து வெற்றிகண்டிருந்தாலும் கூட, உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பின் காரணமாக விவசாய வருமானம் குறைவது விவசாயிகள் எதிர்நோக்குகின்ற ஒரு பிரச்சினையாகும். ஆகையால், ஏற்றுமதி சார்ந்த சந்தைகளுக்கு மேலதிக உற்பத்திகளை விடுவிப்பதானது விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு மாற்றுவழிமுறையாக அமையும். எனினும், ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் கணிசமான அளவில் அபிவிருத்தி அடையவில்லை என்பது ஹெ.வி.ஆ.ப.நி. மேற்கொண்ட ஆய்வு வெளிப்படுத்துகின்றது. மரக்கறி ஏற்றுமதி பெறுமான சங்கிலியின் பல்வேறு கட்டங்களில் நிலவிய குறைபாடுகள் இத்தகைய நிலைமைக்குக் காரணமாக அமைந்துள்ளன. உற்பத்திகளின் தரக் குறைவு, தேவையான அளவை விநியோகிக்கத் தவறுகின்றமை மற்றும் தேவையான நேரத்தில் விநியோகிக்காமை என்பன ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கியுள்ள மூன்று வகையான பிரச்சினைகளாகும். இத்தகைய பிரச்சினைகள் மரக்கறி ஏற்றுமதி பெறுமான சங்கிலியின் ஆரம்ப கட்டங்களில் பெருமளவில் தொடர்புபட்டிருக்கின்றன. மரக்கறிகளை உற்பத்தி செய்யும் தரப்புகள் மற்றும் விநியோகத் தரப்புகள் ஆகிய தரப்புகள் இந்த பிரச்சினைகளை வெற்றிகொள்ளும் வகையில் பங்களிக்க முடியும் என்பது ஆரம்ப கட்டங்களில் இருந்த துல்லியமான தெளிவான காரணங்களாகும். ஆகையால், இந்த ஆய்வு மரக்கறி ஏற்றுமதிப் பெறுமானச் சங்கிலியில் நிலவுகின்ற பலவீனத்திற்கான காரணங்களை ஆராய்வதற்கும் மற்றும் இத்தகைய பலவீனங்களை நிவர்த்திசெய்து கொள்வதற்கான சிபாரிசுகளை முன்மொழிவதற்கும் எத்தனித்துள்ளது. இந்த ஆய்வு நுவரெலியா, பதுளை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

**முடிவுகள்**

i. மரக்கறி உற்பத்தித் தரப்புகளும் மற்றும் விநியோகத் தரப்புகளும் எண்ணற்ற பெறுமானச் சங்கிலிகளில் பங்களித்துள்ளனர் என்பதை முடிவுகள் வெளிப்படுத்தின. ஆய்வுக்காகத் தேர்ந்தெடுத்த பெரும்பான்மையான விவசாயிகள் (63%) திறந்த கள விவசாயிகளாக இருந்தனர். ஏனைய விவசாயிகள் (37%) பச்சை வீட்டுப் பண்ணை முறைமையில் ஈடுபட்டிருந்தனர்.

ii. பெரும்பான்மையான திறந்த கள விவசாயிகளின் (75%) மூலம் விநியோகத் தரப்புகளின் ஊடாக ஏற்றுமதித் தரப்புகளுக்கு வழங்கப்படும் மொத்த உற்பத்தியின் தேர்ந்தெடுத்த பகுதியளவான விநியோகமே மரக்கறி ஏற்றுமதிக் கைத்தொழிலிலுள்ள மிகவும் முக்கியமான ஒரு பெறுமானச் சங்கிலியாகும். விநியோகத் தரப்புகளின் கொள்வனவுக்கான கட்டளையின் பிரகாரம் விநியோகிக்கும் உற்பத்தித் தரப்புகள் விநியோகத் தரப்புகளுக்கான உற்பத்திகளைப் பெற்றுள்ளனர் அல்லது கொள்வனவுத் தரப்பு உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்கு வரும்போது அந்த உற்பத்திகளை அந்த விநியோகத் தரப்புக்கு ஒப்படைத்துள்ளனர். எஞ்சிய உற்பத்திகள் வழமையான சந்தைப்படுத்தல் வலையமைப்பின் ஊடாக திறந்த சந்தைக்குப் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. விவசாயிகளின் உற்பத்திகள் ஏற்றுமதி சார்ந்த சந்தை இலக்கை அடைவதில்லை. அதற்கு இணங்க, விஷேட பயிர்ச்செய்கைச் செயன்முறைகளுக்கு கவனம் செலுத்த அல்லது அறுவடைக்குப் பின்-தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப் படுவதாக இல்லை. விவசாயிகளுக்கு விநியோகத் தரப்புகள் தேவைப்படுத்தும் அளவு அல்லது தேவைப்படும் நேரம் என்பன பற்றியும் அறிவிக்கப்படுவதில்லை. ஆகையால், மரக்கறி ஏற்றுமதிப் பெறுமானச் சங்கிலியில் துல்லியமாக ஈடுபடும் பெரும்பான்மை விவசாயிகள் தரம், அளவு ஆகியன சார்ந்த காரணிகளுக்கும் மற்றும் உரிய கால விநியோகத்திற்கும் அதிகளவு கவனம் செலுத்துவதில்லை. ஆதலால் இவர்களுக்கு அந்தத் தேவைகள் தொடர்பில் போதிய ஒரு புரிந்துணர்வு இருப்பதில்லை. எனினும், இந்த விவசாயிகள் ஏற்றுமதி நோக்கத்திற்காக மரக்கறிகளை விநியோகிப்பதன் மூலம் மேலதிக அல்லது விஷேட நன்மைகளை அடைகின்றனர்.

iii. ஏனைய திறந்த கள விவசாயிகளில் ஒரு சிறு குழுவினர் (12.5%) ஏற்றுமதிக்காக விநியோகிக்கின்றனர். விநியோகத் தரப்புகளுக்கு இவர்களின் உற்பத்தியின் ஒரு பகுதியை விநியோகத் தரப்புகளுக்கு நேரடியாகவும் விநியோகிக்கின்றனர். ஏனைய விவசாயிகள் குழுவினர் (12.5%) அவர்களின் உற்பத்திகளை ஒரு விநியோகத் தரப்பின்

ஊடாக ஏற்றுமதித் தரப்புக்கு விநியோகிக்கின்றனர். மேற்குறித்த குறைபாடுகளும் இத்தகைய பெறுமானச் சங்கிலிகளுக்கு பொதுவானவையாகும்.

iv. விவசாயிகள் பச்சை வீடுகளில் மரக்கறிகளை வளர்த்து விநியோகத் தரப்புகளின் ஊடாக ஏற்றுமதித் தரப்புகளுக்கு தமது உற்பத்தியில் ஒரு பகுதியை விநியோகிப்பது பெறுமானச் சங்கிலியின் இரண்டாவது முக்கிய அம்சமாகும். இந்த விவசாயிகள் பச்சை வீடுகளில் மரக்கறிகளை வளர்த்தாலும், இவர்கள் பூச்சிகள் நீங்கிய தரமான மரக்கறிகளை வளர்க்கத் தவறியுள்ளனர். எனினும், திறந்த கள விவசாயிகளுடன் ஒப்பிடுகின்ற போது இந்த விவசாயிகள் சரியான அளவை விநியோகிப்பதிலும் மற்றும் நடைமுறைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதிலும் வெற்றிகண்டு வருகின்றனர். அநேகமாக ஏனைய வகுதியினர் நச்சுத்தன்மையான மரக்கறிகளை வளர்ப்பதால் அவர்களுடன் ஒப்பிடுகின்ற போது இந்த விவசாயிகள் இவர்களின் உற்பத்திகளுக்கு உயர்ந்த ஒரு விலையைப் பெறுகின்றனர்.

சிபாரிசுகள்

i. மரக்கறிகளின் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு ஏற்றுமதி சார்ந்த சந்தையை விஸ்தரிப்பது கட்டாயமான தேவையாகும். அளவில் போதாக்குறை, தரத்தில் குறைவு முதலியன தொடர்பான பிரச்சினைகளினதும் ஏற்றுமதித் துறைக்கான மரக்கறிகளின் உரிய கால விநியோகம் தொடர்பான பிரச்சினைகளினதும் மூல காரணம் நிச்சயமற்ற ஏற்றுமதிக் கொள்வனவுக் கட்டளைகளாகும்.

   (a) கேள்வியை அதிகரிக்கும் வகையில் ஏற்றுமதிச் சந்தையை விஸ்தரிப்பதன் மூலம் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழிலை நெறிப்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தின் ஆதரவைக் கொண்டு சரியான ஒரு பொறிமுறைத்திட்டம் செயற்படுத்தப்படுதல் வேண்டும். உதாரணமாக, உள்நாட்டு மரக்கறிகள் மற்றும் பெறுமதி சேர்ந்த உற்பத்திகள் ஆகியவற்றுக்கான உள்நாட்டு மற்றும் சர்வதேச கண்காட்சிகளின் ஊடாக உள்நாட்டு மரக்கறிகள் தொடர்பான ஏற்றுமதி சந்தையை ஊக்குவிக்கவும் மற்றும் விஸ்தரிக்கவும் முடியும்.

ii. பச்சை வீட்டு விவசாயத்தை ஊக்குவிப்பது ஏற்றுமதி சார்ந்த சந்தைக்கான மரக்கறிகளின் தரம், தேவையான அளவு, சரியான நேரத்திற்கு விநியோகித்தல் ஆகிய அம்சங்களைப் பேணுவதற்கு மிகப் பொருத்தமான மாற்றுவழிமுறையாக விளங்குகின்றது. அந்த நோக்கத்தின் நிமித்தம், பச்சை வீட்டு விவசாயிகள்

எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும்,இவர்களின் கைத்தொழில்களை ஏற்றுமதியின் ஸ்தலங்களாக மாற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) பச்சை வீடுகளை நிர்மாணிப்பதற்கு உதவிகளை வழங்குவது மட்டுமன்றி பூச்சிநாசினியின் பாவனையைக் குறைத்தல், உயர் தொழில்நுட்பத்தைப் பிரயோகித்தல், விஷேட ஏற்றுமதிச் சந்தை வாய்ப்புகளைக் கண்டறிதல் ஆகிய அம்சங்களில் விவசாயிகளிடத்தில் ஏற்கெனவேயுள்ள ஆற்றலைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் வேண்டும். மேற்குறித்த உள்ளீடுகளையும், மற்றும் தேவையான வசதிகளையும் வழங்கும் வேளையில், ஆய்வில் கண்டறியப்பட்ட முக்கிய பிரச்சினை விடயங்களைத் தீர்த்துவைக்கும் பொருட்டு, பச்சை வீடுகளில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளின் உற்பத்தியை வியாபிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அரசாங்க கருத்திட்டங்களின் ஊடாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

(c) ஏற்றுமதிப் பெறுமானம் சார் சங்கிலியில் உற்பத்தித் தரப்புகளும் மற்றும் ஏற்றுமதித் தரப்புகளும் எதிர்நோக்குகின்ற நிச்சயமற்ற ஏற்றுமதி சார்ந்த கொள்வனவுக் கட்டளைகள் தொடர்பான பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளும் வகையில், மரக்கறிகளைக் களஞ்சியப்படுத்தும் வகையில் ஏற்றுமதித் தரப்புகளை ஊக்குவிப்பதற்கு கடன்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதும், குளிர் அறை வசதிகளை வழங்குவதும் அவசியமாகும்.

குறித்த கைத்தொழிலில் தரம், அளவு, உரிய நேரத்திற்கு விநியோகித்தல் ஆகியன தொடர்பான பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்வதற்கும், அதனால் தொடர் உற்பத்தி-விநியோக-ஏற்றுமதி சார்ந்த பெறுமானச் சங்கிலிகளை உறுதிசெய்து கொள்வதற்கும் பின்வரும் சிபாரிசுகள் முன்வைக்கப்படுகின்றன.

i. வினைத்திறன் வாய்ந்த ரீதியில் புதிய மரக்கறிகளை வாங்கும் வகையில் மரக்கறி விநியோகத் தரப்புகளுக்கும் மற்றும் ஏற்றுமதித் தரப்புகளுக்கும் வசதியளிக்கும் பொருளாதார நிலையங்களை அண்மித்த பகுதிகளில் சில்லறைக் கடைகளை அமைத்தல், கொள்வனவுக் கட்டளைகளுக்கு இணங்க மரக்கறிகளை வாங்கும் வகையில் விநியோகத் தரப்புகளை இயலச்செய்வதற்காக குளிர் அறைகளில்

ஏற்றுமதிக்காக மரக்கறிகளைத் தரம் பிரித்து வைத்தல் ஆகியனவும் சாத்தியமான ஒரு மாற்றுவழிமுறையாக இருக்கலாம். இந்தக் கடைகளின் ஊடாக ப்ளாஸ்டிக் கூடைகளின் பாவனையை ஊக்குவிக்க முடியும். இதனால் உற்பத்திகளின் தரம் உறுதியாகி, அறுவடைக்குப்-பிற்பட்ட-கால இழப்புகளும் குறைவடையும்.

ii. அத்தகையபொருளாதார நிலையங்களிலுள்ள கடை உரிமையாளர்களின் ஊடாக கொள்வனவுக் கட்டளைகளை விடுப்பதன் மூலம் அந்த விவசாயிகளிடம் இருந்து மரக்கறிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நேரடியான ஒரு வழி பிறக்கும். இது ஏற்றுமதிச் சந்தைக்கு தரத்தில் உயர்ந்த புதிய மரக்கரிகளை விநியோகிப்பதற்கு உதவியாக அமையும்.

iii. விவசாயத் திணைக்களம் மரக்கறி உற்பத்தித் தரப்புகளிடம் இருந்து தரத்தில் உயர்ந்த உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு அதிகளவு கவனம் செலுத்த வேண்டும். ஆதலால் புதிய தொழில்நுட்பமும் தரத்தில் உயர்ந்த விதைகளும் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

## 3. கறுவா ஏற்றுமதிச் சந்தையின் தற்போதைய நிலையும் எதிர்கால நன்மைகளும்

**ஆராய்ச்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திருமதி ரசிக்கா விஜேசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ஏ.எஸ்.எம். பெரேரா | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு ஐ.பி.பி.எம். விஜேசிங்க | - | துணை ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

இலங்கையில் தொழிலையும் மற்றும் அந்நியச் செலாவணிகளையும் பொறுத்த வரையில் கறுவா மிகப் பழமை வாய்ந்த முக்கியமான வாசனைப் பொருட்களில் ஒன்றாகும். எழுபதுக்கும் அதிகமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற இலங்கைக் கறுவா (Cinnamomum Blume) 90% வீதமான ஒரு சந்தைப் பங்குடன் ஏற்றுமதிகளில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிலையைத் தக்கவைத்து வருகின்றது. அண்மை காலங்களில், ஏற்றுமதிகளின் பெறுமானத்தைப் பொறுத்த வரையில், நாட்டின் கறுவா உற்பத்திக் கைத்தொழிலானது நிலையான ஒரு வளர்ச்சியைக்

காண்பித்திருந்தாலும், கறுவாவின் ஆண்டு ஏற்றுமதி அளவு தொடர்ச்சியாக ஒரே அளவிலேயே காணப்படுகின்றது. இது கறுவாவின் அலகு விலை அதிகரிக்கும் ஒரு போக்கைச் சுட்டிக்காட்டுகின்றது. மேலும், சர்வதேச சந்தையில் கறுவாவுக்கான கேள்வியில் அதிகரித்து வரும் ஒரு போக்கு இருந்ததாக புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஆகையால், இலங்கைக் கறுவாவுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புகளையும் சந்தைப் பல்லினத்தன்மையையும் மற்றும் கறுவா ஏற்றுமதித் துறையிலுள்ள முக்கிய பிரச்சினைகளையும் இனங்காணும் நோக்கில் இந்த ஆய்வு நீண்டகாலப் போக்கை ஆய்வு செய்து, கறுவாவின் வளர்ச்சி வீதத்தையும் மற்றும் கறுவா ஏற்றுமதிகளின் ஸ்தீரத்தன்மையையும் மதிப்பீடுசெய்துள்ளது.

**முடிவுகள்:**

i. ஏற்றுமதி அடைவுகளைப் பொறுத்த வரையில், கறுவாவின் ஏற்றுமதிப் பங்கு 2007 ஆம் ஆண்டில் 60 வீதமாகக் காணப்பட்டது எனவும், 2012 ஆம் ஆண்டில் மிளகு ஏற்றுமதி சம்பாத்தியத்தில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டதால் அதன் அளவு எல்லையளவில் குறைந்து காணப்பட்டது எனவும் ஆய்வுகளின் முடிவுகள் வெளிப்படுத்தியிருந்தன. மதிப்பீடுகளில் பெற்ற பெறுபேறுகளுக்கு இணங்க, கறுவா ஏற்றுமதி அளவு குறைந்த ஸ்தீரத்தன்மையுடன் வருடாந்தம் 4 வீதத்தினால் அதிகரித்து வருகின்றது.

ii. பட்டைகள், பட்டைத் துண்டுகள், கறுவா சில்லறை விற்பனைப் பொதிகள், தூல் அல்லது துணிக்கை, வெட்டுத் துண்டுகள் மற்றும் கறுவா எண்ணெய் என்பன கறுவா அடிப்படையிலான பிரதான ஏற்றுமதிப் பொருட்களாகும். கறுவா வில்லைகள், கறுவா தேயிலை, கறுவா ஊட்டச் சத்துப் பானம், கறுவா பற் குத்திகள் முதலியன போன்ற ஏனைய உற்பத்திகள் கைத்தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகள் உற்பத்திசெய்து விநியோகிக்கும் உலகலாவிய தரமுடைய கறுவா துணை உற்பத்திகளில் அதிகளவான போட்டி நிலவுவதன் காரணமாக இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே இருந்து வருகின்றது.

iii. கறுவாப் பட்டைகளினதும் கறுவா சில்லறை விற்பனைப் பொதிகளினதும் மொத்த ஏற்றுமதிகள் பங்கு கடந்த இரண்டு தசாப்த காலப் பகுதியில் அதிகரித்துக் காணப்பட்டது. கறுவா ஏற்றுமதி அளவில் அரைவாசிக்கும் அதிகமான பெறுமானம் கறுவாப் பட்டைகளினதும் கறுவா சில்லறை விற்பனைப் பொதிகளினதும் (மொத்தக் கறுவா ஏற்றுமதியில் 20%) ஏற்றுமதிகளில் இருந்து வருகின்றது. கறுவா எண்ணெய் ஏற்றுமதி 14% வீதமாகக் காணப்படுகின்றது. வளர்ச்சி வீதப் பகுப்பாய்வின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுபேறுகளுக்கு இணங்க, ஆக உயர்ந்த வளர்ச்சி வீதம் கறுவா சில்லறை விற்பனைப் பொதிகளின் ஏற்றுமதியில் பதிவாகியுள்ளது.

iv. இன்னும் கறுவாத் தூளை உற்பத்தி செய்வதற்கு இலங்கையின் கறுவா ஏற்றுமதிகள் பதனிடும் கைத்தொழில் உயர்ந்த தொழில்நுட்ப இயந்திராதிகள்

அடங்கிய நன்கு வசதியளிக்கப்பட்ட கைத்தொழிலாக இல்லை. ஆகையால், விலைக்கு வாங்கும் தரப்புகள் கறுவாத் தூளை உற்பத்தி செய்வதற்கு இலங்கையில் இருந்து கறுவா உத்தரவாதத்தைத் தேவைப்படுத்துகின்றன.

v. மிகவும் அபிவிருத்தியடைந்த மூன்று நாடுகளின் (மெக்ஸிகோ, ஐக்கிய அமெரிக்கா, பேரு) கறுவாவுக்கான கேள்வி இலங்கையின் மொத்தக் கறுவா உற்பத்தியில் அரைவாசிக்கும் அதிகமானதாகக் காணப்படுகின்றது. வட அமெரிக்க, தென் அமெரிக்க சந்தைகளுக்கான ஏற்றுமதிகள் வருடாந்தம் 4 வீதத்தினால் அதிகரித்து வருகின்ற அதே வேளையில், ஐரோப்பிய நாடுகள் இலங்கைக் கறுவாவுக்கான தமது கேள்வியை வருடாந்தம் 3 வீதத்தினால் அதிகரித்து வருகின்றன.

vi. ஐரோப்பிய மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியங்களை இலங்கைக் கறுவாவின் விஸ்தரிப்புக்கான முதன்மை சந்தை வாய்ப்புடைய இடங்களாக இனங்-காணலாம். மருந்துப் பொருட்கள் உற்பத்தி போன்ற தமது பெறுமதி சேர்ந்த கைத்தொழில்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தூய கறுவாவுக்கான தேவையை முன்வைக்கின்றன.

vii. கசியாவுடனான அநாவசியப் போட்டி, போதியளவு விநியோகமின்மை, சிலோன் சினமென் லோகோவைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு, பெறுமதி சேர்ந்த கைத்தொழிலை மேம்படுத்துவதில் காணப்படுகின்ற தடைகள், திறமை வாய்ந்த கறுவா தோல் உரியாளர்களின் பற்றாக்குறை, தரக் குறைவான உற்பத்திகள், உள்நாட்டு கறுவா ஏற்றுமதித் தரப்புகளின் அநாவசியமான போட்டி என்பன கறுவா ஏற்றுமதித் துறையில் முக்கிய பிரச்சினைகளாக இனங்காணப்பட்டன.

**சிபாரிசுகள்:**

i. கசியாவிலிருந்து தூய கறுவாவைப் பிரித்தெடுப்பதற்கும் மற்றும் கறுவாவின் உண்மையான பெறுமானத்தை இனங்காண்பதற்குமான ஏற்றுமதி சார்ந்த சந்தை விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

ii. சர்வதேச சந்தை வாய்ப்புகளை இழப்பதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு வருடம் முழுதும் ஏற்றுமதிக்கான கேள்வியில் இருந்து தக்கவைத்துக் கொள்ளும் வகையில் கறுவா உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

iii. தரமான உற்பத்திகளின் ஏற்றுமதிகளை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு இலங்கையின் கறுவா சான்றிதழ் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்றுமதித் தரப்புகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

iv. குறிப்பாக கறுவா வில்லைகள், கறுவா தேயிலை, கறுவா ஊட்டச் சத்துப் பானங்கள் போன்ற பொருட்கள் தொடர்பில் ஏற்கெனவேயிருக்கின்ற பெறுமதி சேர்ந்த உற்பத்திகளுக்கான புதிய சந்தை வாய்ப்புகளையும் மற்றும் விலைக்கு வாங்கும் தரப்புகளின் நடத்தையையும் கண்டறியும் பொருட்டு சர்வதேச ரீதியில் கவர்ச்சியைப் பெறுவதற்கு அரசாங்கம் ஏற்றுமதித் தரப்புகளுக்கு வசதிகளைச்

செய்து வழங்க வேண்டும். மேலும், இந்தப் பெறுமதி சேர்ந்த உற்பத்திகளுக்கான சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுப்பதும் முக்கியமானதாகும்.

v. கறுவா தோல் உரியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக அரசாங்கம் அதிகளவு முதலீடுகளை முதலிடவும், இத்தகைய செயற்பாடுகளுக்கு இளம் சந்ததியினரை ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

vi. தரமான உற்பத்திகளைப் பெறுவதற்கு கறுவா கைத்தொழிலைப் பொறிமுறைப் படுத்தலிலும் மற்றும் நவீனமயப்படுத்தலிலும் முதலிடுவது அவசியமாகும். தரத்தைப் பேணும் வகையில் விவசாயிகளுக்கும், சேகரிப்பாளர்களுக்குமான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதும் முக்கியமானதாகும்.

vii. கறுவாவின் ஏற்றுமதி ஸ்தீர விலைகளுக்கான ஒரு பொறிமுறைத்திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

viii. கறுவா ஏற்றுமதி இலக்குகளை ஊக்குவித்து, பல்லினப்படுத்தும் பொருட்டு முதன்னிலைச் சந்தை வாய்ப்புகளையும் புதிய சந்தைகளையும் இனங்காணுதல் வேண்டும்.

ix. இலங்கைக் கறுவாவுக்கான தனியான ஒரு HS குறியீட்டை அறிமுகப்படுத்த வேண்டும்.

**மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள்**

**1. நெல் பயிர்ச்செய்கை வரையறையின் அடிப்படையில் தாழ் நாட்டு ஈர வலயத்திலுள்ள நெற்காணிகளை வகைப்படுத்துதல் - நிலப் பாவனைத் திட்டமிடல் திணைக்களத்துடனான கூட்டிணைந்த முன்னோடிக் கருத்திட்டம்**

**ஆராய்ச்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திரு ஐ.பி.பி.எம். விஜேசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு சிறிசேன ஹப்புஆராச்சி (LUPPD) | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு நெல்கா விஜேரத்ன (LUPPD) | - | துணை ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

தொழில்நுட்ப மற்றும் சமூகப் பொருளாதார மட்டுப்பாடுகளின் தாக்கத்தினால் தாழ் நாட்டு ஈர வலய நெற் காணிகளின் பயன்பாட்டிலும் முகாமைத்துவத்திலும் மட்டுப்பாடு காணப்படுகின்றது. நெற் காணிகளை மண்ணிரப்பி எடுத்தல், நெற் காணிகள் கைவிடப்படுதல், நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாமை என்பன இந்த வலயத்தில் தற்பொழுதுள்ள முக்கிய பிரச்சினைகளாகும். வடிகாலமைப்பு தொடர்பான பிரச்சினைகள், கடல் நீர் கசிவினால் வரும் உவர்ப்பு, நீர்ப்பாசன முறைமைகளில் இரசாயனப் பதார்த்தங்கள் / கழிவுப்பொருட்கள் சேர்தல், வெள்ளப் பெருக்குகள், நச்சுக்கள், அசிட்டுக்கள்/காரத்தன்மை, சேறு, அரைவாசி சேறுபடிந்த மண்கள், நீர் தேங்கி நிற்கும் பிரச்சினைகள் தொழில்நுட்ப மட்டுப்பாடுகளுக்கான முக்கிய காரணிகளாகும். அதே போன்று, குறைந்த அறுவடை, தொழிலாளர்

பற்றாக்குறை, உரித்துடமை மற்றும் குடியிருப்பாளர் சம்பந்தமான பிரச்சினைகள், இயந்திராதிகளைக் கையாளும் பிரச்சினைகள், உற்பத்தி ஆகுசெலவு அதிகரித்தல் என்பன போன்ற சமூகப் பொருளாதாரக் காரணிகளும் நெற் பயிர்ச் செய்கையில் பாதகமான தாக்கத்தைச் செலுத்தியுள்ளன. நெல் விவசாயிகள் நெற் காணிகளில் வெற்றகரமான முறையில் பயிர்செய்து வருகின்றனர். ஆனாலும், இவர்கள் குறைந்த அறுவடை, ஏனைய பௌதீகத் தடைகள் என்பவற்றை எதிர்நோக்கி வருகின்றனர். ஆகையால், நெற் பயிர்ச் செய்கை வரையறையின் அடிப்படையில் நெற் காணிகள் வகைப்படுத்தல் முறையியலைத் தயாரித்து அறிமுகப்படுத்துவதும் தாழ் நாட்டு ஈர வலயத்திலுள்ள நெல் விவசாயிகளின் சமூகப் பொருளாதாரப் பின்னணிகளை ஆராய்வதும் காலத்திற்கேற்ற தேவையாகும். இந்த ஆய்வு, நிலப் பாவனைக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து நடத்தப் பட்டது.

**விஷேட ஆராய்ச்சிக் குறிக்கோள்கள்:**

i. தாழ் நாட்டு ஈர வலயத்தில் நெற் பயிர்ச் செய்கைக்கான தொழில்நுட்ப மட்டுப்பாடுகளின் அடிப்படையில் நெற் காணிகளை வகைப்படுத்துதல்.
ii. மேற்குறித்த வகைப்படுத்தலுக்கு இணங்க நெற் பயிர்ச் செய்கையின் சமூகப் பொருளாதாரக் காரணிகளினது தாக்கங்கள் பற்றி ஆராய்தல்.
iii. முன்னோடிக் கருத்திட்டப் பிரதேசத்திலுள்ள நெற் காணிகளின் அனுகூலப் பயன்பாட்டிற்கான ஒரு திட்டத்தை முன்மொழிதல்.

**முன்னேற்றம்:**

ஆய்வுக்கான தரவுகள் சேகரிப்புப் பணி நிறைவுசெய்யப்பட்டுள்ளது. தரவுகள் பகுப்பாய்வு, அறிக்கை தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## விவசாயக் கொள்கைகள் மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டுப் பிரிவு நிறைவுசெய்யப்பட்ட ஆய்வுகள்

1. விவசாயத் திணைக்களத்தின் பெண்கள் விவசாய விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மதிப்பீடு

ஆராய்ச்சிக் குழு:

எம்.டீ. சுசிலா லூர்து - ஒருங்கிணைப்பாளர்

நிதியிடும் மூலம்: திரட்டு நிதியம்

**ஆய்வின் நோக்கெல்லையும் குறிக்கோள்களும்**

1970 ஆம் ஆண்டு முதல் நாடாளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பெண்கள் விவசாய விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மதிப்பிடும் பொருட்டும் மற்றும் விவசாயிகளும் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் இனங்கண்டறியும் பொருட்டும் இந்த ஆய்வு அனுராதபுரம், குருனாகல், மொனராகலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டது.

முடிவுகள்

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஏறக்குறைய 92% பெண்களுக்கு மூலப்பொருட்கள் மற்றும் நிதி ஆகியன சார்ந்த உதவிகள் அடங்கலாக உணவு உற்பத்தி (73.3%), எரு உர உற்பத்தி (62%), தோட்ட முகாமைத்துவம் (வீட்டுத் தோட்டம்), தரமான அரிசி பதனிடல் (29.3%) துலியன போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பான பல வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மாதிரி ஆய்வில் உள்ளடங்கும் 44 வீதமான பெண்கள் மாத்திரமே வருமானம் ஈட்டும் செயற்பாடுகளில் (சுய தொழில்) ஈடுபடுகின்றனர். இவர்களில் இருபத்து மூன்று வீதமானோர் உணவு பதனிடும் தொழிலிலும், 18% வீதமானோர் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையிலும், 16% வீதமானனோர் பூந்-தாவர, வெளிநாட்டவர்களைக் கவரும் தாவர வளர்ப்பிலும், 14.5% வீதமானோர் அரிசி பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன சார்ந்த கைத்தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். நான்கு மாவட்டங்களிலும் வசிக்கின்ற பெண்களின் வருமானத்தைக் கருத்திற் கொள்கின்ற போது, அவர்களின் குடும்ப வருமானத்திற்கு அவர்கள் பங்களிப்புச் செய்கின்ற வருமானம் 20.5%. ஆகும். இது தவிர, 31% வீதமானோர், பெண் விவசாயிகள் சங்கங்களில் பங்குபற்றியதன் காரணமாக தமது குடும்ப வாழ்க்கையில் பல்வேறுபட்ட அம்சங்கள் மிகவும் சிறந்த முறையில் மேம்பட்டுள்ளன எனவும், அதே நேரம் 51.7% வீதமானோர் அனைத்து அம்சங்களும் ஓரளவு மேம்பட்டுள்ளன எனவும் தெரிவித்தனர். தீர்மானமெடுப்பதில் சுதந்திரம் இன்மை, ஆபத்தைச் சுமப்பதிலுள்ள கஷ்டம் (82%), கடன் வசதிகள் இல்லாமை (72%), புதிய பயிற்சி வசதிகள் இல்லாமை (45%), சந்தைப்படுத்தல் பிரச்சினைகள், மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ள கஷ்டம் (40%),

உள்நாட்டு மட்டத்தில் தமது உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு பொதுவான ஒரு அமைவிடம் இல்லாமை என்பன பெண் விவசாயிகள் சங்களின் பெண்கள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளாகும். மட்டுப்பாடுடைய நிதியேற்பாடுகள் (நிதி மற்றும் மூலப்பொருட்கள்), கிடைக்கக்கூடிய மட்டுப்பாடுடைய நிதிகளைப் பகிர்ந்தளிக்கும் பிரச்சினைகள் (78%), பெண் விவசாயிகள் என்ற நிகழ்ச்சித்திட்டம் முன்னர் போல் நடைமுறைப்படுத்தப்படாததால் பெண் விவசாயிகள் தொடர்பான பயிற்சிகள் இல்லாது போனமை (67%), புதிய சுய தொழில் முயற்சிகளுக்கான பயிற்சி வசதிகள் இல்லாமை (67%), அதிகளவான வேலைப்பளுக்களினால் சரியாக கண்காணிப்பதிலும் மற்றும் பின்னூட்டலிலும் (63%) காணப்படும் கஷ்டம் என்பன விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளாகும்.

முன்மொழிவுகள்

பெண்களை ஊக்குவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு விஷேட நிகழ்ச்சித் திட்டமாக முன்னர் செயற்படுத்தப்பட்டு வந்த பெண் விவசாயிகள் நிகழ்ச்சித் திட்டம் (கொவி காந்தா) படிப்படியாக ஒரு சாதாரண விவசாய விஸ்தரிப்பு சார்ந்த நிகழ்ச்சித்திட்டமாக மாறியுள்ளது. ஆகையால், பெண் விவசாய நிகழ்ச்சித் திட்டத்திற்கான உத்தியோகத்தர்களும் அதற்காக உருவாக்கப்பட்ட பதவிகளும் இருந்தாலும் கூட, பெண்கள் மற்றும் விஷேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட முன்னைய முன்னை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தற்பொழுது வசதிகள் இல்லை. இன்று, பெண் விவசாயிகளின் சங்கங்களினது செயற்பாடுகள் மாகாண ரீதியில் கிடைக்கும் மாணியங்கள், அரசாங்கத்தின் சம கால பல்வேறுபட்ட கருத்திட்டங்களுக்காக (‘அபி வவமு ரட்ட நகமு’, ‘திவி நெகும’ முதலியன) சர்வதேச நாணய நிதியம் போன்ற அ.சா.நி. ஏனைய முகவராண்மைகள் என்பவற்றினூடாக கிடைக்கப்பெற்ற மானியங்கள் என்பவற்றைக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகையால், பெண் விவசாயிகள் விவசாய விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பெண் விவசாயிகள் சங்கம் என்பன அரசாங்கத்தின் அபிவிருத்தி சார்ந்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற சாதாரண பொறிமுறைகளாக மாறியுள்ளன. பெண்கள் விவசாய விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பெண் விவசாயிகள் சங்கங்கள் என்பன செயன்முறைப் படுத்தப்பட்டதால் கிராமிய மட்டத்தில் வினைத்திறன் வாய்ந்த ஒரு விவசாய விஸ்தரிப்பு சார் நிகழ்ச்சித்திட்டத்தை உறுதிசெய்துகொள்வதற்கு கணிசமானளவு பங்களிப்புகள் கிடைத்துள்ளன. இந்த ஆய்வானது, கிராமிய அபிவிருத்திற்கான அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அதிகளவான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பின்வருவனவற்றை முன்மொழிகின்றது.

i. செயன்முறை சார்ந்த பிரச்சினைகளைத் தவிர்ப்பதன் (விவசாய விஸ்தரிப்பு சேவையினுள் பெண்கள் விவசாய விஸ்தரிப்பு சேவைக்கு முன்னுரிமை அளித்தல், மிகவும் தகுதியுடைய வேலையில்லாப் பட்டதாரிகளை கிராமிய மட்டத்தில் விவசாய விஸ்தரிப்பு சேவையில் ஈடுபடச் செய்தல், போதிய அறிவும் விடய அக்கறையும் உடைய உத்தியோகத்தர்களை மாவட்ட மட்ட

பெண் விவசாயிகள் விடய உத்தியோகத்தர்களாக நியமித்தல்) மூலம் சரியான ஒரு முறையியலைத் தாபித்தல்.

ii. கிராமிய மற்றும் மாவட்ட மட்ட பெண் விவசாய உத்தியோகத்தர்களுக்காக முன்னர் நடத்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மீண்டும் ஆரம்பித்தல்.

iii. நிதிகளை ஒதுக்குதல், உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளித்தல், நிருவாக வசதிகளை வழங்குதல், பெண் விவசாயிகளின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சந்தை வாய்ப்பை வியாபிக்கச்செய்தல் (அருகிலுள்ள நகரங்களில் அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல், அவர்களுக்கு உற்பத்தி, சந்தைப்படுத்தல், சந்தைப்படுத்தும் விதங்கள், சந்தை மாற்றங்கள் என்பன பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்).

## 2. உலர் வலய விவசாயத்திலுள்ள காணி பற்றிய காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் (LDO) சுயாதீன சொத்துரிமைகளின் பலன்கள் - (R/482)

**ஆராய்ச்சிக் குழு:**

திருமதி பீ.ஏ.டீ.எஸ். பமுணுஆராச்சி - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம் :** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழான காணிகளுக்கான அதாவது அந்தக் கட்டளைச் சட்டத்திற்கு அத்தகைய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால், உலர் வலய விவசாயப் பிரிவிலும் மற்றும் விவசாயிகள் மீதும் அதன் தாக்கங்களின் பயனாக சுயாதீன சொத்துரிமைகளில் (FHR) வரும் சாத்தியமான பலன்களைக் கண்டறிவதில் இந்த ஆராய்ச்சி ஒருமுகப்பட்டுக் காணப்படுகின்றது. இலங்கைக்கு புராதன காலத்தில் இருந்து காணி உரித்துடமை முறைமைகளிலும் மற்றும் காணிக் குடியிருப்பு முறைமைகளிலும் தனிப்பட்ட ஒரு அனுபவம் இருக்கின்றது. 1953 ஆம் ஆண்டில் காணிகள் அபிவிருத்திக் கட்டணைச் சட்டம் (LDO) நடைமுறைப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, நீர்ப்பாசனம் செய்த விவசாயம் நன்கு முன்னேற்றகரமான மற்றும் பாரியளவான முறைமையினுள் அபிவிருத்தி கண்டுள்ளது. இந்த முறைமை உலர் வலயத்தில் பொருளாதாரத் தீர்வுகளுக்கான அடித்தளமாக அமைந்தது. ஆரம்பத்தில், காணிகள் விவசாயிகளுக்கு மத்தியில் நிலையான குத்தகை என்ற அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. இன்று, குடியிருப்பாளர்கள் அவர்களின் காணிகளுக்கு சொந்த உறுதிகளைப் பெறுன்றனர். ஆதலால், இதனை இலகுவில் வெளிப்படுத்தி விடமுடியாது. ஆனால், வாரிசு உரிமையாளர்கள் காணிகளைப் பிரித்து வழங்குபவரினால் பெயர்குறிக்கப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்தனர். எனினும், சுயாதீன சொத்துரிமைகள் இன்னும் வழங்கப்படவில்லை. விற்பனை நோக்கத்திற்காக சட்டமுறையில் காணிகளைக் கூறுபோடுவதன் மூலம்

குடியிருப்பு நிலத் துண்டாடுதலைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இன்று, LDO காணி இரண்டாம் அல்லது மூன்றாந்-தலைமுறைக் குடியிருப்பாளர்கள் அதிகமான குடியிருப்புத் திட்டங்களில் குடியிருக்கின்றனர். ஆகையால், ஒவ்வொரு குடியிருப்புத் திட்டத்திலும் ஒரு மேட்டு நிலக் காணித் துண்டும் அதே போன்று ஒரு தாழ் நிலக் காணித் துண்டும் பல எண்ணிக்கையான குடும்பங்களினால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இன்று, முறையற்ற விதங்களில் அதிகாரிகளினது அனுமதியைப் பெற்று, குடும்ப அங்கத்தவர்களுக்கு வெளியால் விவசாயிகள் அல்லாத நபர்களுக்கு காணிகள் உரிமை மாற்றிக் கையளிக்கப் படுகின்றன. மேலும், FHR உரித்துடமை இல்லாமையானது, மக்கள் மத்தியில் உரித்துடமை, எதிர்பார்த்த அளவில் இல்லாத காணி மற்றும் விவசாய உற்பத்தி, காணியின் சந்தை விலையிலுள்ள பெறுமானக் குறைவு, கடனைப் பெற்றுக் கொள்வதிலுள்ள பிரச்சினை என்பன தொடர்பான முரண்பாட்டு விடயங்கள் அடங்கலாக மக்கள் மத்தியில் சமூகப் பிரச்சினைகளையும் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளது என இன்று பொதுவாக நம்பப்படுகின்றது. அரசாங்கக் காணியின் மீதுள்ள FHR கிடைப்புத்தன்மையும் கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றது. இந்த ஆய்வின் விஷேட குறிக்கோள்கள் பின்வருமாறு:

i. LDO காணிகளில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களின் சமூகப் பொருளாதார நன்மைகள் பற்றி ஆராய்தல்.
ii. ஏற்கெனவேயிருக்கின்ற காணி உரிமம் மற்றும் உரித்துடமை என்பன தொடர்பில் குடியிருப்பாளர்களினது கருத்துக்களைக் கண்டறிதல்.
iii. காணி உரிமம் மற்றும் காணி உரித்துடமை என்பவற்றின் மீதுள்ள FHR இன் சாத்தியமான பலன்கள் பற்றி ஆராய்தல்.
iv. கொள்கை சார்ந்த சிபாரிசுகளை முன்வைத்தல்.

ஆரம்பத் தரவுகளைப் பயன்படுத்தி, முன்-கூட்டித் தயாரிக்கப்பட்ட ஒரு வினாக்-கொத்தைப் பிரயோகித்து, தமிழ் பேசும் மக்கள் செறிவாக வாழுகின்ற பிரதேசங்கள் அடங்கலாக கல் ஒயா, பராக்கிராம சமுத்திரம் மினிபே, ராஜாங்கன, மகாவலி 'எச்' வலயம், பாவக்குளம், தப்போவ, உண்ணுச்சை, வவுனிக்குளம் மற்றும் கந்தளாய் ஆகிய பகுதிகளில் ஒரு மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மாதிரியின் அளவு ஐந்நூறாகக் காணப்பட்டது. இதற்கு ஒவ்வொரு குடியிருப்புத் திட்டத்திலிருந்தும் 50 குடியிருப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், முககிய தகவல் தருநர் நேர்காணல்களும் நடத்தப்பட்டன.

**முடிவுகளும் சிபாரிசும்:**

அதிகமான குடியிருப்பாளர்கள் (65%) ஏற்கெனவே சுயாதீன சொத்துரிமைகள் வழங்கப்பட்டுள்ளதாக நம்பியிருக்கின்றனர். அவர்களுக்கு காணி உறுதிகள் இருப்பதால், அத்தகைய உரிமைகள் இல்லை என அவர்கள் அலட்டிக் கொள்வது இல்லை. 36% வீதமானோர் மாத்திரமே காணி உரித்தைக் கோருகின்ற எவரேனும் ஒருவரை அகற்றுவதற்கான அதிகாரம் இல்லை என உணர்கின்றனர். ஆகையால், பெரும்பான்மையானோர் காணிகளில் இருந்து வருமானத்தை ஈட்டுவதற்கு தமக்கு

உரிமை இருப்பதாகவும் (62%), விவசாயம் தவிர்ந்த ஏனைய வருமானம் ஈட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உரிமை இருப்பதாகவும் (61%), ஏனைய நபர்களுக்கு காணி உரிமத்தை மாற்றிக்கொடுப்பதற்கான உரிமை இருப்பதாகவும் (53%), மொத்தத்தில் 52% வீதமானோர் தற்போதுள்ள காணி உரித்துடமையில் திருப்தியடைவதாகவும் உணர்கின்றனர். மாதிரி ஆய்வில் பங்குபற்றிய 9% வீதமானோருக்கு மாத்திரம் காணி உறுதிகள் வழங்கப்பட்டன. அத்தகைய காணி அனுமதிப்பத்திரங்கள் குடும்பப் பிணக்குகளைத் தோற்றுவித்திருந்தன. ஆய்வில் பங்குபற்றிய 1% வீதமானோர் மாத்திரம் இன முரண்பாட்டிற்கு முகம்கொடுத்தனர்.

காணிகள் துண்டாடப்படுவது தொடர்பான வரையறைகளை விதிக்கும் பொருட்டு காணிகளைப் பிரித்து வழங்கும் காணி வாரிசு உரிமையாளர்கள் காணிகளைத் தக்கவைத்துக் கொள்வதால், ஏற்கெனவேயிருக்கின்ற காணி உரித்துடமை வகுதி மிகவும் பொருத்தமான காலத்திற்கேற்றதாகக் காணப்படும். காணிகள் அடகு-வைக்கப்படுவதால் கடனாளிகள் அத்தகைய காணிகளை வாங்க விரும்புவதில்லை. உரித்துடமை பற்றிய வரையறைகள் இல்லாததால், அதிகமான குடியிருப்பாளர்கள் காணிகளற்றவர்களாக மாறுகின்றனர்.

### 3. தோட்ட மைய கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மதிப்பீடு (R/485)

**ஆராய்ச்சிக் குழு:**
திருமதி எச்.எம்.எஸ்.ஜே.எம். ஹிட்டிஹறமு - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**
கோழி வளர்ப்பானது இலங்கையில் கால்நடைகள் வளர்ப்புத் துறையில் துரிதமாக முன்னேறி வருகின்ற பிரிவுகளில் ஒரு பிரிவாகும். இது மிகப் பெரிய கால்நடைகள் வளர்ப்புப் பிரிவாகும். இதில் கோழிகள், வாத்துக்கள், வான்கோழிகள் என்பன அடங்குகின்றன. 2012 ஆம் ஆண்டில் மொத்தக் கோழி வளர்ப்பின் அளவு 14.03 மில்லியனாகக் காணப்பட்டது. மொத்த உற்பத்திற்கான தோட்ட மையக் கோழி வளர்ப்பின் பங்களிப்பு 8 % வீதமாகக் காணப்பட்டது. குடும்ப அல்லது தோட்ட மையக் கோழி வளர்ப்பை உள்நாட்டு ரீதியில் கிடைக்கக்கூடிய தீனி வளங்களைப் பயன்படுத்தியும், குடும்பத் தொழிலாளர்களை ஈடுபடுத்தியும் குடும்பங்களினால் நிருவகிக்கப்படும் சிறியளவான கோழி வளர்ப்பு என வகைப்படுத்தலாம். குடும்ப மையக் கோழி வளர்ப்பானது உணவுப் பாதுகாப்பு, வருமானம், பெண்களுக்கும் மற்றும் சிறுவர்களுக்கும் இலாபத்தை ஈட்டித்தரக்கூடிய தொழில் என்பவற்றுக்காக தனிப்பட்ட விவசாயக் குடும்பங்கள் நிருவகிக்கின்ற ஒரு சிறு கூட்டு கோழி வளர்ப்பு என விவரிக்கப்பட்டது.

தோட்ட மையக் கோழி வளர்ப்புக் கைத்தொழில் பிரதானமாக முட்டைகளின் உற்பத்தியில் ஒருமுகப்பட்டுக் காணப்படும். இது கோழி இறைச்சி உற்பத்தியிலும் அதிக சாத்தியங்களைக் கொண்டுள்ளது. விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களம் (DAPH) தோட்ட மையக் கோழி உற்பத்தியின் பொருத்தப்பாடுகளை பல வழிகளில் இனங்கண்டுள்ளது. அவையாவன: 1. கிராமிய மட்டத்தில் நிலவும் போஷனைப் பற்றாக் குறையைக் குறைத்தல், 2. கிராமியப் பெண்களை ஊக்குவித்து சுதேசிய பாரம்பரிய கோழி வளங்களைப் பாதுகாத்தல். ஆகையால், DAPH தோட்ட மையக் கோழி வளர்ப்புக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு சிறியளவான பல கருத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இலங்கையில் சிறியளவான கோழி வளர்ப்பின் இன்றைய நிலையைக் கண்டறிவது இந்த ஆய்வின் முக்கிய குறிக்கோளாகும். சிறு கோழி வளர்ப்புக் கைத்தொழிலின் சிறப்பம்சங்களை இனங்காணுதல், சிறு விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலைகளை ஆராய்தல், கோழி உற்பத்தியில் காணப்படும் பிரச்சினைகளையும் மற்றும் வரையறைகளையும் இனங்காணுதல், விவசாயக் குடும்பங்களின் போஷனைக்கு தோட்ட மையக் கோழி வளர்ப்பின் பங்களிப்பை மதிப்பிடுதல் என்பன இந்த ஆய்வின் விஷேட குறிக்கோள்களாகும்.

முடிவுகள் :

சிறியளவான கோழி உற்பத்தித் துறையில் 14.2% மாத்திரமான கோழிக் குஞ்சுகளே கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது தவிர, மிகக் குறைந்தளவான கியுனியா, விளையாட்டுப் பச்சி என்ற இனங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. விளையாட்டுப் பச்சிகள் பிரதானமாக நுவரெலியா மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. கியுனியா பச்சிகள் கண்டி மாவட்டத்தில் காணப்படுகின்றன. சிறு அளவில் கோழிகளை வளர்க்கின்ற அநேகமான கோழிப் பண்ணையாளர்கள் வர்தக வகுதி முட்டைக் கோழிக் குஞ்சுகளையும் மற்றும் இறைச்சிக் கோழிக் குஞ்சுகளையும் வாங்கி வளர்க்கின்றனர். வெண்ணிறக் கால் முள்ளுடைய கோழிக் குஞ்சுகள் (29.2%) மற்றும் பழுப்புநிறக் கால் முள்ளுடைய கோழிக் குஞ்சுகள் (23.9%) கோழிப் பண்ணையாளர்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படுகின்ற கோழிக் குஞ்சுகளாகும். இது தவிர, சவர், கொனிஸ், RIR, சில்கி பன்டென் போன்ற கோழிக் குஞ்சு இனங்களையும் கோழிப் பண்ணையாளர்கள் கோழிக் குஞ்சுகளாக வாங்கி சென்று வளர்க்கின்றனர். தரத்தில் சிறந்த கிராமத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற கோழிக் குஞ்சுகளை வாங்குவதில் பண்ணையாளர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அரசாங்கத்தின் மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமும் வர்த்க அளவிலான கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. ஆகையால், கோழிப் பண்ணையாளர்களால் எதிர்கால மீளினப் பெருக்கத்திற்கான சொந்தக் கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடியாத பண்ணையாளர்களாக இருக்கின்றனர். மேலும், பகிர்ந்தளிக்கப்படும் இத்தகைய பச்சிகள் வர்த்தக மீளொழுங்கில் காணப்படுவது போல் அதிக உள்ளீடுகளை அவசியப்படுத்தும். இது தவிர, பகிர்ந்தளிக்கப்படும் சில பச்சிகள் ஒரு வருடத்தில் முட்டை போடுவதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர். இந்த ஆய்வின்

முடிவுகளின் அடிப்படையில், வரையறைகளும் (23.9%) சிபாரிசுகளும் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

பிரச்சினைகள்

1. **அதிக உற்பத்திச் செலவு:** ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகள், தீனிகள், மருந்து என்பவற்றின் விலைகள் மற்றும் கோழிக் கூண்டுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான செலவுகள் என்பன உற்பத்தி ஆகு - செலவுகளில் அடங்குகின்றன. கோழிகளுக்கான தீனிகளைக் கருத்திற் கொள்கின்ற போது, தனியார் துறைக் கம்பனிகளே பிரதான விநியோகத் தரப்புகளாக விளங்குகின்றன. அந்தக் கோழித் தீனிகள் தரத்தில் உயர்ந்தது என்பதால் அதிகமான கோழிப் பண்ணையாளர்கள் அந்தத் தனியார் துறைக் கம்பனிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு விரும்புகின்றனர். கோழிக் குஞ்சுகளை விநியோகிக்கும் அதிகமான கம்பனிகள் தனியார் துறைக் கம்பனிகளாகும். அரசாங்கக் கம்பனிகளும் மற்றும் விநியோகத் தரப்புகளும் குறைந்தளவில் காணப்படுவதால், இந்த நிலைமை தனியார் துறைக் கம்பனிகள் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. பண்ணையாளர்கள் தமது கோழிக் குஞ்சுகளுக்குத் தேவையான மருந்துகளை மருந்துக் கடைகளில் இருந்து வாங்க வேண்டி இருக்கின்றனர். ஆகையால், மருந்துகளுக்கு அதிகளவான பணத்தைச் செலவிடுவதற்கு நேரிடுகின்றது.
2. **பண்ணையாளர்களின் நிதி வறுமை:** கோழிகளை வளர்க்கும் அதிகமான கோழிப் பண்ணையாளர்கள் கோழி வளர்ப்பில் மாத்திரமே ஈடுபட்டு வருகின்றனர். ஒரு சில பண்ணையாளர்கள் அரசாங்க தொழில்களையும் செய்கின்றனர். இவர்கள் கோழி வளர்ப்பை ஒரு மேலதிக வருமான மூலமாக மேற்கொள்கின்றனர். ஆகையால், கோழி வளர்ப்பில் மாத்திரம் ஈடுபடுகின்ற பண்ணையாளர்கள் அதிகளவான நிதிப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் இவர்களது கோழிப் பண்ணைகளை விஸ்தரிப்பதற்கு விரும்புகின்றார்கள், எனினும் நிதி நெருக்கடிகளினால் அவ்வாறு செய்ய முடியாதுள்ளனர்.
3. **சந்தைப்படுத்தல்:** கோழிக் குஞ்சுகள், கோழித் தீனிகள், முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி என்பவற்றுக்கு கட்டுப்பாட்டு விலைகள் ஏதும் கிடையாது. தனியார் துறைக் கம்பனியினது தலையீட்டின் காரணமாக அடிக்கடி அந்த விலைகளில் ஏற்றத்தாழ்வுகள் இடம்பெறுகின்றன. இந்த விலை ஏற்றத்தாழ்வுகள் பண்ணையாளர்கள் தமது உற்பத்திகளை (முட்டைகள், இறைச்சி) விற்பனை செய்யும் போதும், அதே நேரம் தேவையான உள்ளீடுகளை (கோழிக் குஞ்சுகள், தீனிகள்) வாங்கும் போதும் அவர்களைப் பாதிக்கின்றன. மேலும், நடுத்தர அளவிலான தரர்களினது தலையீடும் சிறியளவான கோழிப் பண்ணையாளர்களைப் பாதிக்கின்றது. நாகங்களுக்கு மிகத் தூரத்தில் வசித்து வரும் தரகர்கள் விவசாயிகளிடம் இருந்து அதிக இலாபத்தை கொள்ளையடிக்கின்றனர்.

சில பண்ணையாளர்கள் தனியார் கம்பனிளுடன் கோழிக் குஞ்சுகளை மீள-விற்பனை செய்யும் திட்டத்திற்கு உடன்படுகின்றனர். இதனால் இவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல் வேண்டும். ஆகையால், இந்த உடன்படிக்கை காலப் பகுதியினுள், பண்ணையாளர்களுக்கு அந்த மீள் விற்பனைத் திட்டத்தினால் வெளிவாரியாக ஏனைய நன்மைகளைப் பெற முடியாதுள்ளது.

4. **குறைந்த உற்பத்தித்திறனுக்கு வழிவகுக்கின்ற ஒழுங்கற்ற விஸ்தரிப்புப் பகுதிக் காரணி:** அதிகமான கோழிப் பண்ணையாளர்கள் அவர்களுக்குக் கிடைக்கின்ற விஸ்தரிப்பு சார்ந்த சேவையில் திருப்தி அடைகின்றனர். இவர்களுக்கு அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்து போதியளவான திருப்தியான விஸ்தரிப்பு சேவைகள் கிடைப்பதில்லை. சில அரசாங்க நிறுவனங்கள் கருத்திட்டத்தின் ஆரம்ப கால கட்டத்தில் மாத்திரமே விஸ்தரிப்பு சார்ந்த சேவை வழங்குநர்களாக உதவுகின்றனர். ஆனால், குறித்த கருத்திட்டத்தின் தொடர்தன்மையை உறுதிசெய்து கொள்வதற்கு விவசாயிகளிடம் இருந்து பின்னூட்டலைப் பெறுவதில் அக்கறைகொள்வதில்லை.
5. **விலங்கு உற்பத்தியை குறைக்கும் வேறு உண்ணிகளின் பிரச்சினைகள்:** ஒரு விஸ்தரிப்பு மற்றும் அரை-ஆர்வ முறைமையாக கோழி வளர்ப்பை மேற்கொள்கின்ற கோழிப் பண்ணையாளர்கள் வேறு உண்ணிகளின் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பொருத்தமான கோழிக் கூண்டு வசதிகளில் இல்லாத காரணத்தினால் வேறு உண்ணிகள் கோழிக் குஞ்சுகளைத் தாக்கி அழிக்கின்றன.
6. **சுற்றாடல் பாதிப்புகள்:** கோழி வளர்ப்பு அதிகளவில் காணப்படுகின்ற குருனாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய ஒரு சில மாவட்டங்களில் மழை இல்லாத காலத்தில் அதிகளவு நீர் பற்றாக்குறை காணப்படும். வெப்பத் தாக்கத்தினால் அதிகமான கோழிக் குஞ்சுகள் இறக்கின்றன. வரட்சி காலத்தில் முட்டை உற்பத்தியும் குறைந்துள்ளது.

சிபாரிசுகள்

1. அரசாங்கக் கம்பனிகளினது தலையீடுகளினூடாக தரமான கோழிக் குஞ்சுகளைப் பகிர்ந்தளித்தல், புதிய கோழி வளர்ப்பு நிலையங்களைத் தாபித்தல், குறைந்த விலையில் கோழிக் குஞ்சுகளைப் பகிர்ந்தளித்தல், ஆகக்குறைந்த விலையில் மிருக வைத்தியர்களினூடாக தேவையான மருந்துகளை விநியோகித்தல், அத்தியாவசிய உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் மீது கட்டுப்பாட்டு விலைகளை விதித்தல் என்பன அதிக உற்பத்திச் செலவுப் பிரச்சினைகளுக்கான ஒரு சில தீர்வுகளாகக் காணப்படலாம்.
2. நியாயமான வட்டி வீதத்தில் அரசாங்க நிறுவனங்களினூடாக கடன் வசதிகளை வழங்குதல், குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு நுண்-கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், தேவையான அளவு

மானியங்களை வழங்குதல் என்பன கோழிப் பண்ணையாளர்களின் நிதி வறுமைக்கான சில பரிகார நடவடிக்கைகளாகக் காணப்படலாம்.

3. அரசாங்கத்தின் தலையீட்டினைக் கொண்டு உள்ளீடுகளினதும் மற்றும் உற்பத்திகளினதும் விலைகளைக் கட்டுப்படுத்துவது சந்தைப்படுத்தல் பிரச்சினைக்கான ஒரு தீர்வாக அமையலாம்.

4. புதிய தொழில்நுட்பங்கள் மீதான விஸ்தரிப்பு சேவையை வழங்குதல், தொடர்ச்சியான ஒரு அடிப்படையில் கோழிக் குஞ்சுகளைப் பராமரிக்க அவசியமான தொடர் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல் மற்றும் விஸ்தரிப்பு சார்ந்த சேவை விநியோகத் தரப்புகளாக அரச சார்பற்ற நிறுவனங்களை ஈடுபடச் செய்தல், கோழிப் பண்ணையாளர்களிடம் இருந்து பின்னூட்டலைப் பெறுவதற்கான நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையைப் பிரயோகித்தல், பின்னூட்டல்களினூடாக விஸ்தரிப்பு சார் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல் என்பன விஸ்தரிப்பு சேவை சார்ந்த பிரச்சினைகளுக்கான முக்கிய தீர்வுகளாக அமையலாம்.

5. கோழிக் கூண்டுகளை நிர்மாணிப்பதற்கான உள்ளீட்டு மானியங்களை வழங்குதல், கோழிக் கூண்டுகளை நிர்மாணிப்பதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குதல் என்பன கட்டுப்பாட்டிற்குப் புறம்பான இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையலாம்.

## 4. விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய மதிப்பீடு

**ஆராய்ச்சிக் குழு:**

திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம்:** - திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோளும்:**

இலங்கையின் வட மத்திய, வடமேல், மேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் விவசாயத் திணைக்கள விவசாயத் தொழில்முயற்சிப் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ள கமக்காரர்களுக்கான வியாபார கற்கைப் பாடசாலை (FBS) மற்றும் 'குருஷி சேவா பியச' (KSP) என்பன முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களாக விளங்குகின்றன. இந்தக் கற்கை அனுராதபுரம், பொலன்னறுவை, குருனாகல், பதுளை, மொனராகல், கண்டி, மாத்தளை, புத்தளம், கேகாலை, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுத்த மாதிரி ஒன்றினூடாக மேற்கொள்ளப் பட்டது. வியாபாரக் கற்கைப் பாடசாலைகளிலுள்ள 120 விவசாயத் தொழில் முயற்சியாளர்களில், 74 விவசாயத் தொழில்முயற்சியாளர்கள் இந்தக் கற்கைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பத்து (10) KSP கள் ஆய்வு செய்யப்பட்டன. தரவுகள் சேகரிப்புப் பணிகள் கட்டமைந்த அரை வினாக்கொத்து, முக்கிய நபர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் சம்பவ ஆய்வுகள் என்பவற்றினூடாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. சராசரிகள், சராசரி மாதிரி, வரைபுகள் மற்றும் விகிதாசாரம்

போன்ற புள்ளிவிபரவியல் சாதனங்கள் மாதிரி பயன்பாய்வுக்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

FBS என்பது செயற்பாட்டிலிருந்து கற்கும் ஒரு கல்வி நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் பயனாக, புதிய தொழில்முயற்சியாளர்கள் குறித்த ஆய்வு காலப் பகுதியில் தமக்குப் பொருத்தமான தொழில்முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் தாம் கற்றுக் கொண்ட தமது தொழில்முயற்சி பற்றிய அறிவைப் பிரயோகித்துள்ளனர். இந்த அறிவு மூலப்பொருள் பண்ணைகளை வியாபார ஸ்தாபனங்களாக மாற்றுவதற்கு உதவுகின்றது. KSP விவசாய உள்ளீட்டுகளையும் மற்றும் தொழில்நுட்பங்களையும் வழங்கும் வியாபார நிலையங்களாகத் தாபிக்கப்பட்டது. இது தவிர, தமது சொந்த மூலதனத்தைப் பயன்படுத்தி இந்த விவசாய வியாபார நிலையத்தைக் கொண்டு நடாத்துவதற்கு விவசாயத் திணைக்களத்தினால் விவசாய டிப்ளோமா அல்லது பட்டதாரி ஒருவரும் பயிற்றப்பட்டுள்ளார். விவசாயத் தொழில்முயற்சி சார்ந்த அணுகுமுறைகள், நிலையான மற்றும் வெற்றிகரமான விவசாயத் தொழில் முயற்சியாளர்களைக் கட்டியெழுப்புவதற்கான கொள்கை சார்ந்த சிபாரிசுகளை முன்மொழிந்து அறிவு ஈட்டலினூடாக உள்ளக விடயங்களை வெளிப்படுத்தல் ஆகிய மேற்குறித்த இரண்டு எண்ணக்கருக்களையும் மதிப்பீடு செய்வது குறித்த ஆய்வின் முக்கிய குறிக்கோளாகும். FBS பாடசாலை 36 கமக்காரர் கூட்டங்களை நடத்தி, முக்கியமான சில எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் ஆகியன தொடர்பான பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயப் போதகர்களுக்கு கற்பித்தது.

**முடிவுகளும் சிபாரிசுகளும்:**

விவசாயத் தொழில்முயற்சியாளர்களில், 48% வீதமானவர்கள் ஆண்களாகவும், 52% வீதமானவர்கள் பெண்களாகவும் இருந்தனர். மாதிரி ஆய்வில் 66% வீதத்திற்கும் அதிகமானோர் 40 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தனர். இதில் இளைஞர் ஈடுபாடு ஒரு வீதமாக மாத்திரே காணப்பட்டது. 60% வீதத்திற்கும் அதிகமான விவசாயத் தொழில்முயற்சியாளர்கள் க.பொ.த (சா.த) அல்லது க.பொ.த. (உ.த.) பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளனர். 24% வீதமான தொழில்முயற்சியாளர்கள் மாத்திரம் சமுர்த்தி நன்மை பெறுநர்களாக இருக்கின்றனர். மாதிரி ஆய்வில் பங்குபற்றிய 66% வீதமானவர்களின் பிரதான தொழில் விவசாயத் தொழில் முயற்சியாக இருக்கின்றது. இவர்களில் அதிகமானவர்களின் நிலை வறுமைக்குக் கோட்டிற்கு மேற்பட்டதாக இருந்தது.

அனைத்து KSP உரிமையாளர்களும் விவசாய டிப்ளோமா அல்லது விவசாயப் பட்டதாரிகளாகக் காணப்பட்டனர். தொண்ணூறு வீதமான KSP உரிமையாளர்கள் 35 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கின்றனர். இவர்களில் அனைவரும் (100%) வியாபாரத் தொழில்முயற்சிகளை இயக்குகின்ற போது கமநல சேவை நிலையங்களின் விவசாயப் போதகர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் (100%) தரமான விவசாய உள்ளீடுகளும் மற்றும் விவசாயிகளுக்கு தொழில்நுட்பங்களும் வழங்கப்பட்டன.

மாதிரியில், 55% வீதமான KSP தொழில்முயற்சியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களைக் கொண்டு பயிர்ச் செய்கைக்காக தமது பண்ணைகளைத் திட்டமிடும் வகையில் குறித்த பிரிவில் புதிய விவசாயிகளுக்கு உதவினர். KPS இவர்களில் 60% வீதமானவர்களுக்கு பயிர்ச் செய்கைத் தொழில்நுட்பங்கள் பற்றிய நூல்களும் மற்றும் துண்டுப்பிரசுரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. 80% வீதமான KSP கள் உரப் பாவனை, விதை, இரசாயனப் பதார்த்தங்கள் என்பவற்றை விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகித்தன.

KSP (57%) கள் குறித்த பகுதியின் விவசாயப் போதகர்களைக் கொண்டு, நடுகை மூலப்பொருட்கள், கொம்போஸ்ட் உரம், பயிர்ச் செய்கை சார்ந்த செயன்முறைகள் என்பவற்றின் தர மேம்பாட்டின் நிமித்தம் குறித்த பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடு செய்தன.

விவசாயத் திணைக்களத்திற்கு (வி.தி.) இந்த நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணிக்கும் எந்தவிதமான வகிபங்கும் கிடையாது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான வழிமுறைகளும் கிடையாது. வி.தி. பயிற்சி காலப் பகுதியில் தான் உடன்பட்ட கடன் வசதிகளை வழங்கவில்லை. விவசாயம் பற்றிய தொழில் சார்ந்த அறிவில்லாத தனியார் துறை வர்த்தகர்களுடன் இந்தத் தொழில்முயற்சியாளர்கள் போட்டியிட வேண்டியுள்ளனர்.

கமக்காரர் வியாபாரக் கற்கைப் பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு அதனைக் கண்காணிப்பதற்கான எந்தவித முறைமையையும் கிடையாது. இந்த FBS கள் ஒரு சில உதவியற்ற நபர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. மூலதனம் இல்லாத காரணத்தினால், விவசாய இயந்திராதிகளை விநியோகிக்க முடியாதுள்ளன. சில விவசாயத் தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்குப் பொருத்தமான இடங்கள் இல்லை.

**சிபாரிசுகள்:**

01. குறித்த இரண்டு அணுகுமுறைகளும் காலத்திற்குப் பொருத்தமான அணுகு முறைகளாகும். ஆனால், விவசாயத் தொழில்முயற்சி சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கண்காணிக்கப்படுதல் வேண்டும். மதிப்பாய்வு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் ஒரு தொடர்ச்சியான முறையில் அமைய வேண்டும்.
02. விவசாயத் தொழில்முயற்சியாளர்கள் சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்த்தவாறு சரியான முறையில் இயங்குவதாகவில்லை. ஆகையால், இது புதிய விவசாயிகளைக் கொண்டு மீள்கட்டமைக்கப்படவும் மற்றும் மீளொழுங்கமைக்கப்படவும் வேண்டும்.
03. இந்தக் கருத்திட்டச் செயற்பாடுகள் சிறியளவிலான தொழில்முயற்சிகளாகக் காணப்படுகின்றன. புதிய தொழில்வாய்ப்புகளின் உருவாக்கம், வருமானம் ஈட்டல் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், இந்தத் திட்டம் விவசாயிகள் மீது குறைந்தளவான தாக்கங்களைக் கொண்டுள்ளது. இது பொருளாதார

ரீதியில் பயனுள்ளதும் மற்றும் சமூக ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான வழிகளில் விஸ்தரிக்கப்படுதல் வேண்டும்.

04. விவசாயத் தொழில்முயற்சிகளுக்கான புதிய கடன் வசதிகளின் திட்டங்கள், உள்ளீடுகளுக்கான மானியம் சார் கொள்வனவுத் திட்டங்கள் என்பவற்றை அறிமுகப்படுத்துதல், உத்தியோகபூர்வ சீருடைகளையும் மற்றும் புதிய சந்தை வாய்ப்புள்ள இடங்களை ஏற்பாடுசெய்து வழங்குதல் முக்கியமானதாகும்.

05. சந்தைப்படுத்தலே குறித்த துறையிலுள்ள மிக முக்கிய பிரச்சினையாகும். நகரப் பகுதிகளில் அவர்களின் விவசாய உற்பத்திகளை விளம்பரப்படுத்தும் வகையில் பிரசார நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும்.

மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சி

1. **மகாவலிப் பிரதேசங்களிலுள்ள பண்ணை சாராத தொழில் வாய்ப்புகளின் தற்போதைய நிலையும் எதிர்கால நன்மைகளும் - (R/480)**

ஆராய்ச்சிக் குழு:
கலாநிதி டப்ளியூ.ஏ.ஆர். விக்ரமசிங்க - ஒருங்கிணைப்பாளர்

நிதியிடும் மூலம்: - திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**
உண்மையான காணி விஸ்தரிப்பின் கீழ் காணிகள் முறைசாராத விதத்தில் சிறு துண்டுகளாக வாரிசு உரிமையாளர்களுக்கு பிரித்துப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு வாரிசு உரிமையாளரும் இந்தக் காணிகளில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம். இந்த மறைமுகமான காணிகள் துண்டாடுதல் மகாவலிப் பிரதேசங்களில் குறைந்த வருமானங்களுக்கு வழிவகுக்கின்றது. இந்த வருமானங்கள் அங்குள்ள விவசாயிகளினது தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்குப் போதுமானதாக இல்லை. மகாவலிப் பிரதேசங்களில் காணப்படும் இந்தப் போக்கானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்குப் பங்களிப்பதற்குப் பதிலாக வறுமைக்கு வழிவகுப்பதாக அமையலாம். இந்த மகாவலி முறைமைகள் அங்குள்ள குடியிருப்பாளர்களுக்கு வாழ்வதற்கான வசதி வாய்ப்புகளை வழங்கத் தவறினால், குடியிருப்பாளர்கள் பிரதான நகரங்களில் சிறந்த வாய்ப்பு வசதிகளை நாடி இந்த மகாவலிப் பிரதேசங்களை விட்டு நகர்ந்து விடுவார்கள். மகாவலிக் குடியிருப்புத் திட்டங்களில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ற விதத்தில் தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கான ஆற்றல் மட்டுப்பட்டதாக இருப்பதால், எதிர்கால சந்ததியினர் மக்களின் சாத்தியமான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு தேவையான ஆற்றல்களை வலுப்படுத்த அவசியமான வாய்ப்புக்களை மட்டுப் படுத்தி, அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகளில் இருந்து விலகிச்செல்லலாம் (1999 புள்ளிவிபரம்). தற்பொழுது மகாவலி விவசாயிகள் செயன்முறைப்படுத்தி வருகின்ற வாழ்வாதாரத் திறமுறைகளின் வகைகள் பற்றிய தகவல்கள், இந்த வாழ்வாதாரத் திறமுறைத்திட்டங்களின் பொருத்தப்பாடு, எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான மகாவலி முறைமையின் ஆற்றல் என்பன அபிவிருத்தித் திட்டம் மற்றும் கொள்கை என்பவற்றை வகுத்தமைப்பதில் முக்கியமான அம்சங்களாக விளங்கும்.

மகாவலிப் பிரதேசத்திலுள்ள தற்போது காணப்படுகின்ற தொழில் வாய்ப்புகள், மகாவலிப் பிரதேசத்தில் பண்ணை சாராத தொழில் வாய்ப்புகளை விஸ்தரிக்கும் சாத்தியம் மற்றும் பொருத்தப்பாடு என்பன பற்றி ஆராய்வது குறித்த ஆய்வின் முக்கிய குறிக்கோளாகும்.

(i) மகாவலிப் பிரதேசங்களில் ஏற்கெனவே காணப்படுகின்ற தொழில் வாய்ப்புகளின் வகைகள், தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கைகள் என்பவற்றைக் கண்டறிதல்.

(ii) மகாவலிப் பிரதேசத்தில் தொழில் வாய்ப்பு உருவாக்கத்திற்கும் மற்றும் குடும்ப வருமானத்திற்கும் பண்ணை சாரா தொழில் துறை செய்யும் பங்களிப்பு பற்றி மதிப்பிடுதல்.

(iii) மகாவலிப் பிரதேசத்தில் பண்ணை சாராத தொழில் வாய்ப்புகளில் ஈடுபடும் குடியிருப்பாளர்களைப் பாதிக்கின்ற காரணிகளை இனங்காணுதல்.

(iv) மாகாவலிப் பிரதேசத்தில் பண்ணை சாராத தொழில் வாய்ப்புகளை விஸ்தரிப்பதிலுள்ள சாத்தியம் மற்றும் தடைகள் பற்றி ஆராய்தல்.

**முன்னேற்றம்:**
குறித்த ஆராய்ச்சி 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், அவ்வாறு முடியாத போனதால் காலம் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீடிக்கப்பட்டது. ஆய்வு பற்றிய அறிக்கை தயாரித்தல் விடயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**2. யாழ்ப்பாணக் களப்பு உயிரியல் சுற்றாடலுக்கு வழங்கிய சேவைகளின் பெறுமானம், சுற்றுப்புறக் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கு அந்தக் களப்பு வழங்கிய பங்களிப்பும் ஆகியன பற்றிய மதிப்பீடு - (R/481)**

**ஆராய்ச்சிக் குழு:**
கலாநிதி டப்ளியூ.ஏ.ஆர். விக்ரமசிங்க - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம்:** இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN)

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**
யாழ்ப்பாணக் களப்பிலுள்ள உயிரியல் சுற்றாடல் முறைமைகளைப் பராமரித்து நிருவகிப்பது அந்த உயிரியல் சுற்றாடலின் பொருத்தப்பாட்டை உறுதிசெய்து கொள்வதற்கும் அதே நேரம் அங்கு வசிக்கின்ற மக்களின் வாழ்வாதார நிலைகளை மேம்படுத்துவதற்கும் அத்தியாவசியமானதாகும். ஒரு களப்பு முகாமைத்துவத் திட்டத்தில் மனித (களப்பில் தங்கியிருக்கின்ற மக்கள்) வள முகாமைத்துவம் தொடர்பான ஒரு ஆக்கக்கூறு உள்ளடங்கியிருக்க வேண்டும். ஆகையால், களப்பு உயிரியல் சுற்றாடல்களின் முகாமைத்துவம் ஒரு ஒன்றிணைந்த அல்லது பயனுள்ள அணுகுமுறையைத் தேவைப்படுத்தும்.

அந்தக் களப்பிலுள்ள வள அடிப்படைகளின் அளவு மற்றும் வகை, வளங்களின் பெறுமானங்கள், வள சுரண்டல் வீதங்கள், செயற்படுத்தியுள்ள வித்தியாசமான செயற்பாடுகள் (களப்பின் பயன்பாடுகள்) போன்ற அம்சங்களை உள்ளடக்குகின்ற தற்போதைய நிலை, தற்போதுள்ள பாவனைகளின் பொருத்தப்பாடு, உயிரியல்

சுற்றாடல்களின் பொருத்தப்பாடு தொடர்பான தற்போதைய பயன்பாடுகளின் தாக்கங்கள், அதில் தங்கியிருக்கும் மக்களின் நலன்புரி விடயங்கள், ஏற்கெனவே இருக்கின்ற உயிரியல் சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வள நிருவாக முறைமை என்பன தொடர்பான தகவல் மற்றும் தரவுகளின் அடிப்படையில் ஒரு வளங்கள் முகாமைத்துவம் சார்ந்த திட்டத்தைத் திட்டமிடுவதற்கான ஒரு முற்-தேவைப்பாடு அமைந்திருக்க வேண்டும். எனினும், புள்ளிவிபர நூல்களின் படி, [(அருட்பிரகாசம் - (Arudpragasam), 1974; ஹோப்மென் (Hoffmann), 1982 மற்றும் 1985; அர்ப்போவிசஷ் (Arpowicz), 1985; பொவெல் (Powell), 1984b; சச்சிதானந்தன் (Sachithananthan), 1969; சச்சிதானந்தன் மற்றும் பேரேரா, 1970; செல்வராஜா மற்றும் கொஸ்தா, 1978),] ஒரு களப்பு முகாமைத்துவத் திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்கள் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றன.

களப்பின் உயிரியல் சுற்றாடல் பெறுமானத்தையும் அதில் தங்கியிருக்கும் மக்களின் சமூகப் பொருளாதாரக் குறிப்புகளையும் தயாரித்து, ஆவணமயப்படுத்தல் குறித்த ஆராய்ச்சியின் குறிக்கோளாகும்.

முன்னேற்றம்: இந்த ஆராய்ச்சி 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளது. தரவுகள் சேகரித்தல் மற்றும் பதிதல் ஆகிய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 3. மாத்தறை மாவட்ட கீரைகளினதும் மரக்கறிகளினதும் உற்பத்தியும் மற்றும் சந்தைப்படுத்தலும்

**ஆராய்ச்சிக் குழு:**

கலாநிதி ரீ.ஏ. தர்மரட்ன - ஒருங்கிணைப்பாளர்
திரு ஆர்.என்.எல். ஜயதிஸ்ஸ - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோளும்:**

கீரை மற்றும் மரக்கறி வகைகள் உலகில் பிரபல்லியமானவை. குறிப்பாக இவை இலங்கையில் மிகவும் பிரபல்லியமானவையாகக் காணப்படுகின்றன. இவை விரைவில் வளரும் பயிர்களாகும். நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் இவை அறுவடை செய்யப்படுகின்றன. பொன்னாங்களி, கங்குங், வல்லாரை, தம்பாளை, பசளிக், அகத்தி, பெனலா மற்றும் கொஹில ஆகியன நாட்டில் கிடைக்கக்கூடிய பொதுவான சில முக்கிய மரக்கறி வகைகளாகும். மெல்லிய இலைகள், அதிக பல சந்தர்ப்பங்களில், தண்டுகள் என்பனவும் பச்சையாக அல்லது சமைத்த உணவாக உட்கொள்ளப்படுகின்றன. இந்த மரக்கறி வகைகளில் விற்றமின் 'ஏ' மற்றும் 'சி', இரும்புச் சத்து, கல்சியம், போலிக் அசிட்டு, சமிபாடு அடையச் செய்யும் நார் என்பன அடங்கிய பெறுமதி வாய்ந்த வளங்களாகக் காணப்படுகின்றன. இலை

இன மரக்கறிப் பயிர்ச் செய்கையானது நாட்டின் சில பாகங்களில் விவசாயிகளுக்கு ஒரு இலாபகரமான வர்த்தகமாக அமைகின்றது. எனினும், இந்த மரக்கறி வகைகள் விரைவில் அழியக்கூடியன என்பதால் அறுவடை செய்யப்பட்ட பின்னர், ஒரு சில மணித்தியாலங்களுக்குள் சந்தையில் விற்பனை செய்யப்படுவது அவசியமாகும். மரக்கறிப் பயிர்கள் வழமையாக நகர சுற்றுப்புற உற்பத்திப் பிரதேசங்களிலும் மற்றும் கிராமப் புறங்களிலும் வளர்க்கப்படுகின்றன. இந்த மரக்கறி வகைகளின் நாளாந்த விற்பனைகள் அநேகமாக சிறு நில உரிமையாளர்களான விவசாயிகளுக்கு பெறுமதியான பண வருமானத்தைப் பெற்றுத்தருகின்றது. சில சந்தர்ப்பங்களில், விவசாயக் குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களும் இத்தகைய மரக்கறிப் பயிர்ச் செய்கையிலும் அந்த மரக்கறி வகைகளை சந்தைப்படுத்துவதிலும் ஈடுபடுகின்றனர். இலை-இன அனைத்து வகை மரக்கறிப் பயிர்களும் வழமையாக திறந்த வயல்களில் வளர்க்கப்படுகின்றன. பூச்சி, கிருமி, பீடை என்பவற்றின் தாக்க அளவுகள் சற்றுக் குறைந்தளவில் இருந்தன. இவற்றை பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தி பயனுள்ள விதத்தில் கட்டுப்படுத்த முடியும். பொது மக்கள் தமது உணவில் அடங்கியிருக்கின்ற பூச்சிநாசினி நச்சுத்தன்மையின் ஆபத்தையும், சுற்றாடலையும் பற்றி அவ்வளவு அக்கறைகொள்பவர்களாகக் காணப்படவில்லை. ஆனால், பூச்சிகள், கிருமிகள், மற்றும் பீடைகள் முதலியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பூச்சிநாசினிகளின் தொடர் பாவனையினால் கடந்த 10-15 வருட காலப் பகுதியில் இந்த நிலைமைகள் படிப்படியாக மாறியுள்ளன. நுகர்பவர்கள் அவர்களின் தனிப்பட்ட சுகாதாரத்தையும் சுற்றாடல் தரத்தையும் உணர்வுபூர்வமாக மதித்து வருகின்றனர். நுகர்பவர்களில் சிலர் பூச்சிநாசினிகள் நீங்கிய அல்லது இயற்கையாக வளர்த்தெடுத்த மரக்கறி வகைகளைத் தேவைப்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதிகமான நுகர்பவர்கள் இந்த உற்பத்திகளை அதிக விலை கொடுத்து வாங்குவதற்குத் தயாராக இருக்கின்றனர். இயற்கையாக வளர்ந்ததோ அல்லது இல்லையோ அனைத்து நுகர்பவர்களுக்கும் பாதுகாப்பான மரக்கறி வகைகளைக் கிடைச்செய்ய வேண்டும். ஆனால், இந்தச் செயல் அவ்வளவு இலகுவானதல்ல. நுகர்பவர்கள் விவசாயிகளை குறைந்தளவு பூச்சிநாசினிகளைப் பயன்படுத்துமாறு அழுத்தம் கொடுக்கின்ற அதே நேரத்தில், மறுபுறத்தில் விவசாயிகள் இரசாயனப் பதார்த்தங்களுக்கு அதிகளவில் தணிப்புப் பெறுகின்ற பூச்சிகளுக்கு எதிராகப் போட்டியிடக்கூடிய அதிகளவான தெளி பூச்சி-நாசினிகளைப் பிரயோகிப்பதற்கான அழுத்தத்திற்கு முகம்கொடுத்து வருகின்றனர். ஆகையால், மிகப் பாதுகாப்பான பூச்சிக் கட்டுப்பாட்டு முறையியல்கள் காணப் படுதல் வேண்டும். அதிக விவசாயிகள் குறிப்பாக பாரிய வலைக் கூடாரங்களில், பாதுகாப்பான நிர்மாணங்களின் கீழ் இலை-இன மரக்கறி வகைகளை வளர்ப்பதன் மூலம் இத்தகைய உண்மை அனுபவங்களைக் கண்டுள்ளனர்.

குறித்த பகுதிகளில் சமூகப் பொருளாதார ஆராய்ச்சியை மேற்கொள்ளல் மற்றும் குறித்த அந்தப் பிராந்தியத்தில் இலை-இன மரக்கறி வகைகளைப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு வசதிகளையும் உள்ளீடுகளையும் வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் மற்றும் கொள்கை சார்ந்த சிபாரிசுகளையும் தயாரித்தல் ஆகியன மாத்தறை மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு தேசிய கமக்காரர் வாரத்தை முன்னிட்டு

விவசாய அமைச்சு முன்னெடுத்து நடத்திய ஆய்வின் எதிர்பார்த்த பயனுள்ள பெறுபேறுகளாகும். ஆகையால், மாத்தறைப் பகுதியில் இலை-இன மரக்கறிகளை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் தொடர்பில் உற்பத்தியையும், சந்தைப்படுத்தல் முறைமைகளையும் மீளாய்வு செய்வதும், பகுப்பாய்வு செய்வதும் இந்த ஆய்வின் அடிப்படைக் குறிக்கோளாகும். மரக்கறிப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலைமையைக் கண்டறிதல், உற்பத்தி, சந்தைப்படுத்தல் முறைமை ஆகியன பற்றிய ஒரு பொருளாதாரப் பகுப்பாய்வை மேற்கொள்ளல், விவசாயிகளின் பிரச்சினைகளையும் மற்றும் தடைகளையும் இனங்கண்டறிதல், அவற்றுக்கான தீர்வுகளைக் காணுதல் என்பன இந்த ஆய்வின் விஷேட முக்கிய குறிக்கோள்களாகும்.

முடிவுகளும் சிபாரிசுகளும்:
கமநல சேவை நிலையங்களில் (க.சே.நி.) கள ரீதியான மதிப்பாய்வு நடத்தப்பட்டது. 102 விவசாயிகளிடம் இருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மாவட்டத்திலுள்ள பல விவசாய உத்தியோகத்தர்களுடன் முக்கியமான கலந்துரையாடல்களும் மற்றும் நேர்காணல்களும் நடத்தப்பட்டன.

## சுற்றாடல் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவப் பிரிவு

### நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்

### 1. மாவு ஆறக் கருத்திட்டத்தின் சமூகப் பொருளாதாரத் தாக்கங்கள்

**ஆராய்ச்சிக் குழு:**
திரு ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க (குழுத் தலைவர்)
திரு எச்.ஜே.சி. ஜயசூரிய - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:
கடுமையான வரட்சி நிலைமைகளினால் அடிக்கடி கஷ்டப்படும் மளல ஓயா ஆற்றுப் படுக்கைப் பிரதேசத்திற்கு நீரை வழங்கும் பொருட்டு இந்த மாவு ஆறக் கருத்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டது. நீர்ப்பாசன வசிதிகளின்றி கைவிடப்பட்டுள்ள அம்மாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பகுதிகளில் 1500 ஹெக்டேயர் அளவான நெற் காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்தக் கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப் பட்டது. இலங்கை அரசாங்கம் தனது திரட்டு நிதியத்தில் இருந்து இந்தக் கருத் திட்டத்திற்கு ஏறக்குறைய 600 மில்லியன் ரூபா நிதியை செலவிட்டுள்ளது.

கருத்திட்டத்தினதும் மற்றும் அதன் மூலம் நன்மை பெறுநர்களினதும் சமூகப் பொருளாதாரத் தாக்கங்களை மதிப்பிடு செய்வது இந்தக் குறித்த ஆய்வின் முக்கிய குறிக்கோளாகும்.

இதன் விஷேட குறிக்கோள்கள் பின்வருமாறு:

i. கருத்திட்டப் பிரதேசத்தில் விவசாயம் மற்றும் ஏனைய வாழ்வாதாரங்கள் ஆகியவற்றின் மீது மாவு ஆறக் கருத்திட்டத்தின் தாக்கங்கள் பற்றி ஆராய்தல்.
ii. நன்மை பெறுநர்களின் முழு மொத்த வாழ்க்கை மீது மாவு ஆறக் கருத்திட்டம் கொண்டுள்ள தாக்கங்கள் பற்றி ஆராய்தல்.

முடிவுகள்:

i. சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு பருவ காலங்களின் போது பயிரிடப்படுகின்ற நெற் காணித் துண்டுகள் கருத்திட்டத்தின் பின்னர் 2 வீதத்தில் இருந்து 98 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.
ii. மேட்டுநிலக் காணிகளின் பயிர்ச் செய்கையும் கருத்திட்டத்தின் பின்னர் அதிகரித்துள்ளது. சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரண்டு பருவ காலங்களின் போது பயிரிடப்படுகின்ற மேட்டுநிலங்கள், மாவு ஆறக் கருத் திட்டத்தில் இருந்து நீர் கிடைத் தபின்னர் 7 மடங்குகளால் அதிகரித்துள்ளன.
iii. பிரதான கால்வாயில் இருந்து வரும் நீரை மறித்து சட்டமுறையற்ற விதத்தில் நீர் பெற்றுக்கொள்ளப்படுவதால், கீழருவியில் பயிரிடப்படுகின்ற காணிகள்

பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக, பயிர்ச் செய்கைகள் திட்டமிடல் சாத்தியப்படுவதில்லை.

iv. இரண்டு பருவ காலங்களிலும் அதிகமான நிலங்கள் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படுவதால், மேய்ப்பு நிலங்களுக்கான சாத்தியமில்லை. இதனால் கால்நடைகளை வளர்க்கும் பண்ணையாளர்கள் விலங்குளுக்கான தீனிகளைப் பெறுவதில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

v. அதிகரித்த நீர் கிடைப்புத்தன்மையின் காரணமாக துப்புரவேற்பாட்டு வசதிகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. வீட்டுத் தேவைகளுக்கான நீரை சேகரிப்பதற்கு எடுக்கும் நேரம் குறைந்துள்ளது. இதனால், சேமிப்பாகும் நேரத்தை நன்மை பெறுநர்களுக்கு தமது ஏனைய பயனுள்ள செயற்பாடுகளில் பயன்படுத்த முடிந்துள்ளது.

சிபாரிசுகள்

i. கீழருவிப் பகுதிகளுக்கு நீர் கிடைப்பதை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு, பிரதான கால்வாயினூடாக சட்டமுறையற்ற விதத்தில் நீர் பெற்றுக்கொள்ளப் படுவதை ஒழுங்குறுத்துதல்.

ii. பயிரிடப்படும் காணிகளின் அளவை மேலும் அதிகரிக்கும் பொருட்டு கிளைக் கால்வாய்த் தொகுதிகளைப் புனர்நிர்மாணித்தல்.

iii. கால்நடைகள் வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு மேய்ப்பு நிலங்களைத் தாபிக்கச்செய்தல்.

## 2. அனுராதபுர மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதியைப் பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளின் வருமானப் பல்லினத்தன்மையின் வாய்ப்புகளும் மற்றும் காணப்படும் தடைகளும்

**ஆராய்ச்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க | - | (ஒருங்கிணைப்பாளர்)திருமதி |
| ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஏ.எம்.எஸ். பெரேரா | - | துணை ஆராய்ச்சியாளர் |

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**

வித்தியாசமான விவசாயிகளுக்கு மத்தியில் கால இடைவெளிப் பயன்பாட்டிலுள்ள வித்தியாசத்தில் தாக்கம் செலுத்துகின்ற காரணிகளை ஆராய்வதற்கும், நெல்லைப் பயிரிடும் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய கால இடைவெளியை மதிப்பிடுவதற்கும் பண்ணை சார்ந்ததும் மற்றும் பண்ணை சாராததுமான செயற்பாடுகளின் ஊடாக குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளை ஈடுபடச் செய்வதற்கான சாத்தியங்களையும் மற்றும் தடைகளையும் இனங்கண்டறிவதற்கும் இந்த ஆய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

முடிவுகள்:

i. 90 வீதத்திற்கும் அதிகமான நெல் விவசாயிகள் ஏனைய வருமானம் ஈட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தமக்கு ஓய்வுநேரம் இருப்பதாக வெளிப் படுத்தியுள்ளனர்.
ii. 98 வீதத்திற்கும் அதிகமான நெல் விவசாயிகள் பண்ணை சாராத அல்லது பண்ணை சார்ந்த ஏனைய வருமான மூலங்களில் தமது வருமானத்தைப் பல்லினப்படுத்தியுள்ளனர். 97 வீதத்திற்கும் அதிகமான நெல் விவசாயிகள் தமது வருமானத்தை குறிப்பாக ஏனைய வயல் பயிர் செய்கையில் பண்ணை சாராத வருமானம் ஈட்டும் செயற்பாடுகளில் பல்லினப்படுத்தியுள்ளனர். இதே நேரம் 30 வீதத்திற்கும் அதிகான நெல் விவசாயிகள் தமது வருமானத்தை பண்ணை சாராத வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளில் பல்லினப் படுத்தியுள்ளனர்.
iii. கல்வி மட்டம், வதியும் பகுதி, நீர்ப்பாசனத் திட்டத்தின் வகை, வளங்களின் கிடைப்புத்தன்மை (நிலம், தொழில் மற்றும் மூலதனம்) என்பன வித்தியாசமான விவசாயிகளுக்கு மத்தியில் வருமானப் பல்லினத்தன்மையை நிர்ணயிக்கின்ற முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.
iv. அடிக்கடி ஏற்படும் வரட்சிகள், காட்டு விலங்குகளினால் ஏற்படும் அழிவுகள், போதிய நீர்ப்பாசன வசதிகளின்மை, வளங்களின் பற்றாக்குறை, பாதகமான மனோபாவம், சந்தை சார்ந்த அதிகளவான நிச்சயமற்றதன்மைகள் மற்றும் அறிவின்மை என்பன வருமானப் பல்லினப்படுத்தலுக்கான முக்கிய தடைக் காரணிகளாக இருந்தன.
v. உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி மற்றும் கடன்களுக்கான பிரவேசம் என்பன வருமானப் பல்லினப்படுத்தலுக்கான முக்கிய வாய்ப்புகளாகக் காணப்பட்டன.

சிபாரிசுகள்

i. விவசாயிகள் கல்வி: வருமானப் பல்லினப்படுத்தலிலுள்ள விவசாயிகளின் பாதகமான மனோபாவத்தை மாற்றுவதற்கு உதவும் வருமானப் பல்லினப் படுத்தல் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்குக் கற்பிக்க வேண்டும்.
ii. விவசாயிகளின் திறன்கள் அபிவிருத்தி: பாதிக்கக்கூடிய விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு குறித்த பிரதேசத்தில் போதிய நீர் வளங்கள் வசதி இல்லாத காரணத்தினால், குறிப்பாக பண்ணை சாராத, பண்ணை சார்ந்த செயற்பாடுகளில் குறைந்தளவு நீரை நுகரச் செய்யும் தொழில்நுட்பம் என்பன பற்றிய விவசாயிகளின் திறன்கள் அடிப்படையிலான பிரதியீட்டுத் தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
iii. நிறுவன சார் தலையீடு: உள்ளூராட்சி மன்றங்கள் கூட்டொத்துழைப்புடன் விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்கள் அனுராதபுர மாவட்ட நெல்

விவசாயிகளுக்கு மத்தியில் வருமானப் பல்லினப்படுத்தலை ஊக்குவிப்பதில் தலையீடுசெய்ய வேண்டும்.

### 3. நில்வளாத் திட்டப் பிரதேசத்தில் கைவிடப்பட்டுள்ள நிலங்களை மக்களின் வாழ்வாதார அபிவிருத்திற்கு உற்பத்தித்திறன் வாய்ந்ததாகப் பயன்படுத்துதல்

ஆராய்ச்சிக் குழு:
திரு எச்.ஜே.சி. ஜயசூரிய (ஒருங்கிணைப்பாளர்)
திரு ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க (துணை ஆராய்ச்சியாளர்)

நிதியிடும் மூலம்: திரட்டு நிதியம்

நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:
இந்த ஆய்வு நில்வளாத் திட்டப் பிரதேசத்தில் காணிகள் கைவிடப்படுவதற்கான காரணங்களை அறிந்துகொள்வதற்கும், மக்களின் வாழ்வாதார அபிவிருத்திற்கு அந்தக் காணிகளை பயனுள்ள விதத்தில் மீளப்பயன்படுத்துவதற்கு சாத்தியமான, பொருத்தமான திறமுறைத்திட்டங்களை இனங்கண்டறிவதற்கும் மேற்கொள்ளப் பட்டது.

முடிவுகள்:

1. பின்வரும் விடயங்கள் நில்வளத் திட்டத்தில் காணிகள் கைவிடப்படுவதற்கான முக்கிய காரணிகளாக அமைந்தன:
    a. ஆற்றில் இருந்து செல்லும் நீர் கால்வாயின் மூலம் அருகிலுள்ள வயல் காணிகளுக்கு நீர் செல்வதற்கும், குறிப்பாக வரட்சி காலங்களில் நீரைத் தக்கவைத்துக் கொள்வதற்குமான சரியான முறைமைகள், கட்டமைகள் இல்லாமை.
    b. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கான போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லாத நிலை நீர்ப்பாசனக் கட்டமைப்புகள், வடிகாலமைப்புக் கால்வாய்கள், வெள்ளப்பெருக்குகளைக் கட்டுப்படுத்தும் அணைகள் என்பவற்றின் குறைந்த பராமரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளமை.
    c. மழை காலத்தில் கிடைக்கக்கூடிய மேலதிக நீரைத் தேக்கிவைத்து வரட்சி காலத்தில் பயன்படுத்துவதற்கான கட்டமைப்புகள் (ஆற்றுப் படுகையில் மேல் பகுதியில் மேலதிக நீரைத் தேக்கி வைப்பதற்கான நீர்த்தேக்க வசதிகள்) இல்லாமை.
    d. மண் உவர்ப்புத்தன்மை (கடல் நீர் கலப்பதால்), மண் அசிட்டுத்தன்மை காணப்படுகின்றமை.
    e. குறைந்த வருமானத்தின் விளைவாக விவசாயிகள் நெற் பயிர்ச் செய்கையைத் தவிர்த்தல் மற்றும் நெல் பயிர்ச் செய்கை அவர்களின் அடிப்படை வருமான மூலமாக இல்லாமை.
    f. அதிகரித்த தொழிலாளர் செலவு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை.

g. கொள்கை சார்நத மட்டுப்பாடுகள் மற்றும் விவசாயிகளின் மனோபாவம் சார்ந்த தடைகள் என்பவற்றின் காரணமாக ஏதாவது ஒரு நிலையில் நெல் பயிரிட முடியாதுள்ள காணிகளில்/பிரதேசங்களில் விவசாயிகள் பிரதியீட்டுப் பயிர்களை நடுவதற்கு ஊக்குவிக்கப்படாமை.

2. அசிட்டுத்தன்மையினால் பாதிக்கப்படும் காணிகளின் அளவுகள் பற்றிய சரியான புள்ளிவிபரங்கள் இல்லாமை மற்றும் கடல் மட்டத்திற்குக் கீழ் அமைந்துள்ள காணிகளின் அளவு தீர்மானமெடுப்பதில் ஒரு பிரச்சினையாக மாறியுள்ளமை.

3. அடிக்கடி வரண்டு செல்லும் காணிகளில் அசிட்டுத்தன்மை வளர்வதற்கான சாத்தியத்தை அதிகரிக்கின்ற மற்றும் ஆற்றுப் படுகைப் பிரதேசத்தின் மேற் பாகத்தில் பயிரிடப்படும் காணிகள் வரண்டு செல்லல் என்பன அடங்கலாக ஏனைய பல பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கின்றதும் மற்றும் நீரிறைக்கும் செலவுகளை அதிகரிக்கின்றதுமான கடல் மட்டத்திற்குக் கீழ் அமைந்துள்ள காணிகளின் பயிர்ச் செய்கை நீரிறைக்கும் நிலைக்கு (15 செ.மீ. ஆழம் வரை) வழிவகுத்துள்ளமை.

4. நில்வளாத் திட்டப் பகுதியில் குறிப்பாக கால்நடைப் பண்ணைகள் மற்றும் எருமை மாடுகள் வளர்ப்பு போன்ற கால்நடை வளர்ப்புக்கு அதிக சாத்தியம் காணப்படுகின்றமை. எனினும், 'மேய்ப்புத் தரைகள் கிடைப்புத்தன்மை' பயிர்ச் செய்கை சார் செயற்பாடுகளைக் கொண்டு கால்நடைப் பிரிவுகளை ஒன்றிணைப்பதில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளமை, கால்நடைகளை மேய்ப்பதற்குப் போதியளவு புற்கள் கிடையாமையினால் வரும் சவால்.

சிபாரிசுகள்:

1. மேலருவிப் பகுதி நீர்த்தேக்க நிர்மாணத்திற்கு வசதியளித்தல், நீர்ப்பாசன முறைமையின் இயக்கச்செயற்பாடு, பராமரிப்பு ஆகியவற்றின் நிமித்தம் உரிய நிறுவனங்களுக்குப் போதிய நிதிகளை ஒதுக்குதல், சிறிய அலகுகளாக வயல் மட்டத்தில் நீரிறைப்பதன் மூலம் மேலதிக நீரை அகற்றுவதற்கு வசதியளித்தல், அத்தகைய செயற்பாட்டில் விவசாயிகளை ஊக்கப்படுத்தல், வயல்களில் ஆற்று நீர் உள்வரும் வகையில் வசதியளிப்பதற்கான புதிய நீர் முகாமைத்துவ நிர்மாணங்களை நிர்மாணித்தல், ஏற்கெனவே காணப்படுகின்ற நீர்ப்பாசனக் கட்டமைப்புகளையும் கால்வாய் அணைகளையும் பழுதுபார்த்துப் பராமரித்தல் ஆகியவற்றின் மூலம் முதலில் ஆற்றுப் பகுதியின் ஆரம்ப மேல் பாகத்திலுள்ள காணிகளின் பயிர்ச் செய்கையில் முறையான ஒரு பயிர்ச் செய்கை முறையை/திட்டத்தைப் பின்பற்றி சரியான நீர் முகாமைத்துவ முறைமை தாபிக்கப்பட்டு, அதன் பின்னர் கீழருவிப் பகுதிகளுக்கு நீர் வழிந்தோடச் செய்யப்படுதல் வேண்டும்.

2. குறிப்பாக கீழருவிப் பகுதியிலுள்ள காணிகளில் நெல் நடுகை முறைமையை ஊக்குவிப்பதன் மூலம் மண் சார்ந்த பிரச்சனைகளுக்கும் மற்றும் சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணுதல், பிரச்சினைக்குரிய அத்தகைய மண் நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய கறுவா மற்றும் தென்னை போன்ற

பயிர் இனங்களையும், உவர்ப்புத்தன்மைக்கும் மற்றும் அசிட்டுத்தன்மைக்கும் ஈடுகொடுக்கக்கூடிய நெல் இனங்களையும் பயிரிடுவதை ஊக்குவித்தல், பிரச்சினைக்குரிய மண் நிலைமைகளில் வெற்றிகரமாகப் பிரயோகிக்கக்கூடிய பண்ணை சார்ந்த விஷேட தொழில்நுட்பங்களை ('சர்ஜன்' முறை போன்ற) ஊக்குவித்தல்.

3. பிரதியீட்டுப் பயிர்ச் செய்கையை (இலை-இன மரக்கறி வகைகள், வேர், கிழங்கு, தண்டுகள், காலான்கள், கறுவா, தென்னை முதலியன) ஆரம்பிக்கும் வகையில் விவசாயிகளுக்குப் போதித்தல் மற்றும் விவசாயிகளை ஊக்குவித்தல்.
4. கால்நடைப் பண்ணையுடன் இணைந்த பயிர்ச் செய்கையின் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விழிப்பூட்டுதல், விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை வழங்கி, அத்தகைய செயற்பாடுகளில் அவர்களை ஊக்கப்படுத்தல்.
5. ஆர்வ, அரை ஆர்வ கால்நடைகள்/எருமை மாடுகள் வளர்ப்பு முறைமைகளை ஊக்குவித்தல் மற்றும் பொருத்தமான புல் இனங்களின் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல், தேவையான உதவிகளை வழங்குதல்.

## சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை மற்றும் விவசாய வியாபாரப் பிரிவு

சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கை மற்றும் விவசாய-வியாபாரப் பிரிவு - MFPAD (முன்னைய சந்தைப்படுத்தல் ஆராய்ச்சிப் பிரிவு) தேசிய மட்டத்தில் இயங்கிய வாழ்க்கைச் செலவு மீளாய்வுக் குழுவுக்கு சந்தைப்படுத்தல் தொடர்பான தகவல்களை வழங்கும் பொருட்டு 1979 ஆம் ஆண்டு விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகத்தில் (ARTI) தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து, இந்தப் பிரிவு வழமையாக கொள்கை ஆக்குநர்கள், தொழில்முயற்சியாளர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் ஆகியோருக்கும் மற்றும் தேவையான போது மாணவர்களுக்கும் பொருத்தமான தரவுகளையும், தகவல்களையும் வழங்கி வந்துள்ளது.

மேற்குறித்த விடயத்திற்கு மேலதிகமாக, இந்தப் பிரிவு அரசாங்க நிறுவனங்களுக்கு (வைத்தியசாலைகள், விமானப் படை, இராணுவப் படை, கடற் படை முதலிய) உணவுகளைக் கொள்வனவு செய்யும் வகையில் உணவுகளுக்கான மிகச் சிறந்த விலைகளை நிர்ணயிக்கும் பொருட்டு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினதும், ஜனாதிபதி செயலகத்தினதும் கீழ் இயங்கி வந்த உணவுகள் கொள்வனவு மற்றும் கண்காணிப்பு பற்றிய பிரிவுக்கு விலைகள் தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளது.

1. **உணவுத் தகவல்கள் மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பம்: வழமையான பணி நிகழ்ச்சித்திட்டம்**

**ஆராய்ச்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திருமதி சி.பி. ஹத்துருசிங்க | - | ஒருங்கிணைப்பாளர் |
| திருமதி ரோஹினி ரம்புக்வெல்ல | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திருமதி ஆர்.பி. விதாணபத்திரன | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு துமிந்த பிரியதர்ஷன | - | தணை ஆராய்ச்சியாளர் |
| திரு என்.பி.ஜி. சமந்த | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு இ.ஏ.சி. பிரியங்கர | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திருமதி இந்திக்கா எதிரிசிங்க | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திருமதி சம்பிக்கா ஜயசிங்க | - | துணை ஆராய்ச்சியாளர் |

**உதவியவர்கள்:**

புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்கள் - 03
புள்ளிவிபரவியல் உதவியாளர்கள் - 10
அமைய அடிப்படையிலா ஆய்வாளர்கள் - 28

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

MFPA பிரிவு கொள்கை ஆக்குநர்களுக்கு உரிய நேரத்தில் சரியான தரவுகளையும் தகவல்களையும் வழங்குகின்றது. கொழும்பிலுள்ள 9 சில்லறைச் சந்தைகள் மற்றும்

கொழும்பின் சுற்றுப்புறப் புறக்கோட்டை, தலங்கம, தெமட்டகொட, பொரெல்ல, வெல்லவத்தை, கிருளப்பண, நுகோகொட, கடவத்தை, கிரிபத்கொட, (கொழும்பு) புறக்கோட்டை ஆகிய மொத்த சந்தைகள் என்பவற்றிலிருந்து வழமையாக உணவுப் பொருட்கள் தொடர்பான பொருத்தமான சந்தைப்படுத்தல் தரவுகளும் தகவல்களும் சேகரிக்கப்பட்டன. இது தவிர, அதிகளவில் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் மாவட்டங்களினதும் மற்றும் உணவுப் பொருட்களை நுகர்கின்ற மாவட்டங்களினதும் 28 சந்தைகளிலிருந்தும் இத்தகைய தரவுகளும், தகவல்களும் சேகரிக்கப்பட்டன.

03 புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்கள், 07 புள்ளிவிபரவியல் உதவியாளர்கள் மற்றும் அமைய அடிப்படையிலான 28 ஆய்வாளர்கள் ஆகியோரினால் தரவுகள் சேகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. வெளி இடங்களில் தரவுகளை சேகரிக்கும் பொருட்டு புள்ளிவிபரவியல் உதவியாளர்களும், அமைய அடிப்படையிலான ஆய்வாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

குருனாகல், நிக்கவரெட்டிய, தம்புள்ள, மாத்தளை, அனுராதபுரம், தம்புத்தேகம, பொலன்னறுவை, நுவரெலியா, கண்டி, பதுளை, கெப்பெட்டிபொல, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமாகாராம, மாத்தறை, காலி, களுத்துறை, மொனராகலை, அம்பாந்தோட்டை, தெஹியத்தக்கண்டி, அம்பாறை, புத்தளம், மரதன்கஹமுல்ல, மீகொட மற்றும் நாரஹேன்பிட்ட என்பன 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆய்வில் உள்ளடக்கப்பட்டிருந்த இடங்களாகும். குறித்த ஆண்டின் பிற்பகுதியில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் அமைய அடிப்படையிலான ஆய்வாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இது தவிர, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மொபிட்டல் (6666 ஹொட் லைன்), www.harti.gov.lk என்ற இணையத்தளம் ஆகியவற்றினூடாக நாளாந்தம் விலைகள் பற்றிய விபரங்களைப் பரம்பல் செய்யும் பொருட்டு புறக்கோட்டை, கண்டி, தம்புள்ள, நுரைச்சோலை, மரந்தகஹமுல்ல மற்றும் மீகொட ஆகிய சந்தைகளில் இருந்து உணவுப் பொருட்களின் மொத்த சந்தை விற்பனை விலைகள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டன. மொத்த சந்தை விற்பனை விலைகள் தொடர்பான இந்தத் தகவல்களுக்கு மேலதிகமாக, SMS ஊடாக பரம்பல் செய்யும் பொருட்டு நுவரெலியா மற்றும் தம்புத்தேக ஆகிய சந்தைகளிலிருந்தும் இத்தகைய தகவல்களும் மற்றும் தரவுகளும் சேகரிக்கப்பட்டன. கொழும்பிலும் மற்றும் வெளிப் பகுதிகளிலும் கிடைக்கக்கூடிய மொத்த மற்றும் சில்லறைச் சந்தை விலைகள், அதிகளவில் உற்பத்தி செய்யும் பகுதிகளிலுள்ள உற்பத்தியாளர் விலைகள் ஆகிய இரண்டு வகையான விலைகளையும் பகுப்பாய்வு செய்ததன் மூலம், ஒவ்வொரு வெள்ளிக்கிழமை நாளிலும் உணவுப் பொருட்கள் தொடர்பான வாராந்த செய்திகள் வெளியிடப்பட்டன. அதற்கு அமைய, குறித்த ஆண்டு காலப் பகுதியில் 52 வாராந்த உணவுப் பொருட்கள் தொடர்பான செய்திகளும் மற்றும் 11 மாதாந்த உணவுப் பொருட்கள் தொடர்பான தகவல் செய்திகளும் வெளியிடப்பட்டன.

**2014 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம்**

i. வாராந்த உணவுப் பொருட்கள் தொடர்பான செய்திகள் - 52 செய்திகள் வெளியிடப்பட்டமை.

ii. உரிய அதிகார சபைகளுக்கு உணவுப் பொருட்களின் நாளாந்த விலைகள் பற்றிய விபரங்கள் ஆண்டு முழுதிலும் வழங்கப்பட்டமை.

iii. மாதாந்த உணவுப் பொருட்கள் தொடர்பான செய்திகள் - 11 செய்திகள் வெளியிடப்பட்டமை.

iv. ஊடகங்களுக்கு உரிய நேரத்தில் நாளாந்த மற்றும் வாராந்தத் தகவல்கள் வழங்கப்பட்டமை.

v. தேவைப்படுத்திய அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு ஆண்டு முழுதிலும் விலைகள் பற்றிய தரவுகளும் மற்றும் சந்தைத் தகவல்களும் வழங்கப் பட்டமை.

**2. பசளை தொடர்பான செய்திகள்**

ஹெ.வி.ஆ.ப.நி. நிருவாக சபையின் வேண்டுகோளின் பேரில், நாட்டின் மாதாந்தப் பசளை விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு நிலை பற்றிய மீளாய்வு விபரங்கள் அந்த நிருவாக சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. பசளை பற்றிய செய்தித் தாள்கள் உரிய நேரத்தில் வெளியிடப்பட்டு, அந்த நிருவாக சபையின் உறுப்பினர் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சமயோசித அறிக்கைகள்**

i. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஆர்.என்.கே. ரம்புக்வெல்ல தயாரித்த பெரிய வெங்காயத்தின் பயிர் நிலை - சிறுபோகம் 2014 -

ii. ஆராய்ச்சி உதவியாளர் திருமதி சி.பி. ஹத்துருசிங்க, மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜயமினி சம்பிக்கா, ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி இந்திக்கா எதிரிசிங்க, புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் திரு உபுல் அருணசாந்த ஆகியோர் தயாரித்த தக்காளிப் பயிர்ச் செய்கை, தாக்களிகள் ஏற்றுமதியின் விலை நடக்கை மற்றும் பதனிடும் சாத்தியம்.

iii. சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ருவினி விதாரணபத்திரன தயாரித்த பெருமளவில் உற்பத்தி செய்கின்ற பிரதேசங்களில் ஏனைய வயல் பயிர்களின் பயிர் நிலை (2013/14 பெரும்போகம், 2014 சிறுபோகம்): தக்காளி, பாசிப்பயறு, கவ்பி, சோளம், சோயா, எள்ளு மற்றும் நிலக் கடலை.

iv. தலைவர்/MFPAD திருமதி சி.பி. ஹத்துருசிங்க மற்றும் புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் உபுல் அருணசாந்த ஆகியோர் தயாரித்த 2014 மே மாதம் வரையான நெல்லின்/அரிசியின் நிலை.

v. ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய தயாரித்த நெல்லின்/அரிசியின் நிலை - 2014.

vi. MFPAD புள்ளிவிபரவியல் பதவியணியினர் மற்றும் புள்ளிவிபரவியலாளர் திரு உபுல் அருண சாந்த ஆகியோர் தயாரித்த நெல் உற்பத்தி ஆகுசெலவு - 2014 பெரும்போகம் மற்றும் சிறுபோகம்.

vii. MFPAD புள்ளிவிபரவியல் பதவியணியினர் மற்றும் புள்ளிவிபரவியலாளர் திரு உபுல் அருண சாந்த ஆகியோர் தயாரித்த நெல் குற்றல் ஆகுசெலவு - 2014.

**நிறைவுசெய்யப்பட்ட ஆய்வுகள்**

**1. பாரம்பரிய அரிசி இனங்கள் உற்பத்தியும் மற்றும் சந்தைப்படுத்தலும்: தற்போதைய நிலையும் எதிர்கால நன்மைகளும்**

ஆராய்ச்சிக் குழு:

| | | |
|---|---|---|
| திருமதி ரோசினி ரம்புக்வெல்ல | - | சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| திரு இ.ஏ.சி. பிரியங்கர | - | ஆராய்ச்சி உத்தியோகத்தர் |

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

பாரம்பரிய அரிசி இனங்கள் 3000 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் இலங்கை விவசாயிகளினால் நன்கு பாதுகாக்கப்பட்டும், அபிவிருத்தி செய்யப்பட்டும் மற்றும் பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளன. எனினும், மக்கள் சனத்தொகை அதிகரித்தாலும், விவசாயிகள் பற்றாக்குறையான அரிதான புதிய இனங்களையும் மற்றும் பழைய பாரம்பரிய இனங்களையும் தேடுவதாலும் 'எச்' தொடர் அரிசி இனங்கள் 1950 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. பாரம்பரிய நெற் செய்கை சுற்றாடல், பொருளியல், சமூகம் ஆகியன ரீதியில் பல நன்மைகளைக் கொண்டிருந்தாலும், இதனை இலங்கையில் ஊக்குவிக்கும் மற்றும் செயல்முறைப்படுத்தும் போது பல முக்கிய சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. அதிகரித்து வருகின்ற கேள்வியைக் கொண்டு, அரசாங்கம், அண்மை காலத்தில், நாட்டில் பாரம்பரிய அரிசி உற்பத்தியின் முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளது. ஆகையால், இலங்கை பாரம்பரிய நெற் செய்கைப் பிரிவினது இன்றைய நிலை, வரையறைகள் மற்றும் நன்மைகள் என்பன தொடர்பான ஒரு ஆய்வை மேற்கொள்வது காலத்திற்கேற்ற ஒரு தேவையாகக் காணப்படுகின்றது.

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்**

இலங்கையில் பாரம்பரிய அரிசி உற்பத்தித் துறையை மேம்படுத்துவதிலுள்ள இன்றைய நிலை, வரையறைகள் மற்றும் எதிர்கால நன்மைகள் என்பன பற்றி ஆராய்வது இந்த ஆராய்ச்சியின் முக்கிய குறிக்கோளாகும். இந்த ஆராய்ச்சியின் விஷேட குறிக்கோள்கள் பின்வருமாறு:

i. பாரம்பரிய நெற் செய்கையின் இன்றைய நிலையையும் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற தடைகளையும் அறிந்துகொள்ளல்.
ii. பாரம்பரிய அரிசி இனங்களை சந்தைப்படுத்துவதற்குக் கிடைக்ககூடிய சந்தைப் படுத்தல் மார்க்கங்களையும், சாத்தியங்களையும் அதே நேரம் விவசாயிகளின்

சந்தைப்படுத்தலை ஊக்குவிப்பதில் சம்பந்தப்படுகின்ற வரையறைகளையும் கண்டறிதல்.

iii. பாரம்பரிய அரிசி இனங்களுக்கான நுகர்வோர்களின் விருப்பத்தையும் மற்றும் வித்தியாசமான அரிசி இனங்களை நுகர்கின்றவர்களின் கொள்வனவு சார்ந்த நடக்கையையும் இனங்காணுதல்.

விவசாயிகள் மதிப்பாய்வுக்காக கொழும்பு, காலி, கேகாலை மற்றும் அனுராதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம். நுகர்வோர் மதிப்பாய்வு நோக்கத்திற்காக கொழும்பு மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஆய்வில் மேலெழுந்தவாரியான மாதிரிகள் பிரயோகிக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் பாரம்பரிய அரிசி இன உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 60 விவசாயிகள் மேலெழுந்தவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தமாக 300 விவசாயிகளும், கொழும்பு மாவட்டத்தில் 100 நுகர்பவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தரமான, கணியமான தரவுப் பகுப்பாய்வு முறையியல்கள் பிரயோகிக்கப்பட்டன.

முடிவுகள்

i. அதிக பல இனங்கள் காணப்பட்டாலும் சுவந்தெல் (23%), குருளுதுட (16%), ஹீனெட்டி (12%), பச்சபெருமாள் (11%) மற்றும் கஹவனு (7%) என்பன மாதிரியில் பங்குபற்றிய விவசாயிகளுக்கு மத்தியில் காணப்பட்ட அரிசி இனங்களாகும்.

ii. மாதிரியில் பங்குபற்றிய மொத்த விவசாயிகளில் ஏறக்குறைய பாரம்பரிய நெற் பயிர்ச் செய்கையில் இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தாதோர் 87% வீதமாக இருந்தனர். இவர்கள் கொம்பேர்ஸ்ட் (55%), வைக்கோல் உரம் (50%), மாட்டுச் சாணம் (41%), இலைகுழை உரம் (40%) போன்ற சேதனப் பசளைகளைப் பயன்படுத்துகின்றனர்.

iii. முறையற்ற விஸ்தரிப்பு சார்ந்த சேவை (24%), விலங்குகளினாலும் மற்றும் பறவைகளினாலும் ஏற்படும் பயிர் அழிவுகள் (16%), குறைந்தளவான விளைச்சல் என்பன பாரம்பரிய நெல் விவசாயிகள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளாகும்.

சிபாரிசுகள்

i. சராசரி விளைச்சலில் பாரம்பரிய நெல் இனங்களுக்கும் மற்றும் புதிய நெல் இனங்களுக்கும் இடையில் கணிசமான ஒரு இடைவெளி காணப்படுகின்றது. ஆகையால், புதிய நெல் இனங்களும் மற்றும் பாரம்பரிய நெல்லினங்களும் ஒன்றாக சிபாரிசு செய்யப்படுகின்றன. இந்த இலக்கை அடைவதில், குறிப்பாக மேல் மாகாணத்தில் கைவிடப்பட்டுள்ள நெற் காணிகளில் பாரம்பரிய நெற் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.

ii. பொது மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பங்களிப்பினூடாக விஸ்தரிப்பு சார்ந்த சேவை வலுப்படுத்தப்படுதல் வேண்டும். ஏற்கெனவேயிருக்கின்ற சமூக சேவை அமைப்புகள் பாரம்பரிய நெற் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கும் மற்றும் ஏனைய அமைப்புகளிடம் இருந்து உதவியை நாடுவதற்கும் மிகவும் ஆர்வத்துடன் இருக்கின்றன.

iii. சராசரி விளைச்சல் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்திய பயிர் அறுவடை மதிப்பாய்வினூடாக அளவிடப்படுதல் வேண்டும்.

iv. பாரம்பரிய அரிசி இனங்களின் போஷனைப் பதார்த்தம் மற்றும் மூலிகைப் பெறுமானம் ஆகியன பற்றிய அதிகளவான ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

v. பாரம்பரிய அரிசி இனங்களின் நிரூபனமான நன்மைகள் அடிப்படையில் ஒரு பொதுத் தகவல் பரம்பல் முறைமை தாபிக்கப்படுதல் வேண்டும். விமான சஞ்சிகைகள் முதலிய விளம்பரங்களைப் பிரசுரிப்பது போன்ற பிரபல்லியமான, பிரத்தியேகமான மற்றும் சர்வதேச ரீதியில் பிரபல்லியம் வாய்ந்த வழிகளைப் பயன்படுத்தி விளம்பரத்தை மேற்கொள்ள முடியும்.

vi. பாரம்பரிய அரிசி சந்தைப்படுத்தல் முறைமையில் முறைகேடுகளையும் மற்றும் மோசடிகளையும் கண்டறியும் பொருட்டு கடுமையான நியதிகளும் மற்றும் ஒழுங்குவிதிகளும் விதிக்கப்படுதல் வேண்டும்.

## 2. உணவுக்கான ஆகக்குறைந்த செலவு (CoD) பகுப்பாய்வு - இலங்கை

**ஆராய்ச்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திரு என்.பி.ஜி. சமந்த | - | ஒருங்கிணைப்பாளர் |
| திரு. டப்ளியூ.எச்.சீ. பிரியதர்ஷனி | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு. இ.ஏ.சி. பிரியங்கர | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திருமதி பி.ஏ.ஜே. சம்பிகா | - | துணை ஆராய்ச்சியாளர் |

நிதியிடும் மூலம்: உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP)

WFP நிகழ்ச்சித்திட்டம், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், சுகாதார அமைச்சின் போஷாக்கு ஒருங்கிணைப்புப் பிரிவு மற்றும் குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களம் என்பவற்றின் ஒத்துழைப்பில் ஹெ.வி.ஆ.ப.நி. உணவுக்கான ஆகக் குறைந்த செலவுப் பகுப்பாய்வு ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. உணவுக்கான செலவு (CoD) என்பது உள்நாட்டு உணவுப் பொருட்களின் கிடைப்புத்தன்மை, விலை, போஷனை உள்ளடக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆகக்குறைந்த சாத்தியமான விலையில் குறிப்பிட்ட ஒரு குடும்பத்தின் விருப்பத்திற்கு ஏற்ப சகல போஷாக்குத் தேவைப்பாடுகளையும் திருப்திப்படுத்துகின்ற எடுகோள் ரீதியான தூண்டப்பட்ட ஒரு உணவுச் செலவு மாதிரிக்கான ஒரு முறையியலாகும். குடும்ப வருமானம் பற்றிய தரவுகள் ஒன்றிணைக்கப்படுகின்ற போது, மாதிரிப் போஷாக்கு உணவை எடுகோள் ரீதியில் அடையக்கூடிய குடும்பங்களின் விகிதாசாரங்களை மதிப்பிடுவதற்கு இந்த CoD பிரயோகிக்கப்படலாம். கலரி மாத்திரம் அடங்கிய ஒரு உணவின் ஆகக்குறைந்த செலவுக்கான பிரவேசத்துடனான இணைப்பில், (a) போஷாக்குகள் கலரிகள், (b) போஷாக்குகள் மாத்திரம் (c) போஷாக்குளுக்கான அல்லது கலரிகளுக்கான பிரவேசமின்மை முதலிய அம்சங்களைப் பொறுத்து குடும்பங்களை மூன்று வித்தியாசமான குழுக்களாக பிரித்து வகைப்படுத்தலாம்.

ஆகையால், போஷாக்கு அடங்கிய ஒரு உணவுக்கான பொருளியல் பிரவேசத்தை அல்லது பெறக்கூடிய தன்மையை கணிப்பிடும் பொருட்டு இந்த CoD பகுப்பாய்வுக் கருவி பயன்படுத்தப்படலாம். ஆகையால், இது போஷாக்கு இன்மையும் மற்றும் நுண் போஷாக்குக் குறைபாடுகளும் போஷாக்கு அடங்கிய உணவுக்கான போதிய பிரவேசமின்மையினால் ஏற்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்கு உதவியாக அமையும். இந்த ஆய்வில் விவரித்த பகுப்பாய்வில் 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் முதல் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையான ஒரு காலப் பகுதி உள்ளடக்கப்பட்டது. இந்த முழுக் காலப் பகுதியும் பெரும்போகம் 2013 ஒற்றோபர் - 2014 சனவரி), பெரும்போக அறுவடை காலம் (2014 பெப்ருவரி - மார்ச்), சிறுபோகம் (2014 ஏப்ரல் - யூலை), சிறுபோகப் பயிர்ச் செய்கை காலம் (2014 ஆகஸ்ட் - செப்டம்பர்) என நான்கு பருவ காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

### நோக்கெல்லையும் குறிக்கோளும்

இலங்கையில் பல பாகங்களிலும் போஷாக்கு அடங்கிய ஒரு உணவுக்கான பொருளாதார ரீதியான பிரவேசம் இன்மையை சுட்டிக்காட்டுவதும், பருவ காலங்கள் முழுதிலும் பிரவேசம் எவ்வாறும் மாற்றமடைகின்றது என்பதைக் கண்காணிப்பதும் மற்றும் வித்தியாசமான தலையீட்டுத் தேவைப்பாடுகளை இனங்காண்பதும் இந்த ஆய்வின் அடிப்படைக் குறிக்கோளாக இருந்தது. உணவு விலைகள் கண்காணிப்புத் தரவுகளைப் பிரயோகித்து WFP நிகழ்ச்சித்திட்டத்தின் நிமித்தம் CoD பகுப்பாய்வை சுயாதீனமாக மேற்கொள்வதற்கான ஹெ.வி.ஆ.ப.நி. ஆற்றலைக் கட்டியெழுப்புவது இந்த ஆய்வின் இரண்டாம்நிலைக் குறிக்கோளாக இருந்தது.

### முடிவுகள்

i. மாதிரிக் குடும்பத்திற்கான போஷாக்கு அடங்கிய ஒரு உணவின் செலவு (MCNUT) வட மாகாணத்தில் பெரும்போக அறுவடை காலத்தின் போது 11,831 இ.ரூ. இல் இருந்து சிறுபோக அனைத்துப் பருவ காலங்களின் போதும் மேல் மாகாணத்தில் 18,913 இ.ரூ. வரையான அளவில் வித்தியாசப்படுகின்றது. பெரும்போகப் பயிர்ச் செய்கை காலத்துடன் சிறுபோக அறுவடை காலத்தை ஒப்பிடுகின்ற போது, MCNUT கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய சகல மாகாணங்களிலும் 2% - 16% வீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது.

ii. கிழக்கு மாகாணத்தில் பெரும்போகப் பயிர்ச் செய்கை காலத்தின் போது கலரி அடங்கிய உணவு மாத்திரம் (MCCAL) 4,898 இ.ரூ. இல் இருந்து மேல் மாகாணத்தில் சிறுபோக அறுவடை காலத்தின் போது 7,268 இ.ரூ. என்ற அளவுகளில் அதிகரித்துக் காணப்படுகின்றது. பெரும்போகப் பயிர்ச் செய்க காலத்துடன் சகல மாகாணங்களையும் ஒப்பிடுகின்ற போது, கலரி அடங்கிய உணவு மாத்திரம் சிறுபோக அறுவடை காலத்தின் போது அதிகளவில் 15% வீதம் என்ற அளவிலும் (வட மாகாணத்தில்), 41% வீதம் என்ற அளவிலும் (மேல் மாகாணத்தில்) அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பெரும்போகப் பயிர்ச் செய்கையுடன் ஒப்பிடும் போது மேல் மாகாணத்தில்

சிறுபோக அறுவடை காலத்தின் போது அரிசி இனங்களின் விலைகள், இலங்கை உணவின் கலரி சக்திக்கு மிகவும் பங்களிக்கின்ற சக்தி மூலம் முறையே புழுங்கல் அரிசி மற்றும் பச்சரிசி ஆகியன தொடர்பில் முறையே 35% மற்றும் 69% ஆகிய வீதங்களினால் அதிகரித்துள்ளன.

iii. சகல மாகாணங்களிலும் சகல குடும்ப அங்கத்தவர்களுக்கும் போஷாக்கு அடங்கிய உணவுகள் கிடைக்கக்கூடியதாக இருந்தன. எனினும், ஒருசில போஷனைப் பதார்த்தங்கள் போஷாக்கு அடங்கிய உணவின் அதிகரித்த செலவுக்கு ஈடுகொடுக்கக்கூடிய மிகவும் கடினமான நிலையில் காணப்பட்டன. சகல மாகாணங்களிலும் இரும்புச் சத்தும் மற்றும் அரைவாசி மாகாணங்களில் கல்சியமும் கிடைக்கக்கூடியதாக இருந்தன. வட மாகாணத்தில் விற்றமின் 'சி', விற்றமின் 'பீ2' ஆகியன 100% வீதத்தில் காணப்பட்டன. இந்த நிலைமை, விற்றமின் 'சி' மற்றும் விற்றமின் 'பீ2' ஆகியன அடங்கிய மலிவான உணவுப் பொருட்கள் கிடைக்கக்கூடியதாக இருந்திருக்குமாயின், மலிவான ஒரு உணவு இருந்திருக்கும் என்பதை சுட்டிக்காட்டுகின்றது. பகுப்பாய்வில் உள்ளடக்கப் பட்ட சகல உணவுப் பொருட்களிலும், மிகவும் செலவு-வினைத்திறன் வாய்ந்த போஷாக்கு அடங்கிய உணவைத் தயாரிப்பதற்கு பின்வருவம் உணவுப் பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அரிசி, பருப்பு, பொன்னாங்கனி, சாலய கருவாடு, சிக்பீ, தேங்காய் எண்ணெய், பாம் ஒயில், கோழி ஈரல், நெத்தோலி மற்றும் செத்தல் மிளகாய்.

iv. அதிகமான மாகாணங்களில் சகல பருவ காலங்களின் போதும் MCCAL மற்றும் MCNUT ஆகியன தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால், இவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலும் குறைவடைந்துள்ளது. மேல் மாகாணத்தில் மக்களின் கொள்வனவு ஆற்றல் அதிகமாகப் பதிவாகியிருக்கின்ற அதே வேளையில் சகல மாகாணங்களுக்கு இடையிலும் பெரும்போகப் பயிர்ச் செய்கையின் போது கொள்வனவு ஆற்றல் மிகச் சிறந்த அளவில் காணப்படுகின்றது. 22% வீதமான குடும்பங்கள் மாத்திரமே MCNUT ஐ கொள்வனவு செய்ய இயலாத நிலையிலுள்ளன. உணவுப் பொருள் விலை அதிகரிப்புகளின் காரணத்தினால் MCNUT ஐ கொள்வனவு செய்ய இயலாத குடும்பங்களின் எண்ணிக்கை சிறுபோக அறுவடை காலத்தில் 28% வீதம் வரை அதிகரிக்கின்றது. சிறுபோக அறுவடை காலத்தின் போது 55% வீதமான குடும்பங்களுக்கு போஷாக்கு அடங்கிய உணவுகளுக்கு பொருளாதார ரீதியான பிரவேசம் இல்லாததால் இந்த நிலைமை கிழக்கு மாகாணத்தில் மிகவும் மோசமாக இருக்கின்றது. குடும்பங்களுக்கான போஷாக்கு அடங்கிய உணவுக்கான பொருளாதார ரீதியான பிரவேசம் ஊவா மாகாணத்திலும் குறைந்த அளவிலேயே காணப் படுகின்றது. சிறுபோக அறுவடை காலத்தில், சபரகமுவ மாகாணம் (41%), மத்திய மாகாணம் (39%), வட மாகாணம் (36%) ஆகிய மாகாணங்களுக்கு அடுத்ததாக இங்குள்ள 48% வீதமான குடும்பங்கள் போஷாக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் காணப்படுகின்றன.

v. MCCAL இன் கொள்வனவு ஆற்றல் சகல மாகாணங்களிலும் அனைத்துப்

பருவ காலங்களிலும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது. பெரும்போகப் பயிர்ச் செய்கை காலத்தின் போது வட மாகாணத்தில் அதிகமான அதாவது 13% வீதமான குடும்பங்கள் போதிய கலரிப் பெறுமானமுடைய உணவுகளை வாங்க முடியாதுள்ளன. இந்த நிலைமை கிழக்கு மாகாணம் (8% - 14%) மற்றும் ஊவா மாகாணம் (8% - 12%) ஆகிய மாகாணங்களுக்கு அடுத்ததாக சிறுபோக அறுவடை காலத்தில் 16% வீதம் வரை அதிகரித்துள்ளது. மேல் மாகாணத்தில் 1% வீதமான குடும்பங்கள் மாத்திரமே பெரும்போகப் பயிர்ச் செய்கை காலத்தில் கலரி உணவு வறுமைக் கோட்டிற்குக் கீழ் காணப்படுகின்றன. இந்த நிலைமை சிறுபோக அறுவடை காலத்தில் 3% வீதம் வரை அதிகரித்துள்ளது.

vi. COD இலங்கைச் சூழலில் போஷாக்கு அடங்கிய உணவுக்கான வழங்கப்பட்ட பொருளாதார ரீதியான பிரவேசம் சகல பருவகாலங்களிலும் கருத முடியாது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குப் பயனாக அமைந்தது. போஷாக்கு அடங்கிய உணவுக்கான பொருளாதார ரீதியான பிரவேசமானது போஷாக்கின்மையை நிர்ணயிக்கின்ற பிரத்தியேகமான காரணியாக இல்லாவிட்டாலும் கூட, பூர்த்தி செய்வதற்கு மிகவும் முக்கியமான ஒரு முற்-தேவைப்பாடாக விளங்குகின்றது. இந்த அளவான பரிமாணத்தை அளவிடுவதற்கு இயலுமானதாக இருப்பதால், கொள்கைத் தீர்மானமெடுத்தல் விடயத்தை அறியப்படுத்துவதற்கு அடிப்படை நடவடிக்கை அவசியமாகும்.

## மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள்

### 1. இலங்கையில் நெற் சந்தைப்படுத்தலில் அரசாங்கத்தின் தலையீடு: கொள்வனவு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் ஆகிய தொடர்பான பிரச்சினைகள்

**ஆராய்ச்சிக் குழு:**

திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய - ஒருங்கிணைப்பாளர்
திருமதி ஆர்.பி. விதாணபத்திரன - துணை ஆராய்ச்சியாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்**

ஆசியாவில் அரிசியை உற்பத்தி செய்யும் அதிகமான நாடுகளில் சந்தைப்படுத்தல் ஸ்தீரத்தன்மைக்கான நெல்/அரிசி சந்தைப்படுத்தல் முறைமையில் அரசாங்கத்தின் தலையீடு பொதுவாகக் காணப்படுகின்றது. தலையீட்டு வகை விவசாயிகளுக்கான உதவு விலை, நுகர்வோருக்கு உணவு சார்ந்த நன்மைகள் பகிர்ந்தளிப்புக்கான விநியோக விலை ஆகிய அமைப்புகளில் வித்தியாசப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கக் கொள்கைப் பிரசாரத்திற்கு இணங்க, நெற் சந்தைப்படுத்தல் சபை இலங்கையில் மீள்-தாபிக்கப்பட்டது. இந்த நெற் சந்தைப்படுத்தல் சபை 2008 ஆம் ஆண்டில் நெல்லைக் கொள்வனவு செய்வதன் மூலம் இயங்கத் தொடங்கியது. விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல்,

அவற்றை விநியோகித்தல், பகிர்ந்தளித்தல், விவசாயிகளினது உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்த விவசாயிகளை ஊக்குவித்தல், விவ்சாய உற்பத்திகளைப் பதனிடுதல், பகிர்ந்தளித்தல், நெல்லுக்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலைத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல், உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் உணவுப் பாதுகாப்புக் களஞ்சியத்தைப் பேணுதல் ஆகிய நோக்கங்களை அடையும் நிமித்தம் நெ.ச.ச. மீள்-தாபிக்கப்பட்டது. நெல் தேசிய பயிராகக் கருதப்படுகின்றது. விவசாயத் துறையின் ஸ்தீரத்தன்மையை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு நெல் விவசாயிகளுக்கு வருமானத்தைத் தருகின்ற விலையொன்றை உறுதிசெய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. நெ.ச.ச. முன்னெடுப்பு நடவடிக்கைகள் நுகர்வோருக்குத் தேவையான உணவுப் பொருட்களை அவர்கள் நியாயமான விலைகளில் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளன. நெல்லுக்கு நெ.ச.ச. அறிமுகப்படுத்திய அரசாங்கத்தின் உத்தரவாத விலைத்திட்டத்தினூடாக விவசாயிகளுக்கு தமது வாழ்க்கைத் தரங்களை உயர்த்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன.

**ஆய்வின் குறிக்கோள்கள்**

முழுமொத்த நிலையை மீளாய்வு செய்வதும் மற்றும் நெற் சந்தைப்படுத்தல் மீதான அரசாங்கத்தின் இன்றைய தலையீடுகளை இனங்கண்டறிவதும் குறித்த ஆயிவின் குறிக்கோளாகும்.

**ஆய்வின் விஷேட குறிக்கோள்கள் பின்வருமாறு:**

i. விவசாய நுழை விலைகளை ஸ்தீரப்படுத்தும் பொருட்டு நெல்லைக் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் தாக்கங்களை ஆராய்தல்.

ii. நெ.ச.ச. மூலமான பிற்பட்ட களஞ்சிய முகாமை நடபடிமுறை பற்றி ஆராய்தல்.

iii. நெல்லையும் அரிசியையும் கொள்வனவு செய்யும், களஞ்சியப்படுத்தும், விற்பனை செய்யும் நேரங்களில் நெற் சந்தைப்படுத்தல் சபை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இனங்காணுதல்.

iv. நெற் சந்தைப்படுத்தலின் வினைத்திறன் வாய்ந்த அரசாங்கத் தலையீட்டை அதிகரிப்பதற்கு அவசியமான கொள்கை சார்ந்த முக்கியமான முன்னெடுப்புகளை இனங்காணுதல்.

**முன்னேற்றம்:**

தரவுகள் சேகரிப்பு (இரண்டாம்நிலைத் தரவுகள் சேகரித்தல் மற்றும் முக்கிய தகவல் தருநர் நேர்காணல்கள்) நிறைவு செய்யப்பட்டுள்ளது. தரவுகள் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல் விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மனித வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவு

விவசாய மற்றும் கிராமிய செயற்பாடுகளில் ஈடுபடும் முதியவர்களின் அறிவையும் மனோபாவத்தையும் வளர்த்து, அதன் மூலம் இலங்கையிலுள்ள விவசாயிகளின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவது ஹெ.வி.ஆ.ப.நி. மூலம் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் குறிக்கோளாகும்.

பரந்தளவில் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள், கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் அடங்கிய ஹெ.வி.ஆ.ப.நி. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் வாடிக்கையாளர்கள் இலங்கையில் கிராமியத் துறையிலும் மற்றும் விவசாய சமூகத்திலும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

மனித வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் அம்சங்கள் அடிப்படையில் கட்டமைக்கப் பட்டுள்ளன.

i. விவசாய சமூகத்தினது தேவைகளின் அடிப்படையில் பொதுவான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல், ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

ii. விவசாயத் துறை மற்றும் செயற்பட்டு வருகின்ற செயல் சார்ந்த ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் என்பன சம்பந்தப்பட்ட வித்தியாசமான நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

iii. வேண்டுகோளில் ஏனைய நிறுவனங்களுக்கும் நிபுணர்களை வழங்குதல்.

தேசிய மற்றும் சர்வதேச பயிற்சிகள் தவிர, ஏனைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து கருத்தரங்குகளும், வேலையரங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மனித வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவினால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பயிற்சி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களும் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 1. கிராமிய/சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களைத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் முகாமை செய்வதற்குமான பாங்கான பங்குபற்றல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (RRA, PRA மற்றும் PCM)

பயிற்சிக் குழு :

| | | |
|---|---|---|
| திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் | - | தலைவர்/HRID (ஒருங்கிணைப்பாளர்) |
| திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ | - | RA/APPE |
| திரு பி.சி.ஜே. த சில்வா | - | சி.ஆ.உ./HRID |

| | | |
|---|---|---|
| திரு எஸ். ஏபாசிங்க | - | ஆ.உ./ARMD |
| திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் | - | சி.ஆ.உ./HRID |

அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்நாட்டு மட்டத் திட்டமிடல் மற்றும் முகாமை அடிப்படையில் மக்கள் பங்குபற்றலின் பெறுமதி பற்றி பங்குபற்றுநர்களுக்கு உணர்த்துவதும் மற்றும் PRA/RRA தொழில்நுட்பங்களைப் பிரயோகிப்பதற்கான அவர்களின் அறிவு, திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றை மேம்படச்செய்வதன் மூலம், குறித்த குறிக்கோளை அடையும் வகையில் அவர்களுக்கு உதவுவதும் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகக் காணப்பட்டது.

2014 ஆம் ஆண்டு ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. மாத்தறை மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. அண்ணளவாக 30 பங்குபற்றுநர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொண்டனர்.

**2. கிராமிய சமூகத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் மற்றும் முகாமை செய்வதற்குமான பாங்கான பங்குபற்றல் நுட்பங்கள் பற்றிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

**பயிற்சிக் குழு :**

| | | |
|---|---|---|
| திரு இ.எம். அபேரட்ன | - | பணிப்பாளர் |
| திரு ஜே.கே.எம்.டீ. சந்திரசிறி | - | மேலதிகப் பணிப்பாளர் |
| கலாநிதி எம்.எஸ். சேனாநாயக்க | - | HD/SDP (ஒருங்கிணைப்பாளர்) |
| திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் | - | HD/HRID |
| திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ | - | RA/APPE |
| திரு பி.சி.ஜே. த சில்வா | - | SRO/HRID |
| திரு எஸ். ஏபாசிங்க | - | RO/ARMD |

சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மை பெறுநர்களுக்கு மாம் பழப் பயிர்ச் செய்கை தொடர்பான கருத்திட்டம் பற்றி போதிப்பதும் மற்றும் குறித்த பிரதேசத்தில் ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக செயற்படுத்தப்பட்டு வருகின்ற அந்த மாம் பழப் பயிர்ச் செய்கை தொடர்பான கருத்திட்டத்திற்கான ஒரு சமூக செயல் திட்டத்தைத் தயாரிப்பதும் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

சூரியவெவ சர்வதேச அரங்கில் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறக்குறைய 77 விவசாயிகள் பயிற்றுவிக்கப் பட்டனர்.

**3. சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம்**

**பயிற்சிக் குழு :**

| | | |
|---|---|---|
| திரு என்.பி.ஜி. சமந்த | - | RO/MFPAD (ஒருங்கிணைப்பாளர்) |
| கலாநிதி ரீ.ஏ. தர்மரட்ன | - | RF/MFPAD |
| திருமதி சி.பி. ஹத்துருசிங்க | - | RF/MFPAD |
| திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன | - | RO/MFPAD |
| திரு இ.ஏ.சி. பிரியங்கர | - | RO/MFPAD |
| திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய | - | RO/MFPAD |
| திரு பி.சி.ஜே. த சில்வா | - | SRO/HRID |

சந்தை அடிப்படையிலான உற்பத்தி முறைமையை ஊக்குவிக்கும் பொருட்டு சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு தொடர்பில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிமித்தம் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது. சந்தைப்படுத்தல் விஸ்தரிப்பு தொடர்பான எண்ணக்கரு பற்றி பங்குபற்றுநர்களின் அறிவை மேம்படுத்துதல், விவசாயிகளுக்கு மத்தியில் சந்தை விஸ்தரிப்பு விநியோக வழிமுறைகளைப் புரிந்துகொள்ளச் செய்வதற்கான வியாபாரத் திட்டத்தைத் தயாரித்தல், உற்பத்தி மற்றும் திட்டமிடல் ஆகியன தொடர்பான சந்தைப்படுத்தல் தகவல்களைப் புரிந்துகொள்ளச் செய்தல் என்பன குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

2014 ஆம் ஆண்டில் இரண்டு எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப் பட்டன. வடமேல் மாகாண சபை கமத்தொழில் அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்காக அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

### 4. சமூக ஊக்குவிப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

**பயிற்சிக் குழு :**

| | | |
|---|---|---|
| திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் | - | தலைவர்/HRID (ஒருங்கிணைப்பாளர்) |
| திரு பி.சி.ஜே. த சில்வா | - | SRO/HRID |
| திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் | - | SRO/HRID |
| திரு எச்.ஜே.சி. ஜயசூரிய | - | RO/EWRM |
| திரு எச்.எம்.சி.கே. ஹேரத் | - | வெளி வள நபர் |

சமூக ஊக்குவிப்பாளர்களாக கமநலமும் அபிவிருத்தியும் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பிரதானமாக இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது. சமூக ஊக்குவிப்பு மற்றும் பாங்கான பங்குபற்றல் அபிவிருத்தி ஆகியன தொடர்பில் பங்குபற்றுநர்கள் வசம் இருக்கின்ற கோட்பாடு, செயன்முறை சார்ந்த அறிவை மேம்படுத்துவதும் வலுப்படுத்துவதும் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாக இருந்தது.

2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. மாத்தளை மாவட்ட செயலகத்திலுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், அதனைச் சூழவுள்ள பகுதியிலுள்ள உத்தியோகத்தர்கள் ஆகியோருக்காக அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 144 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

**5. கமக்காரர் அமைப்புகளை வலுப்படுத்துவது பற்றி விவசாயத் தலைவர்கள் பயிற்சி**

பயிற்சிக் குழு :

| | | |
|---|---|---|
| திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் | - | தலைவர் (ஒருங்கிணைப்பாளர்) |
| திரு பி.சி.ஜே. த சில்வா | - | SRO/HRID |
| திரு திலக் கந்தேகம | - | வெளி வள நபர் |
| திரு எஸ்.பி. காமினி | - | வெளி வள நபர் |
| திரு டப்ளியூ.எஸ்.யூ. குலசிறி | - | வெளி வள நபர் |

விவசாயிகளுக்கு கமக்கார் அமைப்புகளில் இருந்து ஆகக் கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கமக்காரர் அமைப்புகளை வலுப்படுத்துவதும் விவசாயிகளை ஊக்குவிப்பதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும்.

மேற்குறித்த குறிக்கோள் தவிர, குறிப்பாக செயல் குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் குழு அங்கத்தவர்கள், அந்தந்த மாவட்டங்களிலுள்ள அனைத்துக் கமக்காரர் அமைப்புகளினதும் தலைவர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதில் இந்த நிகழ்ச்சித்திட்டம் இலக்குக்கொண்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இந்த நிகழ்ச்சித்திட்டம் 2014 ஆம் ஆண்டிற்கான கமக்காரர் வார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தில் 2372 கமக்காரர் அமைப்புகளின் தலைவர்கள் இருந்தனர். இவர்களுக்கு 2014 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் விவசாய சமூகத்திற்கும் மற்றும் கிராமிய அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்கும் ஆகக்கூடிய சேவைகளை வழங்கும் வகையில் குறித்த மாவட்டத்தில் 22 கமக்காரர் அமைப்புகளும் வலுப்படுத்தப்பட்டன.

**6. கமக்காரர் அமைப்புகள் வலுப்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தேசத்திற்கு மகுடம் - 2013/2014)**

**பயிற்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் | - | தலைவர்/HRID (ஒருங்கிணைப்பாளர்) |
| கலாநிதி எஸ்.எம். சேனாநாயக்க | - | தலைவர்/SDP பிரிவு |
| திரு பி.சி.ஜே. த சில்வா | - | SRO/HRID |

திரு ஜி.பீ. வீரக்கொடி - வெளி வள நபர்
திரு ஆரியபால - வெளி வள நபர்
திருமதி ஐரின் பெரேரா - வெளி வள நபர்

குறித்த பிரதேசத்தில் நிகழும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் விவசாயிகளின் மூலம் ஆகக்கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு விவசாயிகளை ஊக்குவிப்பதும் மற்றும் கமக்காரர் அமைப்புகளை வலுப்படுத்துவதும் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

மாவட்டத்தின் அனைத்து கமநல அபிவிருத்தி நிலையங்களினதும் விவசாயத் தலைவர்கள் 2013/2014 தேசத்திற்கு மகுடம் எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் சம்பந்தப்பட்டிருந்தனர். மேற்குறித்த மாவட்டத்தில் இருபத்தாறு ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஏறக்குறைய விவசாயத் தலைவர்களும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களும் என மொத்தமாக 2037 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

7. **அபிவிருத்திக் குழு:**
திரு பி.சி.ஜே. த சில்வா - SRO/HRID (ஒருங்கிணைப்பாளர்)
திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - தலைவர்/HRID

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹெ.வி.ஆ.ப.நி. HRID பிரிவு அனைத்து வகுதி ஊழியர்களினதும் தொழில் அறிவை விருத்திசெய்வதிலும் மற்றும் ஹெ.வி.ஆ.ப.நி. நிறுவகத்திற்கு அத்தகைய ஊழியர்களின் அனுகூல சேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் இலக்குக்கொள்ளுகின்ற விஷேட விரிவுரைகளை ஏற்பாடு செய்தது. பின்வரும் தலைப்புகள் அபிவிருத்திக் குழுவில் ஆராயும் பொருட்டு கருத்திற் கொள்ளப்பட்டன.

i. சாதக மனோபாவ விருத்தி: இந்த விரிவுரை கொழும்புப் பல்கலைக்-கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் சரத் விஜேசூரிய அவர்களினால் நடத்தப்பட்டது.
ii. விவசாயம் பற்றிய பாரம்பரிய அறிவு: இந்த விரிவுரை சுற்றாடல்வியலாளர் பேராசிரியர் பண்டுல அன்டகம அவர்களினால் நடத்தப்பட்டது.

8. **நூலகக் கல்வித் தகவல் தேசிய கண்காட்சி**
திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் - தலைவர்/HRID (ஒருங்கிணைப்பாளர்)
திரு பி.சி.ஜே. த சில்வா - SRO/HRID
திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத்- SRO/HRID

2014 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையான தினங்களில் தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய கண்காட்சியில் HRID கண்காட்சிக் கொட்டகைகளை நிறுவி அந்தக் கண்காட்சியில் பங்குபற்றியது.

இந்தக் கண்காட்சியில், ஹெ.வி.ஆ.ப.நி. நிறுவகத்திற்கு இலங்கையில் விவசாயம் மற்றும் கிராமிய அபிவிருத்தி ஆசியன சம்பந்தமான புதிய ஆராய்ச்சி முடிவுகளைப் பரப்ப வாய்ப்புக் கிடைத்திருந்தது. இது தவிர, கண்காட்சிக் கொட்டகையைப் பார்வையிடுவதற்கு வந்த பார்வையாளர்களினால் அந்தக் கொட்டகையில் இருந்த ஹெ.வி.ஆ.ப.நி. வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளவும் முடிந்தது.

## 9. அறிக்கை - மாத்தறை மாவட்டத்தில் கமக்காரர் அமைப்புகள் எதிர்நோக்கும் விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகள்

**ஆராய்ச்சிக் குழு :**

| | | |
|---|---|---|
| திரு பி.சி.ஜே. த சில்வா | - | SRO/HRID (ஒருங்கிணைப்பாளர்) |
| திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் | - | HD/HRID |

2014 ஆம் ஆண்டில் 'கமக்காரர் வார' நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னர் மாத்தறை மாவட்டத்தில் விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகளைக் கண்டறிவதற்கான ஒரு மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய அறிக்கை மாத்தறை மாவட்டத்தில் நிகழ்ந்த 'கமக்காரர் வார' கண்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னர் கமத்தொழில் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மதிப்பாய்வில், மாவட்டத்திலுள்ள முழுக் கமக்காரர் அமைப்புகளும் நன்மை அடைந்தன. குறுகிய ஒரு வினாக்கொத்தின் ஊடாக அந்தந்தக் கமக்காரர் அமைப்பின் நிருவாகிகளிடம் இருந்து விவசாயிகள் எதிர்நோக்குகின்ற விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகள் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

ஒவ்வொரு கமக்காரர் அமைப்பினதும் பெயரின் கீழ் கமக்காரர் அமைப்புகள் சம்பந்தப்பட்ட விஷேட பிரச்சினைகள் பற்றி அறிக்கையிடப்பட்டிருந்தது. மிகவும் பொதுவான தன்மையிலான பிரச்சினைகள் பொதுவான பிரச்சினைகள் என்ற தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டன.

மாத்தறை மாவட்டத்தில் கமக்காரர் அமைப்புகளைப் பாதிக்கின்ற ஒரு சில பொதுவான பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

i. வடிகாலமைப்புப் பிரச்சினை
ii. விவசாயம் சார்ந்த செயற்பாடுகளுக்கு காட்டு விலங்குகள் ஏற்படுத்தும் ஆபத்துக்கள்
iii. பயிரிடப்படாத நிலங்கள் மற்றும் ஏற்படும் ஆபத்துக்கள்

iv. நில்வளாக் கருத்திட்டம் சம்பந்தமான பிரச்சினைகள்
v. விவசாய நிலங்கள் கைவிடப்படுகின்றமை மற்றும் விவசாயத்தில் இளைஞர் ஈடுபாடு குறைவடைகின்றமை

**நிறைவு செய்யப்பட்ட ஆய்வுகள்**

**1. காரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோயின் சமூகப் பொருளாதாரத் தாக்கம்**

**ஆராய்ச்சிக் குழு:**

| | | |
|---|---|---|
| திரு சத்துர ஜயம்பத்தி | - | ஒருங்கிணைப்பாளர் |
| கலாநிதி எம்.எஸ். சேனாநாயக்க | - | துணை ஆராய்ச்சியாளர் |
| திரு எஸ்.எம்.ஏ. சமரகோன் | - | துணை ஆராய்ச்சியாளர் |

நிதியிடும் மூலம்: திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**
CKD சிறுநீரக நோய் பாதித்த குடும்பங்களின் மீது அதன் சமூகப் பொருளாதாரத் தாக்கங்களை ஆராயும் பொருட்டு நான்கு மாவட்டங்களில் இந்தக் குறித்த ஆய்வு நடத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களினது வாழ்வாதாரத்தின் மீது அந்த நோயின் தாக்கங்கள் பற்றி ஆராய்தல், அந்த நோயினால் பாதிக்கப்படும் ஒரு குடும்பத்தின் வருமான இழப்பை மதிப்பிடுதல், பாதிக்கப்பட்ட ஒரு குடும்பம் சிகிச்சைக்காக செலவிட வேண்டிய மாதாந்த சராசரி செலவை மதிப்பிடுதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உணவு நுகர்வின் மீது அந்த நோயின் தாக்கத்தை மதிப்பிடுதல், அந்தக் குடும்பங்களினது பிள்ளைகளின் கல்வியில் அந்த நோயின் தாக்கத்தை மதிப்பிடுதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விவசாய உற்பத்திகள் மீதான தாக்கங்களை மதிப்பிடுதல் என்பன இந்த ஆய்வின் குறிக்கோள்களாக இருந்தன. அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, மொனராகலை ஆகிய நான்கு மாவட்டங்களினதும் ஒவ்வொரு மாதிரி மாவட்டத்தில் இருந்தும் 50 குடும்பங்கள் உள்ளடங்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 குடும்பங்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

முடிவுகள்
முடிவுகளுக்கு இணங்க, ஆண்களே நோயினால் அதிகளவு பாதிக்கப்பட்டிருந்தனர். மாதிரியின் மொத்தத்தில் இவர்கள் 77% வீதமாகக் காணப்படுகின்றனர். அதே போன்று பாதிக்கப்பட்டவர்களில் 82% வீதமானோர் குடும்பத் தலைவர்களாக இருந்தனர். இந்த CKDu நோயினால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையானவர்கள் வயது முதிர்ந்தவர்கள். இவர்களில் 67% வீதமானவர்கள் 50 வயதை உடையவர்கள். பாதிக்கப்பட்ட முப்பது வயதுக்குக் கீழ்பட்டவர்களின் வீதம் 1.4% ஆகவும் மற்றும் 40 வயதுக்குக் கீழ்பட்டவர்களின் வீதம் 4.5% ஆகவும் வீதமாக இருந்தது. குறித்த 200 குடும்பங்களிலும், 17 நோயாளிகள் ஏற்கெனவே இறந்திருந்தனர். இறந்த அனைத்து நோயாளிகளும் CKDu நோய் கண்டுபிடிக்கப்பட்டன் பின்னரும் 10

வருடங்களுக்குக் குறையாத காலம் வாழ்ந்திருந்தனர். பாதிக்கப்பட்ட குடும்ங்களில் பெரும்பான்மையான குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடி நீருக்குக் குறைந்த பிரவேசம் இருந்தது அல்லது பிரவேசம் ஏதும் இருக்கவில்லை. பாதிக்கப்பட்ட 76% வீதமான குடும்பங்களின் குடி நீர் மூலம் கிணறாகக் காணப்படுகின்றது. அதே நேரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 20% வீதமான குடும்பங்களுக்கு குழாய்க் கிணறுகள் குடி நீர் மூலமாக இருந்தன. ஒப்பிட்டு அளவில் இளம் வயதினரில் CKDu நோய் பீடித்தலுக்கும் மதுபான நுகர்வுக்கும் இடையில் வலிமையான தொடர்பைக் கண்டுகொள்ள முடியவில்லை. பெரும்பான்மையானோர் (67%) இந்த CKDu நோய் பீடிப்பதற்கு முன்னர் எந்த விதமான தொற்றாத நோய்களினாலும் அவதிப்பட்டிருக்கவில்லை. CKDu நோய் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் எழுபத்து இரண்டு வீதமானோர் நீரிழிவு நோயாளிகளாக மாறியிருந்தனர். இதே நேரம் 61% வீதமானோர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தனர். மாதிரி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மொத்தக் குடும்பங்களில் ஐம்பத்தொரு வீதமான குடும்பங்கள் இந்த CKDu நோயின் காரணமாக குடும்ப வருமானத்தை இழந்திருந்தன. நாற்பது வீதமான குடும்பங்கள் இந்த நோய் அந்தக் குடும்பங்களின் பிரதான தொழிலான விவசாயத்தைப் பாதித்ததாகத் தெரிவித்துள்ளன. க்ளினிக் ரீதியில் அரசாங்க வைத்தியசாலைகளினால் மருந்துகள் வழங்கப்படுவதால் ஒப்பிட்டளவில் இந்த நோய்க்கான குடும்பங்களின் மாதாந்தச் செலவு குறைவாக இருக்கின்றது. இந்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் மாதத்தில் ஒரு குடும்பம் செலவு செய்த ஒரு சராசரி செலவு பற்றிய விபரம் பின்வருமாறு இருந்தது: அனுராதபுர மாவட்டம் - ரூ.330.00, பொலன்னறுவை மாவட்டம் - ரூ. 1251.00, திருகோணமலை மாவட்டம் - ரூ.1013.00, மற்றும் மொனராகலை மாவட்டம் - ரூ.2178.00. இந்த நோய் குடும்பங்களின் நுகர்வை அதிகளவில் பாதித்திருந்தது எனவும், குறித்த ஒரு அளவுக்கு அந்தக் குடும்பங்களினது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளைப் பாதித்துள்ளது எனவும் மேலும் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. இது தவிர, ஒரு சில மோசடிகாரர்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டுக் காணப்பட்டனர் எனவும் இந்த ஆய்வின் மூலம் மேலும் கண்டறியப்பட்டது.

சிபாரிசுகள்

i. குறித்த ஆய்வு முடிவின் அடிப்படையில், பின்வரும் செயல் நடவடிக்கையை சிறுநீரக நோயின் சமூகப் பொருளாதாரத் தாக்கங்களைக் குறைப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளாக முன்மொழிய முடியும். CKDu நோளை முன்கூட்டியே கண்டறிந்துகொள்வதற்கு பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களை சரியான முறையில் பரிசோதித்தல், நோயின் தன்மை, கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பின்பற்றுதல், சரியான சிகிச்சையைப் பெறுதல் ஆகியன பற்றி அவர்களுக்குப் போதித்தல், பாதிக்கப் பட்ட மக்களை மோசடிகார்களின் சுரண்டலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளல், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தரமான நீர் வடிகளை விலைக்கு வாங்குவதற்கான மானியங்களை வழங்குதல் அல்லது உதவுவதற்கான ஒரு பொறிமுறைத்திட்டத்தை அமுல்படுத்துதல், CKDu நோயாளிகளை சரியான

ஒரு முறையில் பராமரித்தல், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடிநீர் நோக்கம் நிமித்தம் மழை நீர் சேகரிப்பதை மீள ஊக்குவித்தல் முதலியனவாகும்.

ii. நீண்டகால நோக்கில், இந்த CKDu நோயை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நோயின் உண்மையான காரணத்தை அல்லது காரணங்களை உறுதிசெய்துகொள்வது இந்த முயற்சியில் மிக முக்கியமான தேவையாக இருக்கின்றது. பல துறை ஆராய்ச்சியினூடாக மாத்திரமே இது சாத்தியமாகும் எனத் தென்படுகின்றது. ஆகையால், நிபுணர்களின் மூலம் பல துறை ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு உதவுவதும் மற்றும் ஊக்குவிப்பதும் மிகவும் முக்கியமானது.

2. மேல் மாகாணத்திலுள்ள நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதற்கான காரணங்கள் மற்றும் அதன் பாதிப்புகள் **(R 475)**

**ஆராய்ச்சிக் குழு:**
திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் - ஒருங்கிணைப்பாளர்

**நிதியிடும் மூலம்:** திரட்டு நிதியம்

**நோக்கெல்லையும் குறிக்கோள்களும்:**
நெற் காணிகள் நெல் உற்பத்தி, விவசாயக் குடும்பங்களுக்கான வருமானத்தை உருவாக்குதல், உணவுப் பாதுகாப்பு, வடிகாலமைப்பு முறைமமையைப் பேணிப் பராமரித்தல் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல் முதலியன போன்ற பலதரப்பட்ட செயற்பாடுகளில் முக்கியமான ஒரு பங்கை வகிக்கின்றன. உணவு உற்பத்தி, தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஸ்தீரத்தன்மை முதலியவற்றில் நெற் காணிகளின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம் நெற் காணிகளை பாதுகாப்பதற்கான விதிமுறைகளையும் மற்றும் ஒழுங்குவிதிகளையும் சட்டமாக நடைமுறைப்படுத்தியுள்ளது.இந்த விதிமுறைகளும் ஒழுங்குவிதிகளும் இருந்தாலும் கூட, நெற் காணிகளை மண்ணிரப்பி எடுக்கும் செயற்பாடு கடந்த காலங்களாக அதிகரித்து வந்துள்ளது. ஈர வலயம் கடுமையான அளவில் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றது. குறிப்பாக இந்த நிலைமையை நகர மற்றும் அரை நகரப் பிரதேசங்களில் இனங்காணலாம். பல ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியது போல், அதிகமான நெற் காணிகள் சட்டவிரோதமான முறையில் மண்ணிரப்பி எடுக்கப்படுகின்றன. மேல் மாகாணமானது இத்தகைய மாகாணங்களில் ஒரு மாகாணமாகும். இந்த மாகாணம் நெற் காணிகளை மண்ணிரப்பி அல்லது அனுமதியின்றி எடுப்பதால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமை உணவு உற்பத்தி, சுற்றாடல் மற்றும் தேசிய பொருளாதாரம் என்பன சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதால், மக்கள் ஏன் நெற் காணிகளை மண்ணிரப்பி எடுக்கின்றனர், இவ்வாறு நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதால் சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் மீது

எத்தகைய தாக்கங்கள் மற்றும் விளைவுகள் காணப்படும் என்பன தொடர்பான விடயங்களை ஆராய்வது இந்த ஆய்வு முற்பட்டது. பின்வருவன இந்த ஆய்வின் முக்கிய குறிக்கோள்களாக இருந்தன.

i. மேல் மாகாணத்தில் நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதற்கான காரணங்களைக் கண்டறிதல்.
ii. நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதால் ஏற்படும் அதிகளவான சமூகப் பொருளாதாரத் தாக்கங்களை ஆராய்தல்.
iii. நெற் காணிகள் மண்ணிரப்பி எடுக்கப்படுவதைத் தடுக்கும்/கட்டுப்படுத்தும் போது உரிய உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் நிறுவன, சட்டமுறை சார்ந்த பலவீனங்கள் மற்றும் பிரச்சினைகள் என்பவற்றை இனங்காணுதல்.
iv. நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதால் எழுகின்ற பிரச்சினைகளைக் கையாளுவதற்கும் மற்றும் குறைப்பதற்குமான சிறந்த வழிமுறைகளை இனங்கண்டறிதல்.

**முடிவுகள்:**

i. மேல் மாகாண தாழ்நில உரிமையாளர்கள் நீர்ப்பாசனப் பிரச்சினைகள் (39%), தொழிலாளர் பற்றாக்குறை (29%), மண்ணிலுள்ள உவர் மற்றும் மணல் தன்மை (25%), நெல்லைப் பயிரிடுவதில் செலவு அதிகம் (21%) போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் இவர்களில் பெரும்பான்மையான நபர்கள் (70%) தமது நெற் காணிகளை பயிரிடாமல் கைவிட்டுள்ளனர்.
ii. நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதில் அதிகமான சம்பவங்கள் கைவிடப் பட்ட காணிகளுடன் சம்பந்தப்படுகின்றன. இதே நேரம் 18.3% சம்பவங்கள் காணி ஒதுக்கங்கள்/ஓவிட்ட/*தெனிய* ஆகியவற்றில் சம்பந்தப்படுகின்றன.
iii. அண்ணளவாக, மண்ணிரப்பி எடுக்கப்படும் 92% நெற் காணிகள் 10 அல்லது 10 இற்கு அதிமான வருடங்கள் பயிரிடப்படாமல் இருந்தன. மண்ணிரப்பி எடுக்கப்படுகின்ற நெற் காணிகளில் மேலும் அதிகமானவை மழை நீர்ப்பாசன முறைமையின் கீழ் பயிர்ச் செய்யப்பட்டிருந்தன.
iv. மேட்டுநிலங்களுக்கான கேள்வி அதிகரித்தல் (57%), காணிகள் பயிரிடாமல் நீண்ட காலத்திற்குக் கைவிடப்படுதல், (32%), விவசாயத்திலிருந்து தொழில் பிரிதொரு துறைக்கு மாறுதல் (12%) முதலியவற்றின் காரணமாக மக்கள் நெற் காணிகளை மண்ணிரப்பி எடுக்கின்றனர்.
v. அவ்வாறு மண்ணிரப்பி எடுக்கின்ற காணிகளை மக்கள் பிரதானமாக தமது கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் (64%) மற்றும் மேட்டுநிலப் பயிர் செய்கை நிமித்தம் பயன்படுத்துகின்றனர். சில மக்கள் சட்டமுறைப் பிரச்சினைகள்

காரணமாக அந்த மண்ணிரப்பி எடுக்கப்படுகின்ற காணிகளைப் பயன்படுத்த முடியாதுள்ளனர்.

vi. மக்கள் வழமையாக 2-3 நாட்களில் நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பர். இவர்கள் பொறுப்புடைய அதிகாரிகளின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளும் பொருட்டு குறிப்பாக வார இறுதி நாட்களில் அல்லது பொது விடுமுறை நாட்களில் இந்தச் செயற்பாட்டை மேற்கொள்கின்றனர். பல சந்தர்ப்பங்களில், மக்கள் கைவிடப்பட்டிருக்கின்ற ஏனைய நெற் காணிகளுக்கு அருகிலுள்ள தாழ்நிலங்களை (51.4%), மேட்டுநிலங்களை (48%), நீர்ப்பாசனக் கால்வாய்ப் பகுதிகளை (41.7%) மற்றும் பிரதான வீதிக்கு அருகிலுள்ள பகுதிகளை (41.1%) மண்ணிரப்பி எடுப்பதற்கு விரும்புகின்றனர்.

vii. ஏறக்குறைய 31.4% வீதமான சம்பவங்கள் நீர்ப்பாசனக் கால்வாய்களுக்கான தடைகளுடன் சம்பந்தப்படுகின்றன.

viii. நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதில் சம்பந்தப்படும் பெரும்பான்மை செயற்பாடுகள் (84%) சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 77.7% வீதமான செயற்பாடுகளுக்கு கமநல சேவை நிலையத்தில் (க.சே.நி.) இருந்து பெறப்படுகின்ற அனுமதிக்குக்கூட விண்ணப்பிக்கப்படாத செயற்பாடுகளாகும். எஞ்சிய 22.3% வீதமான செயற்பாடுகளுக்கு மக்கள் தமது க.சே.நி. நிலையத்திற்கான வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் சட்டமுறையற்ற விதத்தில் நெற் காணிகளை மண்ணிரப்பி எடுக்கின்றனர். 10 பொறுப்புடைய அரசாங்க நிறுவனங்கள் வேண்டுகோளை கருத்திற்கொள்ள வேண்டியிருப்பதால், சராசரியளவில் அனுமதியை வழங்குவதற்கு சுமார் 01 வருட காலம் எடுக்கும்.

ix. பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் (51%) நெற் காணிகளை மண்ணிரப்பி எடுக்கும் செயற்பாடுகள், மண்ணிரப்பி எடுக்கின்றவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு ARPA களின் மூலம் நிறுத்தப்பட்டன. அண்ணளவாக 23% செயற்பாடுகள் நீதிமன்றங்களுக்கு குறிப்பீடுசெய்யப்பட்டன. 6% வீதமான செயற்பாடுகள் பொலிஸ் கட்டளை ஒன்றின் நிறுத்தப்பட்டன. நீதிமன்றம் பல சந்தர்ப்பங்களில் மேலும் இவ்வாறு காணிகள் மண்ணிரப்பி எடுக்கப்படுவதை /அத்தகைய காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதை தடுப்பதற்கான உத்தரவுகளை வழங்கியுள்ளது (56%). இதே நேரம் 44% வீதமானவைகளுக்கு நெற் காணிகளிலுள்ள மண்ணை அகற்றி மீள்நிலைக்குக் கொண்டுவாமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

x. வெள்ளப்பெருக்குகள் (61%) மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்கள் தடைப்படுதல் (20.6%) என்பன நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதால் கிராமவாசிகள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளாகும்.

xi. பொதுவாக, ARPA கள் அல்லது க.சே.நி. தவிர்க்க முடியாத ஒரு காரணத்தின் பேரில் மாத்திரமே நெற் காணிகளை மண்ணிரப்பி எடுப்பதற்கு அனுமதியை வழங்குகின்றன. இந்த நிறுவனங்கள் அந்தக் காரணத்தின் அடிப்படையில் அனுமதியை வழங்கினால் (i) வேறு எந்தக் காணியும் தனியாளுக்கு உரித்தாக 40% இருக்கானது, (ii) குறிப்பாக அந்தக் காணிகளில் நெல்லை வளர்க்க

முடியாது - 25% (iii) அந்தக் காணிகள் மேட்டுநிலத் தன்மையில் இருக்கும் (20%).

xii. ARPA கள் மூலம் குறிப்பிடப்பட்டது போல், நியாயப்படுத்தக்கூடிய காரணம் இல்லாததால் மக்கள் நெற் காணிகளை சட்டவிரோதமாக மண்ணிரப்பி எடுக்கின்றனர் (78%). மக்கள் அதிகளவில் முதலிடுவதற்கும் மற்றும் காலத்தை செலவிடுவதற்கும் அதே நேரம் முயற்சிப்பதற்கும் விரும்புவதில்லை (51%).

xiii. அரசியல் தலையீடுகள் காரணமாக ஏறக்குறைய 20% வீதமான அதிகாரிகள் நெற் காணிகளை சட்டவிரோமாக மண்ணிரப்பி எடுப்பதற்கு எதிராக ஏதும் நடவடிக்கைகளை எடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

xiv. ARPA கள் அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்டால் இவர்கள் சவால்கள்/வலுக்காட்டாயமாக பாரதீனம் செய்ய நிலைக்கு ஆளாகுதல் (55.6%), தாக்குதல்களுக்கு ஆளாகுதல் (1.6%), பொது மக்களுக்கு மத்தியில் விமர்சனத்திற்கு உள்ளாகுதல் (19%), அலுவலகக் கடமைகள் விமர்ச்சிக்கப்படுதல் (27%) கிராமவாசிகளுக்கு மத்தியில் நல்ல எண்ணத்தை இழத்தல் (30.2%) முதலிய கடும் தனிப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டும்.

xv. கமக்காரர் அமைப்புகளிலிருந்து வரும் எதிர்ப்புகள் (46%), மூன்றாந்-தரப்பில் இருந்து வரும் அநாவசியமான செல்வாக்கு (44%), சொத்துரிமை சார்ந்த பிரச்சினைகள் (36%), காணிகளை ஒவிட்ட/தெனி/'கொட-மட காணிகள்' என வகைப்படுத்துதல் என்பன நெற் காணிகள் மண்ணிரப்பி எடுப்படுவதற்கு எதிராக நடவடிக்கையை மேற்கொள்கின்ற போது அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

xvi. விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றில் இணக்கப்பாடுகள் இல்லாமை (50.8%), விவசாயம் செய்வது கடினம் என்ற நெற் காணிகள் பற்றிய சட்டமுறையான பிரதியீட்டு சட்டஏற்பாடுகள் இல்லாமை (41%), சட்டரீதியில் தொழிற்படுவதற்கு பொலிஸ் பிரிவுக்கு போதிய அதிகாரம் இல்லாமை (39.7%) மற்றும் விதிமுறைகளின் கடுமையான தன்மை (30.2%) என்பவற்றை அதிகாரிகள் நெற் காணிகள் கட்டத்திலுள்ள பலவீனமான விடயங்கள் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

**சிபாரிசுகள்:**

i. அத்தகைய நெற் காணிகள் மேலும் மண்ணிரப்பி எடுக்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, கைவிடப்பட்ட அத்தகைய நெற் காணிகளில் மீண்டும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் வகையில் அரசாங்கம் உடனடியாக தொழிற்பட்டு சென்முறை ரீதியில் நம்பத்தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

ii. விவசாயம் செய்வது சாத்தியமில்லை என்ற காணிகளுக்கு, காணிகள் சட்டத்தில் பிரயீட்டு சட்டஏற்பாடுகள் இருக்க வேண்டும். அந்தக் காணிகள் இனங்காணப்பட்டு அத்தகைய காணிகளுக்கான பிரதியீட்டுப் பாவனைகள் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

iii. நெற் காணிகளை மண்ணிரப்பி எடுக்கும் செயற்பாட்டிற்கு எதிரான உரிய பல வித்தியாசமான நிறுவனங்களுக்கு மத்தியில் சரியான ஒரு இணைப்பை ஏற்படுத்துவது அவசியமாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒரு நெற் காணிக்கு அருகில் ஒரு கருத்திட்டத்தைச் செயற்படுத்துகின்ற போது, உரிய பிரதேச க.சே.நி. சிபாரிசைப் பெற்றுக்கொள்வதற்கு குறித்த கருத்திட்டம் தொடர்பான பிரேரணை அந்தந்த குறித்த கமநல சேவை நிலையங்களுக்கு குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும். மேலும், மணலை/களி மண்ணை அகழ அரசாங்கம் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது, அந்தச் செயற்பாடு குறித்த பிரதேசத்தில் விவசாயத்திற்கு எந்தவித தீங்குகளையும் ஏற்படுத்த மாட்டாது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளும் பொருட்டு பொறுப்புடைய அரசாங்க நிறுவனங்கள் க.சே.நி. அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

iv. நெற் காணிகள் மண்ணிரப்பி எடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கையை எடுக்கின்ற போது க.சே.நி. அலுவலர்கள் கடுமையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். ஆகையால், சட்டவிரோதமான முறையில் நெற் காணிகளை மண்ணிரப்பி எடுக்கும் செயலுக்கு எதிராக உடடியாக நடவடிக்கையை எடுக்கும் வகையில் ARPA கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் (உ-ம்: வனப் பாதுகாப்புத் திணைக்களம்) கடுமையான மேற்பார்வையின் கீழ் தனியான ஒரு பிரிவைத் தாபிப்பது அவசியமாகும்.

## ஏனைய செயற்பாடுகள்

### 1. வெளியீடுகளும் சமர்ப்பணங்களும்

இலங்கை மன்றக் கல்லூரியில் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டிற்கான SLCARP இன் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் போது 'பழங்களினதும் மரக்கறி வகைகளினதும் ஏற்றுமதி வளர்ச்சி, ஸ்தீரத்தன்மை மற்றும் பல்லினத்தன்மை ஆகியன பற்றிய ஆய்வுத்' தலைப்பில் திருமதி ஏ.எஸ்.எம். பெரேரா ஆராய்ச்சிப்பத்திர ஆவணத்தை சமர்ப்பித்தார்.

இலங்கை விவசாயப் பொருளாதார சங்கத்தின் எட்டாவது வருடாந்த ஆராய்ச்சி மாநாட்டின் போது 'நக்ல்ஸ் வனப் பாதுகாப்பு ஒதுக்கப் பிரதேசத்தில் ஏலக்காய்ப் பயிர்ச் செய்கை: சமூகப் பொருளாதார மற்றும் சுற்றாடல் நன்மைகள்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர ஆகியோர் ஒரு ஆராய்ச்சிப்பத்திர ஆவணத்தை சமர்ப்பித்தனர்.

ஆனந், குஜ்ராத் இந்தியா சர்தார் பேட்டெல் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பொருளாதார ஆராய்ச்சி நிலையத்தில் 2014 ஆம் ஆண்டு 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நடைபெற்ற விவசாய சந்தைப்படுத்தல் பற்றிய 28-வது தேசிய மாநாட்டின் போது 'வருமானப் பல்லினப்படுத்தல் திறமுறைத்திட்டம் ஒன்றாக பெண்களுக்கான பங்குபற்றலுக்கான சாத்தியங்கள்: இலங்கையின் நேரடி மரக்கறி வகைகளின் சந்தைப்படுத்தல்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு இ.ஏ.சி. பிரியங்கர ஒரு ஆராய்ச்சிப்பத்திர ஆவணத்தை சமர்ப்பித்தார்.

2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி பேராதெனியப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சர்வதேச ஆராய்ச்சி சார்ந்த அமர்வுகளின் (IPURSE) போது இலங்கையின் சோள முன்னேற்ற ஒப்பந்தங்கள்: அறுவடைக்கு முன்-நுகர்வுப் பொருட்கள் சந்தைப்படுத்தல் என்ற முன்னேற்ற ஒப்பந்தங்கள்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய ஒரு ஆராய்ச்சிப்பத்திர ஆவணத்தை சமர்ப்பித்தார்.

2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதி அவுஸ்திரேலியா மொனாஸ் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் வியாபார மற்றும் பொருளியல் பீடத்தில் நடைபெற்ற சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் போது ஆகக்குறைந்த அரிசி விலைக் கொள்கைக்கான விஷேட குறிப்பு: இலங்கையில் அரிசியை சந்தைப்படுத்துவது பற்றிய அரசாங்கத்தின் ஒழுங்குவிதி' என்ற தலைப்பில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன என்பவர் ஒரு ஆராய்ச்சிப்பத்திர ஆவணத்தை சமர்ப்பித்தார்.

நைஜீரியா - உமென்ஸ் கூட்டுறவுக் கல்விக் கல்லூரியில் (தொழில்நுட்ப) யூலை மாதம் 1-4 ஆம் திகதி வரை நடைபெற்ற விவசாய விஞ்ஞானப் பொறியியல் (ICASE) பற்றிய சர்வதேச மாநாட்டின் போது 'மரக்கறி வகைகளில் காணப்படும் சுப்பர் மார்கெட்டு சந்தைப்படுத்தல் மார்க்கத்திற்கான விஷேட குறிப்பு: இலங்கை தோட்டக் கலைத் துறை ஆய்வுகள் மதிப்பீடு' என்ற தலைப்பில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன என்பவர் ஒரு ஆராய்ச்சிப்பத்திர ஆவணத்தை வெளியிட்டார். இது http://www.ijsr.net/ijsrcp/nso ng/2.pdf என்ற இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது.

சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் தாய்லாந்து பேங்கொக் நகரத்தில் நடத்தப்பட்ட அரிசி தொடர்பான 4-வது சர்வதேச மாநாட்டின் போது 'இலங்கையில் இடை விவசாயக் காலநிலை வலய நெல் உற்பத்தியின் வளர்ச்சியும் மற்றும் ஸ்தீரத்தன்மையும்' என்ற தலைப்பில் ஒரு ஆய்வுத் துண்டுப்பிரசுரத்தை ஆராய்ச்சி உத்தியோகத்தல் திருமதி ஏ.எம்.எஸ். பெரேரா முன்வைத்தார்.

## 2. நிபுணர் குழுக்களில் பணியாற்றுதல்

பிரிவுத் தலைவர் கலாநிதி ரீ.ஏ. தர்மரத்ன வர்த்தக வாணிப மற்றும் கூட்டுறவுகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற மீகொட பொருளாதார நிலையத்தின் நம்பிக்கையாளர்கள் சபையின் ஒரு உறுப்பினராக 2014 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகின்றார்.

கலாநிதி ரீ.ஏ. தர்மரத்ன இலங்கை ஜனாதிபதி செயலக அலுவலகத்தின் உணவுகள் கொள்வனவுப் பிரிவின் கீழ் வருகின்ற முற்படைகளுக்கான உணவுப் பொருட்கள் கொள்வனவு பற்றிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (தொ.ம.கு.) ஒரு குழு உறுப்பினராக தொடர்ந்தும் இருந்து வருகின்றார்.

சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜி.ஜி. த டப்ளியூ. சமரசிங்க லங்கா வோட்டர் பார்ட்னர்சிப் என்ற அமைப்புக்கான நெறிப்படுத்தல் குழு உறுப்பினராக 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் பணியாற்றி வருகின்றார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு எச்.ஜே.சி. ஜயசூரிய 'எமக்குத் தேவையான பாதுகாப்பான இலங்கை' என்ற அமைப்பினது குழு உறுப்பினர் ஒருவராக பணியாற்றுகின்றார் - டீ.எம். மாநாடு, இலங்கை, 2014 செப்டம்பர் 24-26.

## 3. விஷேட அறிக்கைகள்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர ஆகியோர் நக்லெஸ்

வனப் பாதுகாப்பு ஒதுக்கத்தில் ஏலக்காய் பயிர்ச் செய்கையினால் ஏற்படும் சமூகப் பொருளாதார சுற்றாடல் நன்மைகள்: என்ற தலைப்பில் ஒரு கொள்கை சுருக்க ஆவணத்தைத் தயாரித்தனர்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு இ.ஏ.சி. பிரியங்கர என்பவர் '2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரிசி விலைகள் வழமைக்கு மாறாக அதிகரித்ததற்கான காரணங்கள்' தொடர்பான ஒரு அறிக்கையைத் தயாரித்து 2014 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் கௌரவ கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பித்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.என்.ஏ. விஜேசூரிய 'அரிசியின் விலை வழமைக்கு மாறாக அதிகரித்தமைக்கான அடிப்படைக் காரணம்' தொடர்பான ஒரு அறிக்கையைத் தயாரித்து 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் கௌரவ கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பித்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய 'அரிசியின் இன்றைய சந்தை நிலைமை' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையைத் தயாரித்து 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் கமத்தொழில் அமைச்சரிடம் சமர்ப்பித்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன என்பவர் 'அரிசியின் வழமைக்கு மாறான விலை அதிகரிப்பு' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையைத் தயாரித்து 2014 ஆண்டு ஏப்ரல் மாதம் கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பித்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன என்பவர் 'அரிசியின் உயர் விலை' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையைத் தயாரித்து 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கமத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பித்தார்.

3. **உடனுக்குடனான வானொலி நிகழ்ச்சித்திட்டம்**

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன இறக்குமதி விலை நடக்கை மற்றும் உணவுப் பொருட்கள் சந்தை நிலை ஆகியன தொடர்பில் 2014 ஆம் ஆண்டு பி.ப. 6.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய 'கொவிகெதரின் மஹ கெதரட்ட' என்ற ஒரு வானொலி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன 2014 ஆம் ஆண்டு முழுதிலும் த்றீ எப்எம் வானொலி அலைவரிசைக்கு 'பெரும்பான்மையான உணவு

நுகர்வுப் பொருட்களின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் செய்திகளை வழங்கி உதவினார்.

**5. பயிற்சி**

கலாநிதி ரீ.ஏ. தர்மரத்த 2014 கல்வியாண்டில் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் பீடத்தினால் நடத்திய பொருளியல் விஷேட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைப் பயின்ற நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு 'அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம்' பற்றிய பாடநெறி தொடர்பான விரிவுரைகள், இறுதிப் பரீட்சைகள், ஏனைய மதிப்பீடு சார்ந்த செயற்பாடுகளை மேற்கொண்டு ஒருங்கிணைத்தார்.

ஆராய்ச்சியாளர்/தலைவர்/ MFPAD திருமதி சி.பி. ஹத்துருசிங்க ஹெ.வி.ஆ.ப.நி. இல் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான நாட்களில் நடைபெற்ற 'பழ மற்றும் மரக்கறி வகை விநியோகச் சங்கிலிகளில் ஏற்படும் அறுவடைக்குப் பிற்பட்ட கால இழப்புகளைக் குறைத்தல்' என்ற தலைப்பிலான CIRDAP/HARTI கூட்டொத்துழைப்பு சர்வதேச வேலையரங்கை ஒருங்கிணைத்தார். இதனை நடத்துவதற்கு இவரின் பிரிவிலுள்ள அனைத்து ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் இவருக்கு உதவினர்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜி.ஜி. த எல்.டப்ளியூ. சமரசிங்க என்பவர் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்காக கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் ஹெ.வி.ஆ.ப.நி. ஆகியன ஒன்றிணைந்து நடத்திய விரிவுரைகளுக்கான வள நபராகத் தொழிற்பட்டார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க 'நக்லஸ் வன ஒதுக்கப் பாகாப்புப் பிரதேசத்தில் ஏலக்காய் பயிர்ச் செய்கையின் சமூகப் பொருளாதார நன்மைகள் - 2014' என்ற தலைப்பிலான ஆராய்ச்சி ஆய்வுக்கான ஒரு துணை வேலையரங்கை நடத்தினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு எச்.ஜே.சி. ஜயசூரிய CICI விவசாய வர்த்தக (பயிர் பாதுகாப்பு) நிறுவனத்தினால் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட ஒரு (2 நாள்) பயிற் நிகழ்ச்சித்திட்டத்தில் வள நபராக இருந்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஜே.ஏ.யூ.பி. ஜயசிங்க இலங்கை சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அமைச்சின் உயிர்பல்லினத்திற்கான செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பல்லினத்தன்மை மற்றும் உயிரியல் சுற்றாடல் சேவைகள் மதிப்பு அமர்வு மற்றும் சம்பவ ஆய்வு முன்னேற்ற சமர்ப்பண வேலையரங்கு (2014) என்ற வேலையரங்குக்கான ஒரு வள நபராக விளங்கினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு இ.ஏ.சி. பிரியங்கர 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 17-18 ஆம் திகதிகளில் சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'பூகோள சுற்றாடல் வசதி பற்றிய தேசிய சம்பாஷணை வேலையரங்குக்குப் பங்களிப்புச்செய்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் இ.ஏ.சி. பிரியங்கர கொழும்புப் பல்கலைக்கழகப் பொருளியல் பீடத்தின் பட்டதாரி மாணவர்களுக்கு (2-ஆம் ஆண்டு) 'WTO மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்' என்ற தலைப்பில் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இரண்டு விரிவுரைகளை நிகழ்த்தினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு இ.ஏ.சி. பிரியங்கர ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகப் பொருளியல் பீட இறுதி ஆண்டு பட்டதாரி மாணவர்களுக்கு 'சந்தைப்படுத்தல் கொள்கை நடவடிக்கையில் சமூகப் பொருளாதார ஆராய்ச்சி' என்ற தலைப்பில் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் ஒரு விரிவுரையை நிகழ்த்தினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.ஏ.என். விஜேசூரிய என்பவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டில் பயிலும் **BA** பட்டதாரி மாணவர்களுக்கு (பொருளியல்) 'மிலேனியம் அபிவிருத்திக் குறிக்கோள்கள்' என்ற தலைப்பில் ஒரு விரிவுரையை நிகழ்த்தினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன திசம்பர் மாதம் 15 ஆம் திகதி ஹெ.வி.ஆ.ப.நி. அலுவலகத்தில் 'கல்வி சார்ந்த எழுத்தியலுக்கான குறிப்புகளும் சுருக்கமும்' என்ற தலைப்பில் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையினால் (இ.வி.ஆ.கொ.ச.) நடத்தப்பட்ட கொள்கையில் இருந்து செயன்முறைக்கு என்ற ஆராய்ச்சி அடிப்படையிலான சான்று: இலங்கை நிலை பெறுதகு அபிவிருத்திற்கான ஆராய்ச்சி ஆற்றலை விருத்திசெய்தல்' என்ற வேலையரங்குக்கு ஒரு விரிவுரையை வழங்கினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு டப்ளியூ.எச்.டீ. பிரியங்கர, நேஷன் ட்ரஸ்ட் வங்கியின் வேண்டுகோளின் பேரில் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி நுவரெலியாவில் 'இலங்கையில் மரக்கறி வகை உற்பத்தியின் ஒழுங்கமைப்பு, இயக்கச்செயற்பாடு மற்றும் சந்தைப்படுத்தல்' என்ற தலைப்பில் நடைபெற்ற வர்த்தக மாநாட்டில் ஒரு விரிவுரையை நிகழ்த்தினார்.

திருமதி ஏ.எம்.எஸ். பெரேரா சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவகம், சர்வதேச நீர் வள முகாமைத்துவ நிறுவகம் மற்றும் ஹெ.வி.ஆ.ப.நி., இலங்கை விவசாயப் பொருளியல் அமைப்பு ஆகியன ஒன்றிணைந்து 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் ஹெ.வி.ஆ.ப.நி. இல் ஏற்பாடு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கு

8-வது விவசாயப் பொருளாதார அமைப்பின் வருடாந்த ஆராய்ச்சிக் கூட்டத்தை ஒழுங்கமைப்பதற்குப் பங்களிப்புச்செய்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி பீ.ஏ.டீ.எஸ். பமுணுஆராச்சி 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 15 ஆம் திகதி கொழும்பிலுள்ள இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையினால் (இ.வி.ஆ.கொ.ச.) ஏற்பாடு செய்யப்பட்ட கொள்கை அடிப்படையிலான சான்றை வகுத்தமைக்கும் வகையில் விவசாய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி ஆற்றலை விருத்தி செய்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு வள நபராகப் பங்களிப்புச் செய்தார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி பீ.ஏ.டீ.எஸ். பமுணுஆராச்சி 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்கான கொள்கை ஆக்கல் பற்றிய சமூகப் பொருளாதார ஆராய்ச்சியின் பங்களிப்பு தொடர்பான வேலையரங்கில் ஒருங்கிணைந்து அதில் வள நபராக செயற்பட்டார்.

## தரவு மற்றும் தகவல் முகாமைத்துவ (த.த.மு.) பிரிவு

இந்தப் பிரிவில் இரண்டு அலகுகள் அடங்குகின்றன. விவசாயத் தரவுத் தள அலகு, தரவுகள் படிமுறைப்படுத்தல் முதலிய அலகுகளாகும். தரவுத் தளம் விவசாயத் துறையில் அபிவிருத்திற்கான கொளகை ஆக்கல், சமூக விஞ்ஞான ஆராய்ச்சித் திட்டமிடல் ஆகியவற்றுக்கான ஒரு வசதிகள் தளமாக அமைந்துள்ளது. தரவுத் தளத்தின் தாபிப்புக்கான முக்கிய அடிப்படைக் கோட்பாடுகள் பின்வருமாறு:

i. ஏற்கெனவே காணப்படும் தரமான தரவுகளுக்கான உடனடியான சமவாய்ப்புப் பிரவேசத்திற்கு வசதியளித்தல். அத்தகைய தரவுத் தளங்களை மைய ரீதியில் அமையச்செய்தல், அத்தகைய சேவைகளை தானியக்கப்படுத்துதல்.

ii. தகவல்களிலும் தேவையான புதிய தகவல்களிலும் நிலவும் இடைவெளிகளைக் கண்டறிவதற்கும் புதிய தரவுகள் உருவாக்கத்தை செயலூக்கப்படுத்துவதற்கும் உரிய தரமான தரவுகள் தொடர்பில் ஒரு ஒருங்கிணைப்பு முகவராண்மையாக தொழிற்படுதல்.

iii. விஷேட மதிப்பாய்வுகள் மற்றும் ஆய்வுகள் என்பவற்றினூடாக சேகரிக்கப்பட்ட தகவல்களை அந்தத் தகவல்களின் சேகரிப்பு நோக்கத்திற்கு மேலதிகமாக பல நோக்கங்களின் நிமித்தம் அவற்றை பயன்படுத்துதல். ஆதலால் இன்றும் மற்றும் எதிர்காலத்திலும் அத்தகைய தகவல்களை சமூக விஞ்ஞானிகளுக்கான பெறுமதி மிக்க வளங்களாக ஆக்குதல். தரவுகளின் பண்புகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கும் போதும் தரவுகளின் பெறுமதி அதிகரிப்படுதல்.

iv. ஆராய்ச்சியாளர்கள் பல தரப்பட்ட தகவல் மூலங்களில் இருந்து தகவல்களை சேரிக்கக்கூடிய ஆராய்ச்சி சூழல் அடிப்படையிலான ஒரு சமூக விஞ்ஞான விடயத்தினுள் தரவுத் தளம் பொருத்தமான விதத்தில் அமைக்கப்படுதல் மற்றும் தமது சொந்த ஆய்வுகளில் இருந்து தகவல்களை உருவாக்கிக் கொள்ளல்.

v. குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மத்திய வங்கி என்பன தற்பொழுது தகவல்கள் சேகரிக்கப்படுகின்ற முக்கிய தகவல் மூலங்களாக விளங்குகின்றன.

தரவுத் தளத்துடன் சம்பந்தமான செயற்பாடுகள் பின்வரும் ஆறு வகுதிகளின் கீழ் உள்ளடங்கியிருக்கும்.

i. தரவு சேகரித்தல்
ii. குறியீடு இடுதல்
iii. உறுதிப்படுத்தல்
iv. களஞ்சியப்படுத்தல்
v. தேவையான போது மீளப்பெற்றுக்கொள்ளல்
vi. பகுப்பாய்வுசெய்தல்

அந்தந்த நிறுவனங்களினால் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள், நூல்கள் மற்றும் அவற்றின் இணையத்தளங்கள் போன்ற மேற்குறித்த தகவல் மூலங்களிலிருந்து

தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. உணவு நுகர்வுப் பொருட்களின் விலைகள் தொடர்பான தரவுகள் ஹெ.வி.ஆ.ப.நி. உணவுக் கொள்கை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவிலிருந்து சேகரிக்கப்படுகின்றது.

குறித்த ஆண்டு காலப் பகுதியில், மேலும் சிறப்பாக செயலாற்றுகையின் நிமித்தம் தரவுத் தள தகவல் முறைமை மேலும் இற்றைப்படுத்தப்பட்டது. பின்வரும் சுட்டிகள் குறித்த ஆண்டு காலப் பகுதியின் போது இற்றைப்படுத்தப்பட்டன.

**நிலப் பாவனை:** 2011/2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நெற் காணிகளில் விளைச்சல் அதிகரிக்கப்பட்டது. 2012/13 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதாவது 2013 சிறுபோகத்தில் நெற் காணிகளில் நெல்லும் ஏனைய வயல் பயிர்களும் பயிரிடப்பட்டன.

பயிர் பராமரிப்பு: 2012/2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதாவது 2013 சிறுபோகத்தில் மொத்த அளவிலான விளைச்சலும் மற்றும் தேறிய அளவிலான விளைச்சலும் பெறப்பட்டன.

| | |
|---|---|
| **சந்தைப்படுத்தல்:** | உணவுப் பொருட்களின் சராசரி சில்லறை விலை - 2012<br>உணவுப் பொருட்களின் சராசரி உற்பத்தியாளர் விலை - 2012<br>கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 2013 ஆம் ஆண்டு உணவுப் பொருட்களின் மொத்த சராசரி விலைகள் |
| **உற்பத்தி:** | உணவுப் பயிர்கள் உற்பத்தி 2012/13 பெரும்போகம், 2013 சிறுபோகம்<br>சராசரி நெல் விளைச்சல் 2012/13 பெரும்போகம், 2013 சிறுபோகம் |
| **உற்பத்திச் செலவு:** | நெல் உற்பத்திச் செலவு (நீர்ப்பாசனம் செய்யப்பட்ட மற்றும் மழை நீர் பாய்ச்சப்பட்ட) 2011/12 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம்<br>ஏனைய வயல் பயிர்களின் உற்பத்திச் செலவு (நீர்ப்பாசனம் செய்யப்பட்ட மற்றும் மழை நீர் பாய்ச்சப்பட்ட) 2011/12 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம்<br>நெல் மற்றும் ஏனைய வயல் பயிர்களின் உற்பத்தி அலகு ஒன்றுக்கான செலவு 2011/12 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம் |
| **வருமானம்:** | ஒரு ஏக்கர் நெல்லுக்கான மொத்த விளைச்சல் (நீர்ப்பாசனம் செய்யப்பட்ட மற்றும் மழை நீர் பாய்ச்சப்பட்ட) 2011/12 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம் |

ஒரு ஏக்கர் நெல்லுக்கான தேறிய விளைச்சல் (நீர்ப்பாசனம் செய்யப்பட்ட மற்றும் மழை நீர் பாய்ச்சப்பட்ட) 2011/12 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம்

**வேண்டுகோளின் பேரில் தரவுகளை வழங்குதல்**

பிரிவினால் விவசாயத் தகவல்களுக்காக உள்ளக மற்றும் வெளிவாரி பயனர்கள் இடமிருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள்கள் பற்றிய சுருக்கமான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நிறைவேற்றப்பட்ட உள்ளக வேண்டுகோள்களின் எண்ணிக்கை | = 78 |
| நிறைவேற்றப்பட்ட வெளிவாரி வேண்டுகோள்களின் எண்ணிக்கை | = 45 |
| **கிடைக்கப்பெற்ற மொத்த வேண்டுகோள்கள்** | **= 123** |

**நிறுவனம் சார்ந்த மதிப்பாய்வுகளிலுள்ள கள மட்டத்திலான தரவுகள் சேகரிப்பில் பங்கேற்றல்**

a) R 472 ஏனைய வயல் பயிர்களில் தரம் குறைந்த பொறிமுறைத்திட்டத்தைப் பாதிக்கின்ற சமூகப் பொருளாதாரக் காரணிகளை இனங்கண்டறிதல்

b) R 476 வசனைப் பயிர்களின் கைத்தொழில் பயனும் அபிவிருத்திற்கான எதிர்பார்ப்புகளும்

**தரவுகளை சேகரிப்பதற்காகப் பயன்படுத்திய புத்தகங்கள்**

a) மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை - 2013
b) மத்திய வங்கியின் சமூகப் பொருளாதாரப் புள்ளிவிபரங்கள் அறிக்கை - 2013
c) குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் திரட்டு - 2012
d) நெல் மற்றும் ஏனைய வயல் பயிர்களின் பயிர்ச் செய்கைச் செலவு - 2011/12 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம் தொடர்பாகன அறிக்கை
e) சுங்கத் திணைக்களத்தின் வெளிக்கள வர்த்தகப் புள்ளிவிபரங்கள் அறிக்கை - 2013

ஒரு விவசாயத் தரவுத் தளத்தைப் பேணிப்பராமரிப்பதற்கு மேலதிகமாக நிறுவனம் மேற்கொண்டிருந்த மாதிரி மதிப்பாய்வுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வுசெய்யும் பணியும் இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கருத்திட்டத்தின் தலைப்பும் கருத்திட்டத்தின் குறியீடும்**

R 473 - ஏற்றுமதிச் சந்தைகளுக்கான மரக்கறி வகை உற்பத்தியாளர்களின் / விநியோகத்தர்களின் பிரச்சினைகளும் சவால்களும்
R 484 - மாவு ஆறக் கருத்திட்டத்தின் சமூகப் பொருளாதாரத் தாக்கங்கள்

R 478 - இலங்கையின் பாரம்பரிய அரிசி உப துறை: இன்றைய நிலை, தடைகள் மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகள்
R 476 - வாசனைப் பயிர்களின் கைத்தொழில் பயன்பாடுகளும் அபிவிருத்திற்கான எதிர்பார்ப்புகளும்
R 485 - தோட்ட மைய கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பீடு
R 472 - ஏனைய வயல் பயிர்களில் தரம் குறைந்த பொறிமுறைத்திட்டத்தைப் பாதிக்கின்ற சமூகப் பொருளாதாரக் காரணிகளை இங்காணுதல்

உள்ளக ஆராய்ச்சி ஆய்வுகளின் தகவல்கள் படிமுறைப்படுத்தலுக்கு மேலதிகமாக, இ.அ. மற்றும் ஐ.அ. ஆகிய இணைந்து நடத்திய ‘இணைத் தேவைகள் மதிப்பீட்டு ஆய்வு’ என்ற பெயரில் நிதியிடப்பட்ட ஒரு கருத்திட்டத்தையும் இந்தப் பிரிவு ஏற்று நிறைவேற்றியது.

## நூலகம்

ஹெ.வி.ஆ.ப.நி. ஆராய்ச்சிப் பதவியணி, அக்கறையுடைய ஏனைய நபர்கள், நிறுவனங்கள் போன்ற தரப்புகளின் நன்மை கருதி விவசாயத் துறை சம்பந்தமான தகவல்களை சேகரித்தல், தொகுத்தல், தேவையான போது மீள்பெற்றுக்கொடுத்தல் மற்றும் அத்தகைய தகவல்களைப் பரப்புதல் என்பன இந்த நூலகத்தின் முக்கிய குறிக்கோள்களாக விளங்குகின்றன. குறித்த ஆண்டு காலப் பகுதியில், பதவியணி 576 புத்தகங்களையும், 29 குறிப்புப் புத்தகங்களையும் 100 சஞ்சிகைகளையும் தமது குறிப்புத் தேவைகளுக்காக நூலகத்திலிருந்து இரவலாகப் பெற்றிருந்தனர். குறித்த ஆண்டு காலப் பகுதியில் இந்த நூலகத்திற்கு குறிப்புகளைப் பெற்றுக் கொள்ளும் நிமித்தம் வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 230 ஆக இருந்தது.

### புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளல்

குறித்த ஆண்டு காலப் பகுதியில், புத்தகத் தொகுப்புக்காக 130 புத்தகங்கள் சேர்க்கப்பட்டன. இவற்றில் விலைக்கு வாங்கிய 42 புத்தகங்களும் மற்றும் கருனை அடிப்படையில் வெளியீடுகள் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த 88 புத்தங்களும் அடங்கியிருந்தன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து கருனை அல்லது பரிமாற்றல் அடிப்படையில் அதிக எண்ணிக்கையான வழமையான இதழ்களும், செய்தித்தாள்களும் மற்றும் வருடாந்த அறிக்கைகளும் கிடைத்தன. இந்த நூலகம் குறித்த ஆண்டு காலப் பகுதியில் 08 வெளிநாட்டு சஞ்சிகைகளையும் (96 அம்சங்களை உள்ளடக்கிய) அதே நேரம் 06 உள்நாட்டு சஞ்சிகைகளையும் அன்பளிப்புச் செய்தது.

### நூலக சேவைகள்

இலக்கணத் தேடல்கள், குறிப்பு சார்ந்த சேவைகள், நடைமுறை விழிப்புணர்வு சேவைகள், புகைப்படப்பிரதியெடுக்கும் சேவைகள் என்பன போன்ற தகவல் மற்றும் ஆவணமயப்படுத்தல் சேவைகள் ஆராய்ச்சிப் பதவியணியினருக்கும் அதே நேரம் வெளிக்களப் பயனர்களுக்கும் வழங்கப்பட்டன.

நூலகத்தில் நிறுவப்பட்டிருக்கின்ற ADSL வசதியைக் கொண்டு ஆராய்ச்சிப் பதவி அணியினருக்கு தகவல் வசதி அடிப்படையிலான இன்டர்நெட் தகவல் வசதிக்கான பிரவேசம் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. பல விடயங்கள் தொடர்பான செய்திக் கட்டுரைகளை சேகரித்தல், விரைவான குறிப்பின் நிமித்தம் அந்தக் கட்டுரைகளை சூசிகைப்படுத்தல் ஆகிய பணி ஆராய்ச்சிப் பதவியணியினருக்கும் அதே நேரம் வெளிவாரிப் பயனாளர்களுக்கும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

### நூலகத்திற்கு இடையிலான கூட்டுறவு (ILC)

இந்த நூலகம் விவசாய நூலகங்கள் தகவல் வலையமைப்பின் (AGRINET) ஒரு உறுப்புரிமை பெற்ற நூலகமாகும். வி.ஆ.கொ.ச. நூலகம் மிக முக்கியமான ஒரு நூலமாகத் தொழிற்படுகின்றது. எமது நூலகம் AGRINET SDCP திட்டத்தில்

உள்ளடக்கப் பக்கங்களின் தரவுத் தளத்தின் தெரிவுக்குரிய தகவல் பரம்பல்) தொடர்ந்தும் பங்கேற்றது.

பின்வரும் தரவுத் தளங்களுக்கு நூலகத் தகவல் தொகுப்பில் இருந்து வழங்கிய சுயவிபரக் குறிப்புகள் AGRINET மூலம் பேணப்பட்டன.

1. தேசிய விவசாய சுயவிபரக் குறிப்புகள் (NAB)
2. சுதேசிய அறிவு பற்றிய சுயவிபரக் குறிப்புகள் (விவாசயம் சம்பந்தமான)

2014 ஆம் ஆண்டிற்கான தேசிய ஒன்றிய குறிப்பு விபரங்களை இற்றைப்படுத்தும் பொருட்டு நூலகத் தரவுத் தளத்திலிருந்து தேசயி நூலக சேவைகள் சபைக்கு சுய விபரக் குறிப்புகள் வழங்கப்பட்டன.

**நிறுவனத்தின் வெளியீடுகளை டிஜிட்டல்செய்தல்**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் தேசிய டிஜிட்டல் கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டு வரையான நிறுவகத்தின் வெளியீடுகளை வெற்றிகரமான முறையில் டிஜிட்டல் செய்தது. (http://harti.nsf.ac.lk/) என்ற இதன் இணையத்தளத்திற்குப் பிரவேசித்து பார்வையிடலாம்.

நிறுவனம் சார்ந்த ஒரு e-தகவல் களஞ்சியத்தைத் தாபிப்பதும் மற்றும் நிறுவனத்தின் வெளியீடுகளுக்கு துரிதமான மேம்பட்ட உடனுக்குடனான ஒரு பிரவேசத்தை வழங்குவதும் இந்தக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

**வெளியீடுகள் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிறுவகத்தின் நூற்று இருபத்தைந்து (125) வெளியீடுகள் (நூல்கள் அல்லது சஞ்சிகைகள் கீழ்காணும் **நூலகங்களுக்கு** பரிமாற்றல் அடிப்படையில் வழங்கப் பட்டன.

1) விவசாயப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் நூலகம்
2) விவசாயத் திணைக்களத்தின் சமூகப் பொருளாதார நிலையப் பிரிவு
3) குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் நூலகம்
4) தேசிய திட்டமிடல் திணைக்கள நிலையத்தின் (தகவல் அபிவிருத்தி) நூலகம்
5) வறுமை பற்றிய பகுப்பாய்வுக்கான நிலையம் (CEPA)
6) பாராளுமன்ற நூலகம்
7) தேசிய நூலக மற்றும் சேவைகள் சபை
8) தேசிய விஞ்ஞான மன்றத்தின் நூலகம்
9) வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நூலகம்
10) யாழ்ப்பாண பொது நூலகம்
11) சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகத்தின் நூலகம்
12) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நூலகம்
13) இலங்கை மகாவலி அதிகார சபையின் நூலகம்

14) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
15) களணிப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
16) ருஹுணுப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
17) ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
18) பேராதெனியப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
19) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
20) ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
21) ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
22) சப்பரகமுவப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
23) கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
24) மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
25) வயம்பப் பல்கலைக்கழகத்தின் நூலகம்
26) அனுராபுர பிக்குகள் பல்கலைக்கழகத்தின் நூலகம்
27) பிக்கு பாளிப் பல்கலைக்கழகத்தின் நூலகம்

மேற்குறித்த நூலகங்களிலிருந்து எமக்கு எண்பத்து எட்டு (88) எண்ணிக்கையான வெளியீடுகள் கிடைக்கப் பெற்றன.

வெளியீட்டுப் பிரிவு

SOP/வெளியீடு/நூலக பிரிவுத் தலைவரின் செயல்நோக்கின் கீழ் இயங்கும் எமது நிறுவகத்தின் வெளியீட்டுப் பிரிவு ஆராய்ச்சி அறிக்கைகள், விஷேட அறிக்கைள், சஞ்சிகைகள், செய்திக்கட்டுரைகள், செய்தித்தாள்கள், கைந்நூல்கள், சிறுநூல்கள், தகவல்கள் அடங்கிய ஏனைய நூல்கள் என்பவற்றை மூன்று மொழிகளிலும் பதிப்பு செய்து வெளியிடுவதில் ஈடுபட்டு வருகின்றது

குறித்த ஆண்டு காலப் பகுதியில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொத்தம் 12 ஆராய்ச்சி அறிக்கைகள் வெளியிடப்பட்டன. இவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

i. இலங்கையின் அம்பாந்தோட்டை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் காணப்படும் அரிசி ஆலைக் கைத்தொழிலின் கட்டமைப்பு, நடக்கை மற்றும் செயல்திறன் - (ER 163).
ii. இலங்கையின் மலைநாட்டு மரக்கறிப் பயிர்ச் செய்கையில் பூச்சிநாசினிகளின் பயன்பாடு பற்றிய மதிப்பீடு - (ER 164).
iii. வறுமை ஒழிப்பிலுள்ள சமுர்த்தி வங்கிகள் பற்றிய ஒரு மதிப்பீட்டு ஆய்வு (ER 165)
iv. சூரிய சக்தியில் இயங்கும் சொட்டு நீர்ப்பாசனக் கருத்திட்டம் பற்றிய மதிப்பீடு - கட்டம் 2 - (ER 166).
v. இயற்கை உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதிச் சந்தை - இன்றைய நிலை - தடைகள் மற்றும் எதிர்கால நோக்கெல்லை (ER 167)
vi. பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலுள்ள மரக்கறி வகைகளை சேகரிக்கும் நிலையங்கள்: தாக்கங்களும் கற்றுக்கொண்ட பாடங்களும் (ER 168)
vii. இலங்கையின் வட மாகாணத்திலுள்ள விவசாய சந்தைப்படுத்தல் முறைமைகள் பற்றிய ஒரு முழுமொத்த மதிப்பாய்வு (ER 169)
viii. பால் உற்பத்தி அபிவிருத்தி சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளின் தாக்கங்கள் மற்றும் அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களும்: உலர் வலய வாழ்வாதாரத் துணைப் பங்காளித்துவ நிகழ்ச்சித்திட்டம் (2006-2012) (ER 170)
ix. திவிநெகும விவசாயப் பிரிவு பற்றிய மதிப்பீடு - வீட்டுத் தோட்டங்கள் (ER 171)
x. இலங்கையிலுள்ள உணவு நுகர்வு மாதிரி (ER 172)
xi. இலங்கையின் ஏனைய வயல் பயிர் (ஏ.வ.ப.) விதைகள் பற்றிய முறைமையை வலுப்படுத்துவது தொடர்பான வேலையரங்கு நடைமுறைகள் (EO 20)
xii. இலங்கையின் சிறு குளங்கள் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றின் கீழ் மழை நீர் பாய்ச்சப்படும் பிரதேசங்களிலுள்ள கமக்காரர் அமைப்பு பற்றிய செயலாற்றுகை மதிப்பீடு (SR 57) - (சிங்கள அறிக்கை)

**மேற்குறித்தவை தவிர, குறித்த ஆண்டு காலப் பகுதியில் பின்வரும் வெளியீடுகளும் வெளியிடப்பட்டன.**

i. 16 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆய்வுகள் சஞ்சிகைத் தொகுதி - 1 மற்றும் 2
ii. 01 ஆம் இலக்கச் செய்திக்கட்டுரை - 35

iii. ‘புவத் ஹசுன’ தொகுதி - 35 - இலக்கம்1 மற்றும் 2

குறித்த காலப் பகுதியில் இந்தப் பிரிவு பின்வரும் கண்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றது.

i. ‘தேசத்திற்கு மகுடம்’ எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்
ii. தேசிய கமக்காரர் வாரம் (‘ கொவி சத்திய’)
iii. வி.ஆ.கொ.ச. கண்காட்சி
iv. விஞ்ஞான வாரத்திற்கான கண்காட்சி

## நிறுவனசார் சம்பாத்தியங்கள்

வாடகை அடிப்படையில் பயிற்சிக்கும் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கும் ஹெ.வி.ஆ.ப.நி. மாநாட்டு வசதிகள், வதிவிடம் சார்ந்த வசதிகள் என்பவற்றை வழங்குகின்றது. பிரதான கேட்போர்கூடம், மாநாட்டு மண்டபங்கள், விரிவுரை மண்டபங்கள் மற்றும் குழு அறைகள் மாநாட்டு வசதிகளாக வசதிகளில் உள்ளடங்குகின்றன. வதிவிடம் சார்ந்த வசதிகளாக குளிரூட்டல் வசதிகளுடைய 15 தனி மற்றும் இரட்டை அறைகள் இருக்கின்றன. இவற்றை வாடகைக்கு விடுதல் திறைசேரியின் நிதியளிப்புக்கு மேலதிமான ஹெ.வி.ஆ.ப.நி. முக்கிய வருமான மூலமாகக் கருதப்படுகின்றது.

இந்த நிறுவகத்தின் வருமானம் 2010 ஆம் ஆண்டு முதல் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. 2010 ஆம் ஆண்டு இந்த நிறுவகத்தின் வருமான சம்பாத்தியம் 15.5 மில்லியன் ரூபாவாக இருந்தது. இந்த வருமானம் 2014 ஆம் ஆண்டில் 26.03 மில்லியன் ரூபாவாக இருந்தது.

ஊழியர்களின் மனோபாவங்களில் ஏற்பட்ட சாதகமான மாற்றங்கள், வதிவிடம் மற்றும் மாநாடு சார்ந்த வசதிகளிலுள்ள மேம்பாடு, மாநாட்டு மற்றும் ஹோட்டல் வசதிகளுக்காகப் பிரயோகிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் திறமுறைத்திட்டம் என்பன இந்த அதிகரிப்பு தொடர்பில் இனங்காணப்பட்ட காரணங்களாக விளங்குகின்றன. இந்த நிலைமை மேலும் மேம்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் அதிக நிதி சார்ந்த நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கமநல விடயங்கள் பற்றிய ஆராய்ச்சியில் 40 வருட கால அனுபவத்தைக் கொண்டு அக்கறையுடைய தரப்புகளுக்கு மத்தியில் புதிய அறிவை பகிர்ந்து கொள்ளும் வகையில் கமநல விவகாரங்களில் ஒரு அறிவு மைய நிபுணத்துவ நிறுவமாக ஹெ.வி.ஆ.ப.நி. நிறுவகத்தினால் செயலாற்ற முடிகின்றது. ஆதலால் நிறுவகத்தில் காணப்படுகின்ற பௌதீகக் கட்டமைப்பு மேற்குறித்த குறிக்கோளை வலுப்படுத்த இயலுமானதாக இருக்கும். ஹெ.வி.ஆ.ப.நி. நிறுவகத்தில் காணப்படுகின்ற மனித மூலதனத்தை பல்வேறுபட்ட அக்கறையுடைய தரப்புகளுக்கு அறிவைப் பரம்பல் செய்வதற்காகப் பயன்படுத்த முடியும். ஆகவே இந்த நிறுவகம் வெளி நபர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறி மற்றும் வித்தியாசமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை நடத்துவதற்குத்

திட்டமிட்டு வருகின்றது. ஆதலால் ஹோட்டல் மற்றும் மாநாட்டு வசதிகள் கூறப் பட்ட நோக்கங்களின் நிமித்தம் பயன்படுத்தப்படும். எஞ்சிய ஏனைய வசதிகளை வெளிக்களத் தரப்புகளுக்கு வாடகைக்கு விடலாம். It is demarcated that the 40% வீதமான ஹோட்டல் வசதிகளும் மற்றும் 70% வீதமான மாநாட்டு வசதிகளும் தற்பொழுது பயன்படுத்தப்படுவதில்லை என இனங்காணப்பட்டுள்ளன. எனவே இந்த நிறுவகம் ஹோட்டல் மற்றும் மாநாட்டு வசதிகளைக் குறைப்பதற்கான ஒரு சவாலை எதிர்நோக்கி வருகின்றது.

## 2014 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள பதவியணி பற்றிய விபரம்

| | 2013.12.31 இல் உள்ள பதவி நிலவரம் | குறித்த ஆண்டிலுள்ள சேவை முடிவுறுத்தல், பதவி விலகல் | நியமனங்கள் | 2014.12.31 இல் உள்ள பதவி நிலவரம் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 1 | - | - | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் | 1 | 1 | 1 | 1 |
| பிரிவுத் தலைவர்கள் | 5 | - | 1 | 6 |
| ஆராய்ச்சிப் பதவியினர் | 30 | 4 | - | 26 |
| நிருவாகப் பதவியினர் | 8 | 3 | 1 | 6 |
| நூலக சிஷஷ்டப் பதவியினர் | 2 | - | - | 2 |
| தரவு அபிவிருத்தித் தளம் | 0 | - | - | 0 |
| கணனிப் பிரிவு | 1 | - | 1 | 2 |
| வெளியீட்டுப் பிரிவு | 1 | - | 1 | 2 |
| புள்ளிவிபரவியல் பதவியினர் | 24 | 5 | - | 19 |
| தொழில்நுட்பப் பதவியினர் | 1 | 1 | - | 0 |
| எழுதுநர், செயலக மற்றும் இணைந்த தரங்கள் | 47 | 5 | 9 | 51 |
| இயக்குநர் மற்றும் இணைந்த தரங்கள் | 47 | 2 | 5 | 50 |
| மொத்தம் | 168 | 21 | 19 | 166 |

**பதவியணி அபிவிருத்தி**

2014 ஆம் ஆண்டில், இந்த நிறுவகம் பதவியணி அபிவிருத்திற்கு 1.7 மில்லியன் ரூபா நிதியை முதலிட்டுள்ளது. எழுபது ஊழியர்கள் உள்நாட்டுப் பயிற்சிகளைப் பெற்றிருந்தனர். 14 ஊழியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது.

**பின்வரும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பட்டப்பின்படிப்புகளில் ஈடுபட்டனர்.**

திரு டப்ளியூ.எச்.ஏ. சாந்த - பூகோள விவசாய விஞ்ஞானப் பிரிவின் கலாநிதிப் பட்டப்படிப்பு மாணவர், விவசாய உயிர் விஞ்ஞான சார் பட்டப்படிப்புக் கல்லூரி, டோக்கியோ பல்கலைக் கழகம், ஜப்பான்
2011 ஏப்ரல் 12 முதல் 2014 மார்ச் 31 வரை

திருமதி எம்.ரீ. பத்மஜனி - சுற்றாடல் வளப் பொருளியல் பற்றி முதுமானிப் பட்டம், கன்பெரா பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா
2013 சனவரி 07 முதல் 2014 திசம்பர் 31 வரை

திரு எம்.ஏ.சி.எஸ். பண்டார - சுற்றாடல் விஞ்ஞானம் பற்றிய முதுமானிப் பட்டம், மெல்பேர்ன் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா
2014 சனவரி 06 முதல் 2016 சனவரி 07 வரை

**சர்வதேச பயிற்சியில் பங்குபற்றல்**

**பயிற்சிநிகழச்சித்திட்டங்கள்/கருத்தரங்குகள்/வேலையரங்குகள்/ மாநாடுகள்/ கூட்டங்கள் முதலியன**

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி பீ.ஏ.டீ.எஸ். பமுணுஆராச்சி 2014 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 17 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற 'பிரத்தியேக வளர்ச்சிக்கான கிராமியத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பிலான CIRDAP மற்றும் NIRD கூட்டிணைந்த சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினார்.

ஆராய்ச்சி உதவியாளர் திரு எம்.எம். அஹீயர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு என்.பி.ஜி. சமந்த ஆகியோர் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற 'கிராமிய அபிவிருத்திற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (த.தொ.தொ.) பிரயோகம்' என்ற தலைப்பிலான CIRDAP மற்றும் NIRD கூட்டிணைந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார்கள்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு இ.ஏ.சி. பிரியங்கர 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் மே மாதம் 18 ஆம் திகதி வரை சென்னை நகரில் நடைபெற்ற 'ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்கான பச்சை வீட்டு மரக்கறிப் பயிர்ச் செய்கைத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பிலான ஒரு பயிற்சிப் பாடநெறியில் பங்குபற்றினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸ 2014 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முதல் மே மாதம் 28 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற 'தொழில்நுட்ப முகாமைத்துவத்திற்கான வினைத்திறன் வாய்ந்த பதில் ஊடான உணவுப் போஷாக்குப் பாதுகாப்பு உத்தரவாதம்' என்ற தலைப்பிலான CIRDP - NIRD - TERI கூட்டிணைந்த சர்வதேச வேலையரங்கு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார்.

சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு எச்.எம்.ஜே. கே. ஹேரத் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி முதல் யூலை மாதம் 09 ஆம் திகதி வரை பிலிபைனில் நடைபெற்ற 'புவித்-தகவல் முறைமை (பு.த.மு.) தணிப்புப் பிரயோகம் மற்றும் அனர்த்த ஆபத்துக்கள் குறைப்பு முகாமைத்துவம்' என்ற தலைப்பிலான CIRDP - NIRD கூட்டிணைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திரு டப்ளியூ.எச்.டீ. பிரியதர்ஷன மற்றும் திருமதி பீ.ஏ.டீ.எஸ். பமுணுஆராச்சி ஆகியோர் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 08 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 'இலங்கை சிரேஷ்ட அரச ஊழியர்களின்/ஆராய்ச்சியாளர்களின் அறிக்கை எழுதல் மற்றும் வெளியீட்டுத் திறமைகளை விருத்தி செய்தல்' என்ற தலைப்பிலான அவுஸ்திரேலிய விருதுகள் நட்புறவு (AAF) நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார்கள்.

பணிப்பாளர் திரு இ.எம். அபேரத்ன 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை வியற்னாமில் நடைபெற்ற ஹனாய் CMC ளின் சிறந்த செயன்முறைகள்' என்ற தலைப்பிலான சர்வதேச வேலையரங்கிலும் மற்றும் CIRDAP தொழில்நுட்பக் குழுவின் (தொ.கு - 29) 29-வது குழுக் கூட்டத்திலும் பங்குபற்றினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஏ.எம்.எஸ். பெரேரா 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 02 ஆம் திகதி வரை தாய்லாந்து பேங்கொக் நகரில் நடைபெற்ற 4-வது சர்வதேச அரிசி மாநாட்டில் (IRC 2014) (ஆராய்ச்சிப்பத்திர ஆவண சமர்ப்பணம்) பங்குபற்றினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு என்.பி.ஜி. சமந்த 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 01 ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெற்ற 'தாய்லாந்து பேங்கொக் உணவு ஆகுசெலவு பற்றிய பயிற்சிக்கான அழைப்பு மாநாட்டில்' பங்குபற்றினார்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு இ.ஏ.சி. பிரியங்கர 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 02 ஆம் திகதி முதல் திசம்பர் மாதம் 08 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற விவசாய சந்தைப்படுத்தல் தொடர்பான 28-வது தேசிய மாநாட்டில் பங்குபற்றினார்.

மேலதிகப் பணிப்பாளர் திரு ஜே.கே.எம்.டீ. சந்திரசிறி மற்றும் திருமதி எம்.டீ. சுசிலா லூர்த்து ஆகியோர் 2013 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற 'இந்தியா ஹைதராபாத் விவசாய ஆராய்ச்சி குறுங்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினார்கள்.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஐ.கே. எதிரிசிங்க 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெற்ற 'நுண் சிறு நடுத்தர அளவான தொழில்முயற்சி தேசிய நிறுவக SME அணுகுமுறைகள், திறமுறைத்திட்டங்கள்' என்ற தலைப்பிலான பயிற்சிப் பாடநெறியில் பங்குபற்றினார்.

**உள்நாட்டுப் பயிற்சிகளில் பங்குபற்றல் - பதவிநிலை உத்தியோகத்தர்கள்**

1. நூலகர் திருமதி எச்.எம்.ரீ.ஜி.எல். ஹேரத் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இலங்கைக் கொள்கை ஆய்வுகள் நிறுவகத்தில் நடைபெற்ற 'தகவல் முகாமைத்துவ வேலைச்சட்டகம் (IMF) என்ற தலைப்பிலான ஒரு வேலையரங்கில் பங்குபற்றினார்.

2. ஆராய்ச்சி உத்தியோகத்தர் திருமதி ஐ.கே. எதிரிசிங்க 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற 'வாழ்வாதாரம் பற்றிய பகுப்பாய்வு வேலையரங்கு' என்ற ஒரு வேலையரங்கில் பங்குபற்றினார்.

3. கணக்காளர் திரு கே.ரீ.யூ. கம்புறுகொட மற்றும் கணக்கு உத்தியோகத்தர் திருமதி தனுஷி பெரேரா ஆகியோர் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி முதல் 04 ஆம் திகதி வரை இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற 'வருடாந்த பொருட்கள் இருப்புக் கணக்கெடுப்பு மற்றும் அகற்றல் நடைமுறை' என்ற தலைப்பிலான வேலையரங்கில் பங்குபற்றினார்கள்.

4. தலைவர்/SDP கலாநிதி எம்.எஸ். சேனாநாயக்க, பகுப்பாய்வு நிகழ்ச்சித் திட்டமிடலாளர் திரு எம்.டீ.எல். செனரத், திருமதி பீ.ஏ.டீ.எஸ். பமுணு ஆராச்சி, திருமதி கே.எஸ்.என். பெரேரா, திருமதி கே.பி.ஐ. பிரியதர்ஷனி, திருமதி ஜி.ஜி.த எல்.டப்ளியூ. சமரசிங்க (04 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்) ஆகியோர் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தில் நடைபெற்ற 'தே.வி.ம. மூல ஆராய்ச்சிக் கட்டுரைகள் மீளாய்வு' என்ற வேலையரங்கில் பங்குபற்றினார்கள்.

5. நூலகர் திருமதி எச்.எம்.ரீ.ஜி.எல். ஹேரத், உதவி நூலகர் திரு கே.வை.பி. வீரரத்ன ஆகியோர் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி இலங்கை நூலக சங்கத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டிற்கான நூலகத் தகவல் விஞ்ஞானம் (NACLIS) என்ற தேசிய மாநாட்டில் பங்குபற்றினார்கள்.

6. சி.ஆ.உ. திருமதி எம்.டீ. சுசிலா லூர்த்து, சி.ஆ.உ. திருமதி சாகரிகா ஹிட்டி ஹமு, ஆ.உ. திருமதி கே.பி.ஐ. பிரியதர்ஷனி, ஆ.உ. திருமதி சுபாஷினி பெரேரா, ஆ.உ. திருமதி இந்திக்கா எதிரிசிங்க, ஆ.உ. திருமதி பி.ஜே. சம்பிக்கா, ஆ.உ. திருமதி ரசிகா விஜேசிங்க, ஆ.உ. திரு ஐ.பி.பி.எம். விஜேசிங்க, ஆ.உ. திருமதி மாலதி ரம்பொடகெதர, ஆ.உ. திரு எச்.ஜி.சி. ஜயசூரிய ஆகியோர் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை தேசிய விஞ்ஞான மன்றத்தில் நடைபெற்ற 'சமூக விஞ்ஞானங்கள் ஆராய்ச்சி மற்றும் பரந்த ஆராய்ச்சி முன்மொழிவுகள் அபிவிருத்தி' என்ற தலைப்பிலான வேலையரங்கில் பங்குபற்றினார்கள்.

7. தலைவர்/MFPA திருமதி சி.பி. ஹத்துருசிங்க, ஆ.உ. திரு என்.பி.ஜி. சமந்த, ஆ.உ. திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத் ஆகியோர் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதியிலிருந்து வ/ப தொலைக் கல்விக் கற்கை நிலையத்தில் நடைபெற்ற உணவுப் பாதுகப்பு மற்றும் அபிவிருத்தி வீடியோ மாநாட்டில் பங்குபற்றினார்கள்.

8. ஆ.உ. திருமதி ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர, சி.ஆ.உ. கலாநிதி ரன்ஜித் விக்ரமசிங்க, ஆ.உ. திருமதி ஐ.கே. எதிரிசிங்க, ஆ.உ. திருமதி பி.ஏ. ஜே. சம்பிக்கா, ஆ.உ. திரு ஐ.பி.பி.எம். விஜேசிங்க ஆகியோர் 2014 ஆம் ஆண்டு 11 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை வி.ஆ.கொ.ச. அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இ.வி.ஆ.கொ.ச. சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றினார்கள்.

9. புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் திரு கே.பி.கே.ஐ.யூ. பெர்னாந்து, புள்ளி விபரவியல் உதவியாளர் திரு எம்.என்.எம். நளீம் ஆகியோர் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'எண் நிலைத் தரவுப் பகுப்பாய்வு பற்றிய ஒரு குறுங்காலப் பாடநெறியில் பங்குபற்றினார்கள்.

10. பணிப்பாளருக்கான அ.செ. திருமதி ஏ.ஐ. பத்திரண 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து CETRAC இல் நடைபெற்ற 'நிருவாக நடைமுறைகள் மற்றும் மனித உரிமைகள் முகாமைத்துவம்' என்ற வேலையரங்கில் பங்குபற்றினார்.

11. திரு என்.பி.ஜி. சமந்த, திருமதி பி.ஏ.ஜே. சம்பிக்கா, திருமதி ஏ.எம்.எஸ். பெரேரா (03 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்) ஆகியோர் 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் விவசாயப் பொருளியல் சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட பயிற்சி வேலையரங்கில் பங்குபற்றினார்கள்.

12. திரு பி.சி.ஜே. த சில்வா, திரு எச்.எம்.ஜே.கே. ஹேரத், திருமதி கீதானி சமரசிங்க, திருமதி ருவினி விதானபத்திரண (04 ஆராய்ச்சி உத்தியோகத்தர்) 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியிலிருந்து தேசிய விஞ்ஞான மன்றத்தில் நடைபெற்ற 'ஆராய்ச்சி ஒழுக்கவியல்' என்ற பெயரில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த வேலையரங்கில் பங்குபற்றினார்கள்.

13. 16 ஊழியர்கள் 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 12 ஆம் திகதியிலிருந்து வி.ஆ.கொ.ச. அலுவலக வளாகத்தில் நடைபெற்ற 'கொள்கைத் தொடர்பாடல்' வேலையரங்கில் பங்குபற்றினார்கள்.

14. 2014 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து நடைபெற்ற 'சான்று அடிப்படையிலான ஆராய்ச்சி: செயன்முறையினுள் கொள்கைக் குறிக்கோள் எனும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில்' 14 ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

**ஹெக்டர்கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்**
**2014 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிதி நிலை சார்ந்த கூற்று**

| சொத்துக்கள் | குறிப்புகள் | இலங்கை ரூபாவில் | 2013 திசம்பர் 31 வெளிப்படுத்தப்பட்டுள்ளது |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 2 | 7,793,755.93 | 2,372,380.71 |
| கிடைக்கக்கூடிய கடன்கள் | 3 | 21,517,920.19 | 22,731,924.08 |
| கிடைக்கக்கூடிய வைப்புகள் | 4 | 773,795.97 | 772,887.78 |
| பொருட்பதிவேடுகள் | 5 | 4,536,001.56 | 4,903,677.91 |
| கொடுப்பனவுகள் | 6 | 173,642.65 | 204,158.26 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 7 | 155,920.00 | 13,561.32 |
| | | **34,951,036.30** | **30,998,590.06** |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| நிதி சார்ந்த ஏனைய சொத்துக்கள் | 8 | 5,497,130.79 | 4,964,396.35 |
| உட்கட்டமைப்பு வசதிகள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 9 | 65,628,113.77 | 37,573,081.01 |
| காணியும் கட்டிடங்களும் | 10 | 27,846,572.28 | 26,530,368.82 |
| | | **98,971,816.84** | **69,067,846.18** |
| மொத்தச் சொத்துக்கள் | | 133,922,853.14 | 100,066,436.24 |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கொடுமதிகள் | 11 | 9,454,972.84 | 10,386,014.59 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி - வீட்டுக் கடன்கள் | 12 | - | 321,514.60 |
| | | **9,454,972.84** | **10,707,529.19** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் நன்மைகள் | 13 | 36,088,145.00 | 36,254,872.50 |
| | | **36,088,145.00** | **36,254,872.50** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **45,543,117.84** | **46,962,401.69** |
| **தேறிய சொத்துக்கள்** | | **88,379,735.30** | **53,104,034.55** |
| **தேறிய சொத்துக்கள்/ஒப்புரவுகள்** | | | |
| அரசாங்க மானியம் - மூலதனம் | 14 | 160,092,835.19 | 153,617,505.19 |
| அமைச்சு பங்களித்த மூலதனம் | | 2,342,835.00 | 2,342,835.00 |
| ஒதுக்கீடுகள் | 15 | 43,062,687.28 | 37,824,679.28 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | | 35,003,646.00 | |
| ஊக்குவிப்பு பயிற்சி நிதி | 16 | 533,323.82 | 533,323.82 |
| திரண்ட மிகைகள்/(துண்டுவிழுகைகள்) | 17 | (152,655,591.99) | (141,214,308.74) |
| | | | |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்/ஒப்புரவுகள்** | | **88,379,735.30** | **53,104,034.55** |

இந்த நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கும், அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் (நான்கு வகை நியமங்கள்), 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

.........................

**ஜே.பி. நாணயக்கார**
**உதவிக் கணக்காளர்**
2015 மார்ச் 25 ஆம் திகதி

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்கும் பொறுப்பு பணிப்பாளர்கள் சபைக்குரியதாகும். ஆகையால் பணிப்பாளர்கள் சபையின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் கையொப்பமிடப்பட்டுள்ளது.

.............................................................. ..............................................

இ.எம். அபேரத்ன
பணிப்பாளர்

பீ. விஜேரத்ன
தலைவர்

**ஹெக்டர்கொப்பேகடு விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்**

**2014 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று**

| **வருமானம்** | குறிப்புகள் | | **2013 திசம்பர் 31**<br>**இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| அரசாங்க திறைசேரியிலிருந்து வரும் நிதி | | 124,782,000.00 | 121,834,803.00 |
| ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகளுக்காக வெளித் தரப்புகளிடமிருந்து கிடைக்கும் நிதி | | 3,547,757.21 | 4,157,500.77 |
| ஏனைய வருமானம் | 18 | 31,346,417.36 | 31,511,888.82 |
| **மொத்த வருமானம்** | | **159,676,174.57** | **157,504,192.59** |
| **செலவுகள்** | | | |
| வேதனங்கள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள் | 19 | (102,418,163.60) | (108,201,003.95) |
| ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகள் | | (15,791,268.14) | (20,612,304.28) |
| ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகளுக்காக வெளித் தரப்புகளிடமிருந்து கிடைக்கும் நிதி | | (3,547,757.21) | (1,294,955.27) |
| தேய்மானம் | 9, 10 | (17,430,152.30) | (12,545,598.64) |
| ஏனைய செலவுகள் | 20 | (31,870,481.60) | (28,817,118.91) |
| தீர்க்கப்படாத அதிக/(குறைந்த) பற்று - நிதியேற்பாடு | | 50,583.49 | (97,405.08) |
| வங்கிக் கட்டணங்கள் | | (80,900.00) | (96,452.98) |
| **மொத்தச் செலவுகள்** | | **(171,088,139.36)** | **(171,664,839.11)** |
| **குறித்த காலப்பகுதிக்கான துண்டுவிழுகை** | | **(11,411,964.79)** | **(14,160,646.52)** |

.................................. .......................... ..........................

**தலைவர்** **உதவிக் கணக்காளர்**

### ஹெக்டர்கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம்
### 2014 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | குறிப்புகள் | இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது | |
|---|---|---|---|
| **இயக்கச்செயற்பாடுகளில் பயன்பட்டுள்ள காசுப்பாய்ச்சல்** | | | |
| குறித்த ஆண்டிற்கான தேறிய துண்டுவிழுகை | | | (11,411,964.79) |
| **பின்வருவனவற்றுக்கான சீராக்கல்:** | | | |
| தேய்மானம் | | 17,430,152.30 | |
| தேய்மான சீராக்கல் | | (29,330,113.03) | |
| பணிக்கொடைக்கான நிதியேற்பாடு | | 4,180,890.00 | |
| முதலீட்டு வருமானம் | | 553,029.12 | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | (29,318.46) | (7,195,360.07) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாடு சார்ந்த நட்டம்** | | | (18,607,324.86) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | | |
| கிடைக்கவேண்டிய தொகை | | 1,214,003.89 | |
| பொருட்பதிவேடுகள் | | 367,676.35 | |
| முற்-கொடுப்பனவுகள் | | 30,515.61 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | | (142,358.68) | |
| செலுத்தவேண்டிய தொகை | | (931,041.75) | |
| அரச ஈட்டு வங்கி - வீட்டுக் கடன்கள் | | (321,514.60) | 217,280.82 |
| **இயக்க சார் செயற்பாடுகளில் பயன்பட்டுள்ள காசு** | | | **(18,390,044.04)** |
| **பணிக்கொடைக் கொடுப்பனவு** | | | (4,347,617.50) |
| **இயக்கச்செயற்பாடுகளில் பயன்பட்டுள்ள தேறிய காசு** | | | **(22,737,661.54)** |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்** | | | |
| கிடைக்கவேண்டிய தொகை | | (908.19) | |
| நிதி சார்ந்த ஏனைய சொத்துக்கள் | | (532,734.44) | |
| உட்கட்டமைப்பு வசதிகள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | | (15,143,868.61) | |
| காணியும் கட்டிடங்களும் | | (2,327,406.88) | |
| முதலீட்டு வருமானம் | | (553,029.12) | (18,557,947.24) |
| **முதலீடு சார்ந்த செயற்பாடுகளில் பயன்பட்டுள்ள தேறிய காசுப்பாய்ச்சல்** | | | **(41,295,608.78)** |
| **நிதியீட்டல் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்** | | | |
| அரசாங்க மானியம் - கிடைத்த மூலதனம் | | 6,475,330.00 | |
| ஒதுக்கீடுகள் | | 5,238,008.00 | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | | 35,003,646.00 | |
| **நிதியீட்டல் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப்பாய்ச்சல்** | | | **46,716,984.00** |
| **காசு மற்றும் காசு ஒப்புரவுகளிலுள்ள தேறிய அதிகரிப்பு** | | | 5,421,375.22 |
| **குறித்த கால ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவும்** | I | | 2,372,380.71 |
| **குறித்த கால இறுதியிலிருந்த காசும் காசு ஒப்புரவும்** | II | | **7,793,755.93** |
| **குறிப்புகள்:** | | | |
| **ககாசும் காசு ஒப்புரவும்** | | 1 | 11 |
| | | 01.01.2014 | 31.12.2014 |
| வங்கியிலுள்ள காசு | | 2,362,380.71 | 7,783,755.93 |
| கையிலுள்ள காசு | | 10,000.00 | 10,000.00 |
| **மொத்தம்** | | **2,372,380.71** | **7,793,755.93** |

**ஹெக்டர்கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம்**

**2014 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களிலுள்ள/ஒப்புரவுகளிலுள்ள காசுப்பாய்ச்சல் கூற்று**

**இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது**

| | அரசாங்க மானியம் - மூலதனம் | அமைச்சிலிருந்து கிடைத்த மூலதனப் பங்களிப்பு | ஒதுக்கீடுகள் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் | ஊக்குவிப்பு, பயிற்சி நிதி | திரண்ட மிகை/ (துண்டுவிழுகை) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2014 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 153,617,505.19 | 2,342,835.00 | 37,824,679.28 | | 533,323.82 | (141,214,308.74) | 53,104,034.55 |
| **முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்** | | | | | | | |
| கடன் மற்றும் நிலையான வைப்புக்கள் மீது கிடைக்க வேண்டிய வட்டி | | | | | | (26,857.43) | (26,857.43) |
| விடுதி, கேட்போர்கூடம் சார்ந்த கிடைக்க வேண்டிய வருமானம் | | | | | | (177,605.00) | (177,605.00) |
| முன்னைய ஆண்டுகளுக்கான தேய்மான சீராக்கல் | | | | | | 175,143.97 | 175,143.97 |
| 2014 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள சீராக்கப்பட்ட நிலுவை | 153,617,505.19 | 2,342,835.00 | 37,824,679.28 | | 533,323.82 | (141,243,627.20) | 53,074,716.09 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு | | | | 35,003,646.00 | | | 35,003,646.00 |
| திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி | 6,475,330.00 | | | | | | 6,475,330.00 |
| உணவு வேளை ஆகுசெலவுக் கருத்திட்டத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் | | | 1,438,008.00 | | | | 1,438,008.00 |
| FAO இல் இருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனம் | | | 3,800,000.00 | | | | 3,800,000.00 |
| வருமானமும் செலவினமும் | | | | | | (11,411,964.79) | (11,411,964.79) |
| 2014 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **160,092,835.19** | **2,342,835.00** | **43,062,687.28** | **35,003,646.00** | **533,323.82** | **(152,655,591.99)** | **88,379,735.30** |

**2014 திசம்பா 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

**1. கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1.1 பொது**

நிதிக் கூற்றுக்கள் ஏற்புடைய SLPSAS கணக்கீட்டு நியமங்களுக்கு (நான்கு நியமங்கள்) இணங்க வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளன. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்பட்டன.

**1.2. சொத்துக்களின் விலைமதிப்பீடு**

**(i). சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

a) தேய்மானம் - சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன ஐந்தொகையில் ஆகுசெலவு குறைந்த திரண்ட தேய்மானத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆண்டொன்றுக்கு பின்வரும் வீதங்களில் நேர்நிரல் முறையில் தேய்மானத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | ஆண்டிற்கு 2 ½ % |
| உபகரணங்கள்/தளபாடம் | ஆண்டிற்கு 10% |
| கணனி | ஆண்டிற்கு 20% |
| நலன்புரி சாதனங்கள் | ஆண்டிற்கு 10% |
| புத்தகங்கள் | ஆண்டிற்கு 10% |
| வாகனங்கள் | ஆண்டிற்கு 20% |

முழுமையான ஆண்டுத் தேய்மானம் கொள்வனவு ஆண்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(ii) பற்றுக்கள்

பற்றுக்கள் உண்மையாக கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட தொகைகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தீராத மற்றும் கிடையாது என்ற சந்தேகத்திலுள்ள பற்றுக்களுக்கு கணக்குகளில் போதிய ஒரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையிடும் திகதியில் 4% பற்று நிலுவையில் சந்தேகத்திற்கான பற்றுக்கள் தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(iii) இருப்புக்கள்

நுகர்வுப் பொருட்களின் இருப்புகள் ஆகுசெலவில் விலைமதிப்பிடப் பட்டுள்ளன. ஏனைய இருப்புகள் குறைந்த ஆகுசெலவிலும் மற்றும் மாறக் கூடிய தேறிய பெறுமானத்திலும் விலை மதிக்கப்பட்டுள்ளன. இருப்புகளின் ஆகுசெலவு FIFO முறையைப் பயன்படுத்தி மதிப்பிடப் பட்டுள்ளது.

1.3. பணிக்கொடை

1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், செலுத்த வேண்டிய பணிக்கொடைக்கான நிதியேற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில் பணிக்கொடை சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி ஆகியவற்றின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது.

1.4. நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று

நிதி சார்ந்த செயலாற்றுகை பற்றிய கூற்று:

a. நிறுவகத்தின் நாளாந்த செயற்பாடுகளிலும் அற்றும் அரச கலை வினைத் திறனில் சொத்துக்கள், பொறித்தொகுதிகள் உபகரணங்கள் என்பற்றின் பராமரிப்பிலும் எதிர்பார்க்கப்பட்ட சகல எதிர்கால செலவுகள், தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்கள் என்பவற்றுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட பின்னரும்,

b. குறித்த ஆண்டில் செய்யப்பட்ட அனைத்து செலவுகளும் ஒழுங்குபடுத்தப் பட்ட பின்னரும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**1.5. போக்குவரத்து மற்றும் அச்சீட்டுச் செலவுகள்**

போக்குவரத்து மற்றும் அச்சீட்டுச் செலவுகள் சகல பிரிவுகளுக்கும் மற்றும் ஆராய்ச்சி, பயிற்சி விடயங்களுக்கும் கணக்கீடுசெய்யப்பட வேண்டியுள்ளது. ஆகையால், அந்த செலவு அங்கீகரிக்கப்பட்ட வீதம் ஒன்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்தச் செலவு அத்தகைய பொருத்தமான செலவினத்திற்கு இடையில் ஒரு விகிதமாக சீராக்கப்பட்டுள்ளது.

2014 திசம்பர் 31

2 காசும் காசு ஒப்புரவுகளும்

| | இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது | |
|---|---|---|
| கையிலுள்ள காசு | 10,000.00 | 10,000.00 |
| வங்கியிலுள்ள காசு - க/கு இல. 2323292 | 735,015.44 | 629,378.52 |
| வங்கியிலுள்ள காசு - க/கு இல. 2323293 | 1,929,973.28 | 372,454.42 |
| வங்கியிலுள்ள காசு - க/கு இல. 2323315 | 538,787.59 | 15,593.83 |
| வங்கியிலுள்ள காசு - க/கு இல. 2323317 | 4,579,979.62 | 1,344,953.94 |
| | **7,793,755.93** | **2,372,380.71** |

3 கிடைக்கவேண்டியவை

| | | |
|---|---|---|
| **ஊழியர்களிடமிருந்து வரவேண்டிய கடன்கள்** | | |
| வீட்டுக் கடன் | 2,401,069.05 | 2,840,661.63 |
| திரண்ட கடன் | 17,274,495.96 | 17,711,544.76 |
| விஷேட முற்பணக்கொடுப்பனவு | 4,945.47 | 40,495.47 |
| விழா முற்பணக்கொடுப்பனவு | 154,929.05 | 175,429.05 |
| கிடைக்கவேண்டிய கேட்போர்கூட வருமானம் | 411,412.50 | 547,107.50 |
| கிடைக்கவேண்டிய விடுதி வருமானம் | 107,301.00 | 846,301.25 |
| இடம்பெயர்ந்த நபர்களிடமிருந்து வரவேண்டிய தொகை | 6,723.32 | 6,723.32 |
| புலமைப்பரிசில் நன்மைபெறுநர்கள் பெற்ற கடன் | 20,005,859.97 | 20,325,859.97 |
| | **40,366,736.32** | **42,494,122.95** |
| **ஏனைய கிடைக்கவேண்டிய கடன்கள்** | | |
| கிடைக்கவேண்டிய முதலீட்டு வருமானம் | 184,667.18 | 279,932.01 |
| சேவையில்-பயிற்சி நிறுவகம் | 6,806.38 | 6,806.38 |
| கே என் யூ குணசேக்கர | 12,100.00 | 12,100.00 |
| கமத்தொழில் அமைச்சு | 85,527.16 | 85,527.16 |
| பதவி விலகிச்சென்றவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் | 558,866.21 | 568,622.71 |
| சரசவி புத்தக சாலை | 4,272.25 | 4,272.25 |
| கடன்கள் - நலன்புரிச் சங்கம் | | 99.00 |
| தேர்தல் திணைக்களத்திலிருந்து கிடைக்கவேண்டிய கடன் | 54,592.24 | |
| நானாவிதக் கடன்கள் | 123,332.65 | 123,332.65 |
| யாழ்ப்பாணக் களப்பு வழங்கிய உரியல் சுற்றாடல் சேவைகளின் பெறுமானம் மற்றும் இந்தக் களப்பு சுற்றுப்புறக் கிராமவாசிகளுக்கு அளித்த பங்களிப்பு - R-481 | 1,023,459.78 | - |
| R - 439- புதுருவகல பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | | 430,132.44 |
| | **2,053,623.85** | **1,510,824.60** |
| | | |
| | **42,420,360.17** | **44,004,947.55** |
| **கழிக்குக:** | | |
| தீராத மற்றும் நிச்சயமற்ற கடன்களுக்கான ஏற்பாடுகள் | (896,580.01) | (947,163.50) |
| புலமைப்பரிசில்களுக்கான ஏற்பாடு | (20,005,859.97) | (20,325,859.97) |
| | **21,517,920.19** | **22,731,924.08** |

4 கிடைக்கவேண்டியவை

| | | |
|---|---|---|
| **வைப்புக்கள்** | | |
| நிலையான வைப்பு - உணவு வழங்குநர் | 70,000.00 | 70,000.00 |
| நிலையான - காசாளர் | 10,725.97 | 9,817.78 |
| நானாவித - ஸ்ரீ லங்கா ரெலிகம் (இன்டர்நெட் வசதி) | 3,125.00 | 3,125.00 |
| நானாவித - தபால் மாஅதிபர் | 24,945.00 | 24,945.00 |
| நானாவித - கொழும்பு கேஸ் என்ட் வோட்டர் கம்பனி | 4,750.00 | 4,750.00 |
| நானாவித - நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு சபை | 500.00 | 500.00 |
| நானாவித - செல்டெல் லங்கா லிமிற்றட் நிறுவனம் | 3,500.00 | 3,500.00 |
| நானாவித - இலங்கை மின்சார சபை | 406,250.00 | 406,250.00 |
| நானாவித - எம்ஜி சாம்சன்ஸ் என்ட் சன்ஸ் | 250,000.00 | 250,000.00 |
| | **773,795.97** | **772,887.78** |

2014 திசம்பர் 31

இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

5 பொருட்பதிவேடுகள்

| | | |
|---|---|---|
| வெளியீடுகளும் சஞ்சிகைகளும் | 2,393,087.00 | 2,367,712.00 |
| நுகர்வுப்பொருட்கள் | 1,647,184.06 | 1,878,724.91 |
| விற்பனை நிலையம் | 495,730.50 | 657,241.00 |
| | **4,536,001.56** | **4,903,677.91** |

6 கொடுமதிகள்

| | | |
|---|---|---|
| வாகனக் காப்புறுதி | 149,826.71 | 180,239.22 |
| கட்டிடக் காப்புறுதி | 23,815.94 | 23,919.04 |
| | **173,642.65** | **204,158.26** |

7 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| கொள்வனவு முற்பணம் | 100,920.00 | 13,561.32 |
| முற்பணம் | 55,000.00 | - |
| | **155,920.00** | **13,561.32** |

8 ஏனைய நிதி சார்ந்த சொத்துக்கள்

| | | |
|---|---|---|
| கடன் வைப்புகள் | 1,500.00 | 1,500.00 |
| அரசஈட்டு முதலீட்டு வங்கியிலுள்ள நிலையான வைப்புகள் | 5,336,889.16 | 4,962,896.35 |
| அரசஈட்டு முதலீட்டு வீடமைப்புத் திட்டத்திலுள்ள நிலையான வைப்புகள் | 158,741.63 | |
| | **5,497,130.79** | **4,964,396.35** |

கொப்பேகடுவ விவாசய ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம்
ம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

உட்கட்டமைப்பு வசதிகள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

ஆதனங்களின் தேய்மான விபரங்கள் அட்டவணை - 2014 திசம்பர் 31

இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது

| விபரம் | 2014.01.01 இல் உள்ள செலவு | 2014 ஆம் ஆணடின் சேர்வுகள்/(அகற்றல்) மீள்மதிப்பீடு | 2014.12.31 இல் உள்ள மொத்த செலவு | 2014.01.01 இல் உள்ள தேய்மான கணக்கு | சீராக்கல்கள் | 2014 ஆம் ஆண்டிற்கான தேய்மான ஏற்பாடு | 2014.12.31 முடிவிலுள்ள தேய்மான கணக்கு | 2014.12.31 இல் உள்ள தேறிய பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| உபகரணம்/தளபாடம் | 42,108,144.33 | 2,101,382.17 | 44,209,526.50 | 29,369,366.05 | | 2,515,763.76 | 31,885,129.81 | 12,324,396.69 |
| கணனிகள் நிறுவை | 23,241,024.58 | 2,660,508.00 | 25,901,532.58 | 19,870,246.02 | (175,143.97) | 1,672,629.80 | 21,367,731.85 | 4,533,800.73 |
| மோட்டார் வாகனங்கள் | 48,655,488.06 | 9,677,176.94 | 58,332,665.00 | 29,276,631.06 | (29,154,969.06) | 11,642,200.00 | 11,763,862.00 | 46,568,803.00 |
| புத்தகங்கள் | 11,568,405.96 | 704,801.50 | 12,273,207.46 | 9,483,739.79 | | 588,355.32 | 10,072,095.11 | 2,201,112.35 |
| நலன்புரி உபகரணங்கள் | 3,734.55 | | 3,734.55 | 3,733.55 | | | 3,733.55 | 1.00 |
| மொத்தம் | **125,576,797.48** | **15,143,868.61** | **140,720,666.09** | **88,003,716.47** | **(29,330,113.03)** | **16,418,948.88** | **75,092,552.32** | **65,628,113.77** |

காணியும் கட்டிடங்களும்

ஆதனங்களின் தேய்மான விபரங்கள் அட்டவணை - 2014 திசம்பர் 31

| விபரம் | 2014.01.01 இல் உள்ள செலவு | 2014 ஆம் ஆணடின் சேர்வுகள்/(அகற்றல்) மீள்மதிப்பீடு | 2014.12.31 இல் உள்ள மொத்த செலவு | 2014.01.01 இல் உள்ள தேய்மான கணக்கு | சீராக்கல்கள் | 2014 ஆம் ஆண்டிற்கான தேய்மான ஏற்பாடு | 2014.12.31 முடிவிலுள்ள தேய்மான கணக்கு | 2014.12.31 இல் உள்ள தேறிய பெறுமானம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| காணி | 1,716,667.00 | | 1,716,667.00 | | | | | 1,716,667.00 |
| கட்டிடங்கள் | 38,120,729.87 | 2,327,406.88 | 40,448,136.75 | 13,307,028.05 | | 1,011,203.42 | 14,318,231.47 | 26,129,905.28 |
| | **39,837,396.87** | **2,327,406.88** | **42,164,803.75** | **13,307,028.05** | | **1,011,203.42** | **14,318,231.47** | **27,846,572.28** |

பெல்வெஹர சுற்றுலா விடுதி 2011.12.12 ஆம் திகதி 30 வருட கால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது.

**கொடுமதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 11 | திரண்ட செலவுகள் | 7,335,757.19 | 7,292,518.51 |
| | மீளளிக்கப்படக்கூடிய வர்த்தகர் வைப்பு | 124,462.20 | 121,462.20 |
| | மீளளிக்கக்கூடிய சிற்றுண்டி வைப்பு - உபதிஸ்ஸ பரணமான | 50,000.00 | 50,000.00 |
| | சம்பள முற்பணம் | 10,232.91 | 6,683.41 |
| | செலுத்தப்படாத செலவினம் | 179,728.18 | 219,331.65 |
| | தொழிலில் இருந்து விலகிய ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய தொகை | 177,907.92 | 2,135,720.64 |
| | ஊழியர்கள் மற்றும் விடுதி வைப்புகள் | 13,084.50 | 13,084.50 |
| | செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் | 11,975.00 | 7,900.00 |
| | பிடித்துவைத்தல்கள் | 85,087.41 | 85,087.41 |
| | கடனாளிகள் | 833,300.00 | 300,195.16 |
| | மொபிட்டல் ப்ரைவட் லிமிற்றட் | 56,013.96 | 126,546.11 |
| | கிடைத்த முற்பணம் - விடுதி | | 13,685.00 |
| | கிடைத்த முற்பணம் - கேட்போர்கூடம் | | 13,800.00 |
| | நலன்புரிச் சங்கம் | 4,321.00 | - |
| | **கருத்திட்டங்களுக்கு எதிரான கடன்கள்** | | |
| | R-470 இலங்கையிலுள்ள ஆகக்குறைந்த உணவுவேளை ஆகுசெலவு | 573,102.57 | |
| | | **9,454,972.84** | **10,386,014.59** |

**அரசஈட்டு முதலீட்டு வங்கி - வீட்டுக் கடன்கள்**

| | | | |
|---|---|---|---|
| 12 | சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | | - |
| | சீராக்கல்கள் | | 321,514.60 |
| | திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | - | **321,514.60** |

2013 ஆம் ஆண்டில் ஒரு கடன் நிலுவையாக இருந்த அரசஈட்டு முதலீட்டு வங்கி வீட்டுக் கடன் தொகை ஊழியர்களிடம் இருந்து கடன் தவணைக்கட்டணங்கள் அறவிடப்பட்டதால் 2014.12.31 ஆம் திகதியில் ஒரு பற்று நிலுவையாக மாறியுள்ளது.

**ஊழியர் நன்மைகள்**

| | | | |
|---|---|---|---|
| 13 | சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 36,254,872.50 | 30,596,875.00 |
| | குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள கொடுப்பனவுகள் | 4,347,617.50 | (3,863,612.50) |
| | குறித்த ஆண்டிற்கான நிதியேற்பாடு | 4,180,890.00 | 9,521,610.00 |
| | திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **36,088,145.00** | **36,254,872.50** |

**அரசாங்க மானியம் - மூலதனம்**

| | | | |
|---|---|---|---|
| 14 | சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 153,617,505.19 | 164,638,986.00 |
| | குறித்த ஆண்டு காலப்பகுதியிலுள்ள மூலதனப் பங்களிப்பு | 6,475,330.00 | 5,462,300.00 |
| | ஊழியர் அபிவிருத்திச் செலவுக் கழிவுகள் | | (16,483,780.81) |
| | திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **160,092,835.19** | **153,617,505.19** |

**ஒதுக்கீடுகள்**

| | | | |
|---|---|---|---|
| 15 | சேமிப்புகளிலிருந்து வரும் பங்களிப்புகள் | 1,102,372.79 | 1,102,372.79 |
| | கருத்திட்ட மூலதன நிதி | 20,254,150.59 | 15,016,142.59 |
| | மூலதன ஒதுக்கீடு | 3,242,284.40 | 3,242,284.40 |
| | கருத்திட்டம் சார்ந்த பொது ஒதுக்கீடு | 16,301,977.47 | 16,301,977.47 |
| | ஊக்குவிப்பு நிதி - நிறுவனப் பங்கு | 2,161,902.03 | 2,161,902.03 |
| | | 43,062,687.28 | 37,824,679.28 |

**ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நிதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 16 | ஊகக்குவிப்பு நிதி | 137,061.91 | 137,061.91 |
| | பயிற்சி நிதி - கருத்திட்டங்கள் | 396,261.91 | 396,261.91 |
| | | **533,323.82** | **533,323.82** |

**திரண்ட துண்டுவிழுகைகள்**

| | | | |
|---|---|---|---|
| 17 | சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 141,214,308.74 | 129,620,097.62 |
| | முன்னைய ஆண்டுகளுக்கான தேய்மான சீராக்கல் | (175,143.97) | 3,922,454.92 |
| | முன்னைய ஆண்டு சீராக்கல் - கடன், நிலையான வைப்புகள் மீது கிடைக்க வேண்டிய வட்டி | 26,857.43 | 265,285.64 |
| | முன்னைய ஆண்டு சீராக்கல் - விடுதி, கேட்போர்கூடம் ஆகியன சார்ந்த கிடைக்க வேண்டிய வருமானம் | 177,605.00 | |
| | ஊழியர் அபிவிருத்தி செலவுக் கழிவுகள் | | (4,323,710.10) |
| | ஊழியர் அபிவிருத்தி செலவுக் கழிவுகள் | | 4,973,706.21 |
| | விடுதியின் கேட்போர்கூட வருமானம் - 2012 | | (763,165.00) |
| | முன்னைய ஆண்டுகளில் நிதியிடப்பட்ட கருத்திட்ட வருமானம் | | (6,641,007.07) |
| | திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள வருமானம் மீதான செலவினம் | 11,411,964.79 | 14,160,646.52 |
| | திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **152,655,591.99** | **141,214,308.74** |

**ஏனைய வருமதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 18 | விடுதி அறவீடுகள் | 12,410,375.33 | 14,008,822.48 |
| | மாநாட்டு மண்டப அறவீடுகள் | 12,948,035.75 | 11,665,940.85 |
| | மொபிட்டல் வாடிக்கையாளர் சேவை வருமானம் | 70,532.15 | 77,874.97 |
| | வெளியீடுகளின் விற்பனை | 133,330.50 | 127,769.50 |
| | முதலீடுகள் மீதான வட்டி | 553,029.12 | 714,245.36 |
| | ஊழியர் கடன் மீதான வட்டி | 739,034.40 | 838,873.08 |
| | கருத்திட்டங்களிலிருந்து வரும் மீண்டெழும் பங்களிப்பு | 3,510,935.03 | 2,786,853.43 |
| | புலமைப்பரிசில் பெறுநர் கடன்கள் | 320,000.00 | 743,311.44 |
| | பங்களா அறவீடுகளும் அறை வாடகையும் | | 24,765.17 |
| | பெல்வெஹர அறை வாடகை | 62,600.00 | 29,100.00 |
| | கணனி வருமானம் | 254.00 | 1,380.00 |
| | விலைமனுக் கட்டண அறவீடுகள் | 9,750.00 | 4,500.00 |
| | உசாதுணை வருமானம் | 328,000.00 | |
| | கணனி ஆகுசெலவு மற்றும் ஊழியர் நேரம் | 94,628.93 | |
| | ஏனைய வருமமானம் | 165,912.15 | 465,528.04 |
| | தரவுகள் சேகரிப்பு வருமானம் | | 22,924.50 |
| | | **31,346,417.36** | **31,511,888.82** |

**வேதனங்கள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள்**

| | | | |
|---|---|---|---|
| | சம்பளம் - நிரந்தர ஊழியர்கள் | 44,290,101.04 | 45,221,763.47 |
| 19 | சம்பளம் - ஆராய்ச்சியாளர்கள் | 6,407,127.05 | 5,938,411.32 |
| | வாழ்க்கைப்படிக் கொடுப்பனவு, விஷேட கொடுப்பனவு, ஏனைய கொடுப்பனவு | 32,686,338.66 | 27,129,676.63 |
| | ஊ.சே.நி. (EPF) | 10,134,549.69 | 9,434,120.13 |
| | ஊ.ந.நி. (ETF) | 2,026,883.45 | 1,906,603.99 |
| | ஊ.சே.நி. (EPF) நிலுவைகள் | | 5,334,215.88 |
| | ஊ.ந.நி. (ETF) நிலுவைகள் | | 640,105.90 |
| | மேலதிகநேரக் கொடுப்பனவு | 2,692,273.71 | 3,045,857.80 |
| | விடுமுறைநாள் கொடுப்பனவு | | 28,638.83 |
| | பணிக்கொடைக் கொடுப்பனவு | 4,180,890.00 | 9,521,610.00 |
| | | **102,418,163.60** | **108,201,003.95** |

ஏனைய செலவுகள்

| | | | |
|---|---|---|---|
| 20 | உள்நாட்டு வாழ்க்கைப்படி மற்றும் உள்நாட்டுப் போக்குவரத்துச் செலவுகள் | 1,526,975.25 | 1,452,324.01 |
| | வெளிநாட்டுப் பிரயாணக் கொடுப்பனவு | 327,619.60 | 618,382.00 |
| | காகிதாதிகளும் அலுவலகப் பொருட்களும் | 1,502,335.37 | 898,207.21 |
| | எரிபொருளும் உராய்வுநீக்கி எண்ணெய்களும் | 2,161,253.33 | 2,404,132.70 |
| | சீருடைகள் | 295,242.68 | 329,529.89 |
| | வாகனங்களின் பழுதுபார்ப்புகள் | 1,054,975.85 | 1,110,854.90 |
| | கட்டிடங்களின் பராமரிப்பு | 1,132,705.25 | 1,060,824.88 |
| | பொறித்தொகுதி, இயந்திராதிகள், உபகரணங்கள் பழுதுபார்ப்பு | 1,973,887.88 | 1,628,852.40 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | 1,468,786.30 | 1,508,317.23 |
| | மின்சாரக் கட்டணம் | 5,679,232.06 | 5,551,447.57 |
| | தண்ணீர் கட்டணங்கள் | 834,980.43 | 851,155.07 |
| | உள்ளூர் அதிகார சபைகளுக்கான வரிகள் | 315,601.20 | 274,888.80 |
| | தபால் கட்டணங்கள் | 401,070.00 | 402,500.00 |
| | போக்குவரத்துச் செலவு | 428,770.00 | 378,505.00 |
| | செலுத்தத் தவறியவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கை சார் செலவுகள் | 12,000.00 | 24,000.00 |
| | வாகனங்களுக்கான தொழில்நுட்ப சார் முற்பணம் | 120,000.00 | 60,000.00 |
| | நிர்மாணத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனை சார் செலவு | 37,500.00 | |
| | செய்திப்பத்திரிகைகள் | 271,060.00 | 330,806.00 |
| | அனுமதிப்பத்திர மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் | 889,379.10 | 918,589.79 |
| | பாதுகாப்புக் கட்டணங்கள் | 2,133,107.20 | 1,918,592.23 |
| | துப்புரவேற்பாடு சார்ந்த சேவைக்ள் | 705,650.00 | 633,520.00 |
| | சலவை சார்ந்த சேவைகள் | 445,515.00 | 435,456.87 |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | 330,000.00 | 330,000.00 |
| | மருத்துவக் கட்டணங்கள் | 557,040.48 | 41,579.80 |
| | சிற்றுண்டிச்சாலைக் கட்டணங்கள் | 141,340.00 | 216,228.00 |
| | நானாவிதச் செலவுகள் - ஏனைய செலவுகள் | 357,389.76 | 442,357.08 |
| | சட்டமுறையான கட்டணங்கள் | 34,970.00 | 182,695.00 |
| | நலன்புரி சேவைகள் | 336,670.00 | 373,655.00 |
| | வினம்பரம் | 1,365,759.99 | 1,582,940.80 |
| | நேர்முகப் பரீட்சைக் கட்டணங்கள் | 22,000.00 | 36,000.00 |
| | பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களின் ஊதியம் | 582,500.00 | 336,000.00 |
| | அச்சீடும் வெளியீடுகளும் | 1,294,956.31 | 756,929.00 |
| | பொழுதுபோக்கு சேவைகள் | 5,841.00 | 11,841.06 |
| | தகவல்கள் பரப்பல் | 1,140,305.00 | 439,115.00 |
| | விற்பனை ஆகுசெலவு - வெளியீடுகள் | 133,330.50 | 107,477.50 |
| | நிறுத்திவைத்தல் வரி | 48,124.89 | |
| | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தொடர்பான செலவு | 63,600.00 | 68,400.00 |
| | ஊழியர் அபிவிருத்தி | 1,739,007.17 | 1,101,014.12 |
| | | 31,870,481.60 | 28,817,118.91 |

**தற்காலிகச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

**புலமைப்பரிசில் பற்றுக்கள்**

**கலாநிதி ஆர்.பீ. சேனகஆராச்சி**

21 நீதிமன்றத் தீர்ப்பு 2006 ஆம் ஆண்டில் ஹெ.வி.ஆ.ப.நி. இற்கு சார்பாக வழங்கப்பட்டது. பிரதிவாதி மேன்முறையீடு செய்துள்ளார். மேன்முறையீட்டு வழங்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

**கலாநிதி ஜி. விக்ரமசிங்க**

மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்குமாறு 2010.11.24 ஆம் திகதி நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பிரதிவாதி மேன்முறையீடு செய்துள்ளார். (வழக்கு நிறைவுபெறவில்லை)

**திருமதி கே. அத்துகோரள**

நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அழைப்பாணை விடுக்கப்படவில்லை. முழுமையான முறிப் பெறுமானம் பிணையுத்தரவாதத் தரப்புகளிடமிருந்து மீளறவிடப்பட்டுள்ளது.
நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அழைப்பாணை விடுக்கப்படவில்லை. 5000.00 ரூபா மாதாந்தத் தவணைக்கட்டணத்தின் அடிப்படையில் பிணையுத்தரவாதியான திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸவிடம் இருந்து அறவிடப்பட்டு வருகின்றது.

**திரு பி.டீ.ஜே. ஆனந்த**

நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அழைப்பாணை விடுக்கப்படவில்லை. முழுமையான முறிப் பெறுமானம் பிணையுத்தரவாதத் தரப்பிடம் இருந்து மீளறவிடப்பட்டுள்ளது.

**கலாநிதி பி.ஐ. துடாவே**

மீளச்செலுத்த வேண்டிய ரூ. 2, 445,547.46 தொகை 2007.11.06 ஆம் திகதி நீதிமன்ற முன்னிலையில் செலுத்தித் தீர்க்கப்பட்டது. (மாதாந்தத் தவணைக்கட்டண் அடிப்படையில் மீளச்செலுத்தப்பட்டது. ரூ.92,539.87 தொகை மீளறவிடப் படவுள்ளது).

**கலாநிதி டப்ளியூ.ஜி. சோமரத்ன**

மாதாந்தத் தவணைக்கட்டண அடிப்படையில் செலுத்த வேண்டிய 10,000.00 ரூபா தொகை பணிப்பாளர்கள் சபை முன்னிலையில் செலுத்தித்தீர்க்கப்பட்டது.

**திருமதி ஏ.சி.கே. சேபால**

மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னிலையில் (2013 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள மீளச்செலுத்த வேண்டிய ரூ.100,000.00) ரூ.50,000.00 தொகையை காலாண்டு தவணைக்கட்டண அடிப்படையில் மீளச்செலுத்துவதற்கு உடன்பட்டார்.

**திரு எம்.எஸ். கோவிசங்கர்**

வழக்கைத்தாக்கல் செய்யும் பொருட்டு சட்டமா அதிபரின் திணைக்களத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (முறிப் பெறுமானம் ரூ.50,000.00 என்ற மாதாந்தத் தவணைக்கட்டண அடிப்படையில் பிணையுத்தரவாதியான திரு ஆர்.எல்.என். ஜயதிஸ்ஸவிடமிருந்து அறவிடப்பட்டு வருகின்றது).

**திருமதி எஸ்.டீ. அபேரத்ன**

தற்போதைய முகவரி தெரியாததால் நீதிமன்ற வழக்கு பிற்போடப்பட்டிருக்கின்றது. கடனை செலுத்தத் தவறியவர்களின் பட்டியலிருந்து பெயரை தேடிப்பெற்றுக்கொள்ளுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

**கலாநிதி யூ.எல்.ஜே.ஜே. பெரேரா**

**திரு பி.டீ.ஆர். குமாரசிறி**

02 பிணையுத்தரவாதிகளுக்கு எதிரான வழக்கில் 2011 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 02 ஆம் திகதி நீதிமன்றம் ஹெ.வி.ஆ.ப.நி. சார்பாக தீர்ப்பை வழங்கியது.

**ஹெ.வி.ஆ.ப.நி. எதிரான வழக்குகள்**

**திருமதி சிராணி விஜேசிங்க**

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக திருமதி சிராணி விஜேசிங்க மேன்முறையீடு செய்த வழக்கு கொழும்பு மீயுயர் நீதிமன்றத்தில் நிறைவுபெறாத நிலையிலுள்ளது. (வழக்கு இலக்கம் SC/SPL/LA/175/2013)

**வாகன விபத்து - திரு ஜே. சந்திரவங்ச**

வாகன (வாகன இலக்கம் 53-3287) விபத்து தொடர்பான வழக்கு (வழக்கு இலக்கம் 4269M) மொனராகலை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

**ஊ.சே.நி., பணிக்கொடைக் கொடுப்பனவு நிலுவைகள்**

பதவி விலகிவிட்டு ஓய்வுபெற்ற அதிகமான ஊழியர்கள் தமது ஊ.சே.நி., பணிக்கொடைக் கொடுப்பனவு நிலுவைகள் தொடர்பில் ஹெ.வி.ஆ.ப.நி. எதிராக தொழிலாளர் செயலக அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } எல்பீ/ஈ/எச்ஏஆர்ரீஐ/01/14/05
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி }
Date

2015 யூலை 30

தலைவர்,

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 05 ஆம் இலக்க ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 24 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)ஏ ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மூலதன மானியங்கள் காலக்கழிவு செய்தல் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்தொன்று தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடிய நிலைமையில் இருந்தால் அதன் நியாயமான பெறுமதியை காண்பிப்பதற்காக அச்சொத்தினை மீள் மதிப்பீடு செய்ய முடியுமான போதிலும், மெய்மையாய்வுச் சபையினால் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்படும் 08 மோட்டார் வாகனங்கள் ரூபா 1,081,000 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் அதற்காக ரூபா 216,000 தொகை பெறுமானத்தேய்வாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டினுள் காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் என்பன பிரதிபலிக்கப்படும் வகையில் செயற்பாடுகளை இனங்கண்டு காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) காசு அசைவுக்குரியதல்லாத வாகன மீள் மதிப்பீட்டு மிகையான ரூபா 35,003,646 தொகை காசுப் பெறுவனவொன்றாகவும் அவ்வாகனத்தின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 29,330,113 தொகையான பெறுமதி காசு வெளிப்பாய்ச்சலாகவும் கருதப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது செயற்திட்டமொன்றிலிருந்து கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 5,238,008 தொகை பெறுமதியான கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் காசுப் பெறுவனவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த 03 கணக்கு மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 854,272 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 20,345,302 மற்றும் ரூபா 1,079,446 தொகையாக இருந்ததுடன், அம்மீதிகளை தீர்ப்பதற்கு சுழற்சி வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவைகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2011 பெப்ரவரி 21 ஆம் திகதிய 449 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02(அ) (உ) பந்தி | நிறுவனத்தினுள் தகைமையுடைய நபர் ஒருவர் இல்லாதவிடத்து வெளிநபரொருவரினால் வழங்கப்படும் சேவைகளுக்காக செலுத்தக்கூடிய உயர்ந்தபட்ச கொடுப்பனவு ரூபா 30,000 ஆக இருந்த போதிலும், ஒரு நபருக்கு ரூபா 40,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக அரச நிதித் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தி

அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த 02 வாகனங்கள் மற்றும் அமைச்சிற்குச் சொந்தமான 05 வாகனங்கள் என்பவற்றிற்காக நிறுவகத்தினால் ரூபா 484,768 ஆன எரிபொருள் செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 11,411,965 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 14,160,647 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,748,682 ஆன அதிகரிப்பிற்காக திறைசேரி மானியங்கள் ரூபா 2,947,197 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதியாகவும் பொருளாகவும் பல்வேறு தரப்பினர்களிடமிருந்தான பெறுவனவுகள் மூலதன ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த மீதி ரூபா 45,938,855 ஆக இருந்தது. இந்த மானியங்களிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் அதன் பெறுமதிகளை உரியவாறு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மொத்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் எண்ணிக்கை 125 ஆக இருந்ததுடன், அதில் 51 செயற்திட்டங்களின் அறிக்கைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. 63 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படாமல் இருந்ததுடன், 04 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தன. 07 புதிய செயற்திட்டங்களும் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளை பகிரங்கப்படுத்துதல் தாமதத்தின்

அடிப்படையில் ஆராய்ச்சிகளிலிருந்து கிடைக்கும் பிரதிபலன்கள் நாளதுவரையாக சமூகத்திற்கு வழங்கும் நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னாள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 92,090 பெறுமதியான புகைப்படக்கருவி மற்றும் டொங்கல் என்பன நிறுவகத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் புலமைப் பரிசில்களுக்காக உத்தியோகத்தர்களை தெரிவுசெய்யும் போது நிறுவகத்தினால் முறையான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் இருந்ததுடன், இரண்டு உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட அழைப்பின் அடிப்படையில் வெளிநாடு செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அமைய மற்றும் இணைந்த படிகளாக ரூபா 177,767 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 பயனற்ற செலவினம்

2013 செப்தம்பர் மாதத்தின் போது உத்தரவாதச் சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளாமல் மோட்டார் வாகனமொன்று பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் அதில் தவறு இருந்ததன் காரணமாக மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 84,200 தொகை செலவு செய்ய நேர்ந்தமையால் முதலில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 66,458 தொகையான செலவினம் பயனற்ற செலவினமாக இருந்தது.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 235 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 173 ஆனமையால் வெற்றிடமான ஊழியர்களின் எண்ணிக்கை 62 ஆக இருந்தது.

(ஆ) நிறுவகத்தின் பதிவாளர் பதவி 2011 சனவரி மாதம் முதல் கணக்காய்வுத் திகதியான 2015 மே 31 வரை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வெற்றிடமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதத்திலிருந்து வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரொருவர் பதில் கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 105,957 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதீடு மீளாய்வாண்டின் நவம்பர் 30 இல் உள்ளபடியான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு, மீண்டும் திசெம்பர் 08 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் காரணமாக பாதீடு ஆண்டின் நிதி முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு கருவியொன்றாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளைப் பயின்ற உடன்படிக்கை மீறிய 10 புலமைப்பரிசில் பெறுனர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன், அதில் 06 புலமைப்பரிசில் பெறுனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,539,799 தொகையை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது நிறுவக தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதி நிர்வாகம்
(ஆ) ஆராய்ச்சி செயற்திட்டம்
(இ) சொத்துக்கள் நிருவாகம்
(ஈ) பதவியணியினர் நிருவாகம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீது கருத்துக்களை வெளிப்படுத்துதல்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பண மற்றும் பொருள் வடிவில் பல தரப்புகளிடமிருந்து இந்த நிறுவகத்திற்குக் (1975) கிடைத்த வருமதிகள் மூலதன ஒதுக்கங்கள் எனக் கணக்கீடு செய்யப் பட்டிருந்தன. எனினும், மூலதன ஒதுக்கங்களைப் பெற்ற தரப்புகளை இனங்காண அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் மூலதன மானியத்தை கணக்குகளில் இணக்கல் செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(a) 2015 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் நேரத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

(b) (i), (ii) காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்றைத் தயாரிக்கும் போது இந்தக் குறைபாடுகள் மீண்டும் நிகழாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.3 இணக்கல் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

**நுகர்வுப் பொருட்கள் - வித்தியாசம் ரூ.78,471/- ஆகும்.**

இது முன்பிருந்த களஞ்சியக் காப்பாளர் திரு என்.எஸ். விக்ரமஆராய்ச்சி அவர்களின் காலத்தில் அறிக்கையிடப்பட்டிருந்த குறைபாடாகும். இந்தத் தொகை அவரது இறுதி நிதி அறிக்கையிலிருந்து மீளறவிடப்பட்டது.

**விற்பனை அறை - வித்தியாசம் ரூ.62, 793/- ஆகும்.**

விற்பனை அறையில் தற்பொழுது கொடுக்கல்வாங்கல்கள் உரிய முறையில் நிகழ்கின்றன. முன்னைய குறைபாடுகள் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

**விடுதி மற்றும் மாநாட்டு மண்டப வருமானம்**

குறித்த நிலுவை நிதிக் கூற்றுக்கு இணங்க சரியானதாகும். விடுதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகளில் பல வித்தியாசங்கள் காணப்பட்டன. உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 2.3 செலுத்த வேண்டிய மற்றும் கிடைக்க வேண்டிய கணக்குகள்

கடன் வழங்குநர் மற்றும் கடன் பெறுநர் ஆகிய தரப்பிடமிருந்து வரவேண்டிய தொகைகள் 5 வருட காலமாக நிலுவையாக இருந்து வருகின்றன. புலமைப்பரிசில்களைப் பெறுநர்களின் பற்றுத் தொகை ரூ. 20,005,859.97/- எனப் பதியப்பட்டுள்ளது. இந்த நிலுவைகளை மீளறவிடுவதற்கு எமது நிறுவகம் சரியான ஒரு முறையியலை நடைமுறைப்படுத்தியுள்ளது.

**2.4 சட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் ஒவ்வாதிருந்த சந்தர்ப்பங்கள்**

(a) 449 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஒரு வெளி நபரினால் வழங்கப்படும் சேவைகளுக்குச் செலுத்தக்கூடிய ஆகக்கூடிய கொடுப்பனவு ரூ.30,000/- ஆகும். கொடுப்பனவைப் பெறும் தரப்பு இந்த நிறுவகத்திற்கு மேலதிகத் தொகையை மீளச் செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது. கொடுப்பனவைப் பெறும் தரப்பு குறித்த தொகையைச் செலுத்தத் தவறினால் பொறுப்புடைய தரப்புகளிடமிருந்து குறித்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(b) முன்னாள் கமத்தொழில் அமைச்சரின் அறிவுரைகளின் கீழ், அவரது அந்தரங்கச் செயலாளர் எழுத்திலான ஒரு வேண்டுகோளை விடுத்ததன் பேரில் எரிபொருளை விநியோகிப்பதற்கு முன்னாள் பணிப்பாளருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எரிபொருள் கட்டளைகள் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நிறுவகத்தின் வாகனங்களுக்கு மாத்திரமே விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஊதியங்கள், சம்பளங்கள் மற்றும் தொழிலாளர் நன்மைகள் என்பவற்றுக்கான செலவுகள் குறைந்திருந்தமை குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் துண்டுவிழுகையில் குறைவு ஏற்பட்டமைக்கு முக்கிய காரணமாகும்.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பண மற்றும் பொருள் வடிவில் பல தரப்புகளிடமிருந்து இந்த நிறுவகத்திற்குக் (1975) கிடைத்த வருமதிகள் மூலதன ஒதுக்கங்கள் எனக் கணக்கீடு

செய்யப்பட்டிருந்தன. எனினும், மூலதன ஒதுக்கங்களைப் பெற்ற தரப்புகளை இனங்காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் மூலதன மானியத்தை கணக்குகளில் இணக்கல் செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

## 4. இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

மீளாய்வு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | ஆய்வுகள் எண்ணிக்கை | வெளியிடப் பட்டவை | உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதும் மற்றும் வெளியிடப்படாததுமான அறிக்கைகள் | கைவிடப் பட்டவை | வெளியிடுவதில் தாமதிக்கப் பட்டவையும் ஆனால் வெளியிடுவதற்கு திட்டமிடப் பட்டவையும் |
|---|---|---|---|---|---|
| 2009 | 10 | 07 | 03(R365,371,373) | - | - |
| 2010 | 15 | 11 | 01 (R383) | 02 (385,388) | 01 (R 376) |
| 2011 | 17 | 09 | 05(R 399,400,402,404,405) | 01 (R404) | 02 (R 395,396) |
| 2012 | 38 | 13 | 17 (R406,407,410,414,417,418,419,425,426,427,428,430,431,434,436,439,440) | - | 08 (R409,422,424,432,437,438,441,442) |
| 2013 | 26 | 11 | 01 (R 467) | - | 14 |
| 2014 | 19 | - | 04 (R 470,477,479,481) | 01(R 475) | 14 |

2010-2012 ஆம் ஆண்டிற்கான உரிய ஆவணங்களின்படி கைவிடப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரம்

| ஆண்டு | கருத்திட்டத்தின் இலக்கம் | தொகை |
|---|---|---|
| 2010 | R 385 | செலவு ஏற்படவில்லை.... |
| | R 388 | ரூ.131,032.92 |
| 2011 | R 401 | செலவு ஏற்படவில்லை.... |
| 2012 | கைவிடப்பட்ட கருத்திட்டங்கள் ஏதுமில்லை. | |

## 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

(a) முன்னாள் பணிப்பாளருக்கு கெமராவுக்கும், டொங்கலுக்கும் என வழங்கப்பட்ட ரூ.92,000/- தொகை அவரது இறுதி நிதிக் கூற்றிலிருந்து அறவிடப்பட்டுள்ளது.

(b) இந்த நிறுவகம் அலுவலர்களை வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கும் தேர்ந்தெடுக்கும் போது சரியான ஒரு முறையியலைப் பின்பற்றியே தேர்ந்தெடுக்கின்றது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நிறுவகத்திற்கும் மற்றும் உரிய அலுவலர்களுக்கும் கிடைக்கும் நன்மைகளைக் கருத்திற்கொண்டு நேர்முகப் பரீட்சைகளின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு கோவையிலும் உரிய அலுவலரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பணிப்பாளரின் எழுத்திலான அங்கீகார ஆவணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகையால், குறித்த இரண்டு அலுவலர்களுக்கும் பணிப்பாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அலுவலர்களுக்கு ரூ.177,767/- தொகை இடைநேர் மற்றும் இணைந்த கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

ஆராய்ச்சியாளர்கள் ஒன்லைன் அல்லது வேறு ஏதாவது தனிப்பட்ட வழிகளில் தமது ஆராய்ச்சி முடிவுகளை சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொதுவாக இது சகல ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கும் திறந்த ஒரு வாய்ப்பாக அமைகின்றது. இந்த நிறுவகம் ஒரு ஆராய்ச்சி அடிப்படையிலான நிறுவனம் என்பதால் ஆராய்ச்சிப் பதவியணியினருக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

ஆராய்ச்சி உத்தியோகத்தர் வெற்றிகரமான ஒரு ஆராய்ச்சி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் மற்றும் அந்த அறிக்கை சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குமான அவரது திறமையைக் கொண்டு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆதலால் ஏனைய ஊழியர்களுக்கு இதனால் அநியாயம் நிகழ்வதற்கான சாத்தியமில்லை.

## 4.3 பயனற்ற செலவினம்

இந்த மோட்டார் வாகனம் அதன் டேர்போ சார்ஜரைப் பழுதுபார்க்கும் பொருட்டு இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. முதலாவது பழுதுபார்ப்பின் பின்னர் உத்தரவாத காலப் பகுதியில் இரண்டு தடவைகள் பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பழுதுபார்ப்புகளின் பின்னரும் அந்த வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் அது மீண்டும் ஜேர்மன் தொழில்நுடபப் பயிற்சி நிறுவகத்திற்கு அனுப்பி

வைக்கப்பட்டது. அந்த வாகனம் நீண்டகாலமாக பழுதுபார்க்கப்படாமல் இருந்ததால் அது மீண்டும் இந்த நிறுவகத்திற்கு எடுத்துவரப்பட்டது. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிவுரைகளின் பிரகாரம், பின்னர் அந்த வாகனம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வாகனம் திருத்தும் கராஜுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பழுதுபார்க்கப்பட்டது.

### 4.4 ஆளணி நிருவாகம்

(a) தேவையானளவு ஊழியர்கள் தற்பொழுது பணியாற்றுகின்றார்கள். தேவைக்கு ஏற்ப வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

(b) பதிவாளர் பதவியில் நிலவிய வெற்றிடத்தை நிரப்பும் பொருட்டு செய்திப்பத்திரிகையில் ஒரு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு இணங்கவே எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 5. பொறுப்புக்கூறலும் நல்லாட்சியும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

வரவுசெலவுத்திட்டத்தின் செலவின வரையறையினுள் உண்மையான செலவுகளை சமாளிப்பதற்கு இந்த நிறுவகம் இயன்ற முயற்சிகளை எடுத்துள்ளது.

### 5.2 கணக்காய்வுப் பந்திகளுக்குப் பதிலளிக்கப்படாமை

முறிகளின் நிபந்தனைகளை மீறி வெளிநாடுகளில் பட்டப்பின்படிப்புப் பாடநெறிகளைப் பின்பற்றிய புலமைப்பரிசில் பெறும் 10 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பற்றுத் தொகைகளின் மீளறவீடுகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளின் நிலமைகள் என்பவற்றை ஆராய்ந்து நிலமைகளை எம்மால் பின்வருமாறு விளக்கலாம்.

01. புலமைப்பரில்களைப் பெறும் 06 நபர்களின் தற்போதைய முகவரிகளைத் தேடிக்கண்டுகொள்வது கடினமாக இருப்பதால், வழக்குகள் நிறைவு பெறாத நிலையிலுள்ளன. எனினும், 06 கடனாளிகளிடமிருந்து அறவிட வேண்டிய தொகைகள் ஏற்கெனவே அவர்களின் பிணையுத்தரவாதத் தரப்புகளிடமிருந்து அறவிடப்பட்டுள்ளன. ஏனைய இரண்டு நபர்களிடமிருந்து வரவேண்டிய கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

02. புலமைப்பரிசில்களைப் பெறும் 04 நபர்கள் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்புகள் இந்த நிறுவகத்தின் சார்பாக ஏற்கெனவே கிடைத்துள்ளன. இவர்களில் ஒருவர் உடன்பாட்டின் பேரில் கடன் தொகையை மீளச்செலுத்தி வருகின்றார். எனினும், அந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக உரிய தரப்புகளினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த மனுக்கள் தற்பொழுது விசாரிக்கப்பட்டு வருகின்றன.

அதற்கு இணங்க, ரூ.19,832,413.13 தொகையொன்று 2015.04.30 ஆம் திகதியில் 10 கடனாளிகளிடமிருந்தும் அறவிடப்படவுள்ளது. ரூ.8,539,799 தொகையை அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது.

குறித்த நபர்களின் தற்போதைய முகவரிகளைக் கண்டறிந்து கடன் தொகைகளை அறவிடும் பொருட்டு இந்த நிறுவகம் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(i) உரிய பிணையுத்தரவாதத் தரப்புகளிடமிருந்து அறவிடுதல்.

(ii) குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல்.

(iii) அவர்கள் தொடர்பான விபரங்களை உரிய பிரதேச செயலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளல்.

முறிகளிலுள்ள நிபந்தனைகளை மீறிய புலமைப்பரிசில்களைப் பெறும் 06 நபர்களின் தற்போதைய முகவரிகளைக் கண்டறிவதில் கஷ்டம் என்பதால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. ஆகையால், இவர்களுடன் தொடர்புகொண்டு விசாரிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு இணங்க, புலமைப்பரிசில்களைப் பெறும் 06 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகைகளிலிருந்து கூறப்பட்ட அந்த நிச்சயமற்ற தொகையானது புலமைப்பரிசில்களைப் பெறும் அந்த 06 நபர்களிடமிருந்து அல்ல ஆனால் அது புலமைப்பரிசில்களைப் பெறும் 10 நபர்களிடமிருந்து அறவிட வேண்டியது எனத் திருத்தப்படுதல் வேண்டும்.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

### ஆளணி நிருவாகம்

இந்த நிறுவகத்தின் செயலாற்றுகை சார்ந்த குறிக்கோள்களை அடையும் பொருட்டு, வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

நிதிக் கட்டுப்பாடு

நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் சரியான கட்டுப்பாட்டு முறையியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு இணங்க செயற்படவுள்ளோம்.

ஆதனங்கள் கட்டுப்பாடு

சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், சொத்துக்களைப் பேணிப் பராமரித்தல் மற்றும் அந்தச் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகிய அம்சங்களில் கட்டுப்பாட்டு முறையியல்கள் நடைமுறையிலுள்ளன.

ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

ஒரு ஆராய்ச்சி அறிக்கையை வெளியிடுவதற்கு நீண்டகாலம் எடுப்பது ஒரு பாரிய குறைபாடாகும். இந்த விடயம் கணக்காய்வின் மூல ஆராய்ச்சி தொடர்பில் கவனத்தில் கொண்டுவரப்பட்டது. இதனால், கொள்கை ஆக்குநர்களுக்கு அந்த ஆராய்ச்சி அறிக்கைகள் உரிய நேரத்தில் கிடைக்கச் செய்யப்படாததால் அவர்களால் கொள்கை சார்ந்த தீர்மானங்களை எடுக்க முடியாமல் போவதாகக் கூறப்படுகின்றது. பல காரணங்களின் நிமித்தம் வெளியிடப்படாத ஆராய்ச்சி அறிக்கைகள் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ளன. இந்தத் தவறு மீண்டும் நிகழாமலிருப்பதற்கு தற்பொழுது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வு வட்டங்களுக்குப் புறம்பாக, குறித்த ஆராய்ச்சி அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் முக்கியமான சமகால ஆய்வுகளின் சிபாரிசுகள் மற்றும் முடிவுகள் தொடர்பில் உரிய நிறுவனங்களை விழிப்பூட்டும் முகமாக வேலையரங்குகளும் மற்றும் கலந்துரையாடல்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதற்காக கொள்கை பற்றிய நேர்காணலும் மேற்கொள்ளப்படுகின்றது. கணக்காய்வு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நிறுவகத்தில் ஆராய்ச்சிப் பயிற்சிச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுகின்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பற்றிய குழுக்களின் கூட்டங்கள் குறைந்த அளவில் நடத்தப்பட்டமையே கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட மற்றுமொரு குறைபாட்டு விடயமாகும். இந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி பற்றிய குழு தற்பொழுது வலுப்படுத்தப்பட்டு வருகின்றது. அருகிலுள்ள பல்கலைக்கழகங்களிலிருந்து அதிகமான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் உறுப்பினர்களின் பங்கேற்பை அதிகரிக்கும் பொருட்டு அதிகமான உறுப்பினர்களை உள்ளீர்க்கும் வகையில் இந்தக் குழு மறுசீரமைக்கப்பட்டும் வருகின்றது. கூட்டங்களை நடத்துவதைப் பார்க்கிலும், ஆராய்ச்சி அறிக்கைகளின்

இறுதி நகலைத் தயாரிப்பதில் அந்த அறிக்கைகளை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் உறுப்பினர்களிடமிருந்து தொடர்ச்சியான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.